REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්

வரு. 90 இல. 39 | Tuesday 15, February, 2022 | 16 பக்கங்கள் | 30/-




உணவுப்பொருள், மருந்துவகை கொள்வனவுக்கு

## இந்தியாவிடமிருந்து மேலும் ஒரு பில்லியன் டொலர் கடனுதவி

### நிதியமைச்சர் பசில் விரைவில் இந்தியா பயணம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கைச்சாத்தை மேற்கொள்வதற்காக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ விரைவில் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெளிநாட்டமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க ஒரு மில்லியன் டொலர் நிதியை 06

ஊடகவியலாளர் சமுதித்த வீடு மீது தாக்குதல்;

## துரித விசாரணை நடத்துமாறு IGP க்கு அமைச்சர் டலஸ் பணிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

தொலைக்காட்சி ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் கல்கிஸ்ஸ பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழ் மூன்று 06



## வன்முறையற்ற உலகுக்கான அபிப்பிராயமே உலக அமைதி

### கொரிய அமைதிக்கான மாநாட்டில் ஷிரந்தி உரை

உலக அமைதி என்பது வன்முறையற்ற உலகிற்கான அபிப்பிராயம் என 'உலக அமைதி மாநாடு 2022' (கொரிய தீபகற்பத்தின் அமைதிக்கான மாநாடு) சனிக்கிழமை (12) உரையாற்றிய பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ தெரிவித்தார்.



உலகளாவிய அமைதி சம்மேளனத்தின் அழைப்பிற்கு ஏற்ப காணொளி தொழில்நுட்பம் ஊடாக தென்கொரியாவின் சியோலில் நடைபெறும் 06

# ஜெனீவாவில் நீதி கிட்டும் என்பதில் எமக்கு உறுதி

### மாநாட்டில் பெரு நம்பிக்கையுடன் கலந்து கொள்வோம்



> இலங்கையின் நட்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்ற எப்போதுமே நாம் தயாராக உள்ளோம்

**ஷம்ஸ் பாஹிம்**

ஜெனீவா மாநாட்டில் நீதி கிடைக்கும் என்ற பெரும் நம்பிக்கையுடன் அதில் கலந்து கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்., இலங்கையுடன் நட்புறவுடன் செயல்படும் சர்வதேச நாடுகளுடன் இணைந்து பணியாற்ற எப்போதும் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வு பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சல் பெசலட் இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறார். 06

# ஊடகவியலாளர் சமுதித்த வீட்டின் மீது தாக்குதல்



### இனந்தெரியாத குழுவினரால் அதிகாலை சம்பவம்

சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நேற்று (14) காலை இனந்தெரியாத குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 2.10 மணியளவில் பிலியந்தலை கேம்பிரிட்ஜ் கோர்ட் வீட்டுத் தொகுதிக்கு பிரவேசித்த நான்கு பேர் கொண்ட குழுவினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஊடகவியலாளர் சமுதிரசத சமரவிக்ரம தெரிவித்தார்.

வெள்ளை சிற்றூர்ந்தொன்றில் வந்த குழுவினர், குடியிருப்பின் பிரதான நுழைவாயிலை பலவந்தமாக திறந்து, அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை துப்பாக்கியை காட்டி மிரட்டியதாக நேரில் கண்ட சாட்சியத்தின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. தாக்குதல் 06



எரிபொருள் விலை அதிகரிப்பா?

## விலை சூத்திர பத்திரம் அடுத்த அமைச்சரவையில்!

### அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு



எரிபொருளின் விலையை அதிகரிப்பது குறித்து இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. எரிபொருள் விலை சூத்திரம் தொடர்பிலான அமைச்சரவை பத்திரம் அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என வலுசக்தி அமைச்சர் 06

## மின்சார சபைக்கு இந்தியாவிலிருந்து எரிபொருள் பெறல்

இலங்கை மின்சார சபைக்கு நேரடியாக எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக இந்திய அரசாங்கம் மற்றும் IOC உடன் இலங்கை மின்சார சபை இரு சுற்று பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ளதாக மின்சார சபையின் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான ஏ.ஆர். நவமணி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த பேச்சுவார்தை நிறைவடைந்தாலும் இந்தியாவின் முடிவிற்காக காத்திருப்பதாகவும் 06

## EPF வரி அறவீடு தொடர்பான விவகாரம்

EMPLOYEES' PROVIDENT FUND

### அமைச்சரவையில் விரிவாக ஆராய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஊழியர் சேமலாப நிதியிலிருந்து வரி அறவிடுவது தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் அது தொடர்பில் நேற்று அமைச்சரவையில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் சர்ச்சைக்குரிய விவாதங்கள் நடைபெற்று வரும் நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளான 06

## பிம்ஸ்டெக் மாநாடு இம்முறை இலங்கையில்

ஜெய்சங்கர் அடுத்த மாதம் வருகிறார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் எதிர்வரும் மார்ச் 06

இராஜதந்திரம், இருதரப்பு உறவு;

## 2021இல் சிறந்த நபராக ஓமான் தூதுவர்



### அமீர் அஜ்வத் தேர்ந்தெடுப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

பிரபல மாதாந்த வணிக மற்றும் செய்தி இதழான உலக வளர்ச்சி மன்ற இதழ், ஓமான் சுல்தானேற்றுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத்தை இராஜதந்திரம் மற்றும் 06



## உக்ரேனில் இலங்கையர் தொடர்பில் அவதானம்

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உக்ரேனில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலையையடுத்து அங்கு வசிக்கும் இலங்கையர்கள் தொடர்பில் தொடர்ச்சியான அவதானத்தை செலுத்தி வருவதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, அவசர நிலைமைகள் ஏற்படுமானால் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான 06

## சீமெந்துக்கான தட்டுப்பாடு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது

### அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன



தற்சமயம் சந்தையில் சீமெந்திற்கான தட்டுப்பாடு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல், கோதுமை மா போன்ற பொருட்களுக்கான தட்டுப்பாடு விரைவில் நீக்கப்படும் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித்த 06

## வரி நிவாரணமா விலை அதிகரிப்பா?

CPC நிதியமைச்சிடம் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எரிபொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் நிவாரணம் வழங்குதல் 06



## உலகில் 41 கோடி பேருக்கு கொவிட்

ஆய்வு ஒன்று உறுதி செய்தது 03



## காலி கோட்டை பீரங்கிகள் சுற்றுலா பயணிகளால் சேதம்

பல மாதிரி பீரங்கிகள் நொருங்கிய நிலையில் 03



## O/L சித்தியடையாத மாணவர்களுக்கும் அரச வேலைவாய்ப்பு

03

இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள

## 31 தமிழக மீனவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்

### பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் அவசர கோரிக்கை



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 41 தமிழக மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து 06

## 2300 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

### விரைவாக விடுவிக்க நிதியமைச்சு ஏற்பாடு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்கிய 2300 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் விடுவிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் 06

## ஊருக்குள் புகுந்த யானை; கடை, வீடுகளை தாக்கி சேதம்



கிண்ணியா கிராமங்களில் இரவு சம்பவம்

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்குளம், செம்பிமோட்டை கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் (13) இரவு புகுந்த காட்டு யானைகள் பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. சுமார் 6 – 7 யானைகள் ஊருக்குள் புகுந்து பலசரக்கு (சில்லறைக்) கடையையும், இரண்டு 06

விக்கல் வீராச்சாமி



நல்லாட்சியில அமைச்சரா இருந்த திகாம்பரம் ஐயா செய்த தில்லுமுல்லுகள அவரோட கூட இருந்த திலகராஜ் ஐயா புட்டு புட்டு வைக்கிறார்.....

உப செயலக விடயத்தை போல கல் வீடுகள் எண்டு சொல்லி காத்துல பறக்குற கூரை வீடுகளை கட்டி சனத்த ஏமாத்தினதையும் திலகர் ஐயா சொல்ல வரணும்...???

# செலிங்கோ லைஃப் 15வது 'ஆயுள் காப்புறுதி வாரத்தை' முன்னிட்டு ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டி




டிஜிட்டல் முறையில் தனது செய்தியைப் பரப்பி வரும் ஆயுள் காப்புறுதி தலைமை நிறுவனம் 'நான் வரையும் என் கனா' என்ற தலைப்பில்; வெற்றிப் படைப்புக்களை சமர்ப்பிக்கும் 3 வெவ்வேறு வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த 312 சிறுவர்களுக்கு வெகுமதிகளை வழங்கவுள்ளது.

தனது காப்புறுதி தாரர்களின் வாழ்க்கை இலக்குகளை அடையச் செய்வதில் பங்களிப்புச் செய்து வரும் ஒரு நிறுவனம் என்ற வகையில் செலிங்கோ லைஃப் 2022ம் வருடத்துக்கான தனது ஆயுள் காப்புறுதி வாரத்தை பெப்ரவரி 11 முதல் 17 வரை அனுஷ்டிக்கும் வகையில் நாடு முழுவதும் சிறுவர்களுக்கு மத்தியில் ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

நாடு தழுவிய ஓவிய மற்றும் கட்டுரைப் போட்டி 'நான் வரையும் என் கனா" என்ற தலைப்பில்;இடம்பெறவுள்ளது.

'எனது நாளைய இலட்சியம்;' எனும் தொனிப் பொருளை அது கொண்டிருக்கும். ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம் பற்றி பொது மக்களை அறிவூட்டும் வகையில் இந்தப் போட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. நான்கு வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் மத்தியில் மூன்று பிரிவுகளில் இந்தப் போட்டிகள் இடம்பெறும். பங்குபற்றுவோர் தமது ஓவியங்களை அல்லது கட்டுரைகளை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் 'சிஹின சித்துவம்' இணைய தளத்தை பயன்படுத்தி அனுப்பி வைக்கலாம்.

அல்லது பெப்ரவரி 1க்கும் 15க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தமக்கு மிகவும் அருகில் உள்ள ஒரு செலிங்கோ லைஃப் கிளை அலுவலகத்தில் ஒப்படைக்கலாம். ஒரு வயதுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் ஒரு படைப்பை மட்டுமே சமர்ப்பிக்லாம்.

வயதுப் பிரிவுகள் 4 வயதுக்கும் 7 வயதுக்கும் இடைப்பட்ட பிரிவு, 8 வயதுக்கும் 11 வயதுக்கும் இடைப்பட்டப் பிரிவு, 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட பிரிவு என அமைந்திருக்கும்.

ஓவியப் போட்டி சகலருக்கும் அமையும். மேற்குறிப்பிட்ட வயதுப் பிரிவுகளில் வயது கூடிய இரு பிரிவு சிறுவர்களிடம் இருந்து மட்டுமே கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படும். 'நான் வரையும் என கனா' ஓவிய மற்றும் கட்டுரைப் போட்டி மொழிவாரியாக ஒவ்வொரு பிரிவுக்கும் முதல் பரிசாக 30 ஆயிரம் ரூபா பணப்பரிசையும், இரண்டாம் பரிசாக 20 ஆயிரம் ரூபாவையும் மூன்றாம் பரிசாக பத்தாயிரம் ரூபாவையும் வழங்கும்.

இவற்றுக்கு மேலதிகமாக 225 சிறுவர் கலைஞர்களுக்கு மாவட்ட ரீதியான பரிசுகளும், ஆறுதல் பரிசுகளும் பிரத்தியேகமான சிறந்த ஓவியம் மற்றும் கட்டுரைகளுக்காக வழங்கப்படும்.




## யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும் ஸ்மார்ட் லைஃவ் உடன்குறுங்கால முதலீடு




யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும் ஸ்மார்ட் லைஃவ் உடன்வாடிக்கையாளர்கள் தமது வெற்றிகரமான வாழ்க்கைக்காக முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஸ்மார்ட் லைஃவ் இனால் 3, 5 அல்லது 7 வருடங்கள் எனும் குறுங்காலப்பகுதிக்கு கட்டுப்பணம் செலுத்தி, 40 வருடங்கள்வரை தொடர்ச்சியான பாதுகாப்பை அனுபவிக்க முடியும்.

ஸ்மார்ட்லைஃவ் இனால் உங்களின் வாழ்க்கைக்கான பாதுகாப்பையும் முதலீட்டு இலக்குகளையும் குறுங்கால அடிப்படையிலான முதலீட்டுக்காலத்தில் எய்துவதற்கு உதவியாக அமைந்திருப்பதுடன், உங்களின் அன்புக்குரியவர்களுக்கு நீண்டகால பாதுகாப்பையும், முதிர்ச்சியின் போது கவர்ச்சிகரமான வருமதியையும்வழங்கும். தற்போது நிலவும் குறைந்த வட்டிவீதங்களுடனான சூழ்நிலையில், ஸ்மார்ட்லைஃவ் என்பது நிலையான முதலீட்டு தீர்வாக அமைந்திருக்கும்.

விபத்துஅனுகூலங்கள், அங்கவீன அனுகூலங்கள் மற்றும் ஹெல்த் 360 அடங்கலாக சுகாதார காப்பீட்டு அனுகூலங்களைப் பெற்றுவாடிக்கையாளர்கள் தமது பாதுகாப்பு அனுகூலங்களை மேம்படுத்திக் கொள்ளமுடியும். ஹெல்த் 360 இனால் காப்புறுதிதாரரின் வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்கள் எனமூன்று தலைமுறையினருக்கு அனுகூலங்கள் வழங்கப்படுகின்றது. முழுக் குடும்பத்தின் சுகாதார தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கு ஒற்றைத் தீர்வாக அமைந்திருப்பதுடன், வைத்தியசாலைக் கட்டணங்கள், சத்திரசிகிச்சை, மருந்துப்பொருட்கள், பிரசவசேவைகள், வைத்திய நிபுணர்கள், பல்வைத்தியம் மற்றும் மூக்குக்கண்ணாடி சேவைகள் போன்றவற்றுக்கு பரந்தளவு காப்பீட்டை வழங்குகின்றது.

காப்புறுதி தவணை நிறைவில் கவர்ச்சிகரமான வருமதியுடன், ஸ்மார்ட்லைஃவ் என்பது குறுங்கால அல்லது நீண்டகால சேமிப்பு இலக்குகளை நிவர்த்திசெய்து கொள்வதற்கான சிறந்த முதலீட்டு மற்றும் பாதுகாப்பு தீர்வாக அமைந்திருக்கும்.

## உலகளாவிய விநியோகஸ்தராக DIMO வை அங்கீகரித்துள்ள உலகப் புகழ் பெற்ற TK Elevator

இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO, ஜேர்மன் தொழில்நுட்ப புத்தாக்க கண்டுபிடிப்பாளரும் மின்தூக்கி (Mobility) தீர்வுகளை வழங்குவதில் உலகளாவிய முன்னணி நிறுவனமுமான (முன்னர் thyssenkrupp Elevator என அறியப்படும்) TK Elevator நிறுவனத்தினால், 2021ஆம் ஆண்டிற்கான சிறந்த உலகளாவிய விநியோகஸ்தராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



விற்பனை மற்றும் 24 மணிநேர சேவைகளுக்கான உலகத் தரம் வாய்ந்த குழுவை நிறுவியுள்ளமைக்காகவும், குறுகிய காலத்திற்குள் சந்தைப் பங்கை இரு இலக்கங்களாக உயர்த்தியமைக்காகவும், குறிப்பாக பிராந்தியத்திலுள்ள இரண்டு சர்வதேச விமான நிலையத் திட்டங்களைப் பெற்றுள்ளமைக்காகவும் DIMO நிறுவனத்திற்கு இந்த மதிப்புமிக்க கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. DIMO வின் சமீபத்திய வெளிநாட்டு திட்டமான மாலைதீவில் உள்ள Velana சர்வதேச விமான நிலையம் இதில் ஒன்றாகும். இதில் 41 TKE மின் தூக்கிகள், எஸ்கலேட்டர்கள், நகரும் நடைபாதைகளின் விநியோகம், நிறுவல், பராமரித்தல் ஆகியன அடங்குகின்றன. இலங்கையில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (Terminal 1) பயணிகள் முனையக் கட்டடத்தில் உள்ள இடமாற்றப்பட்ட குடிவரவுப் பகுதி திட்டமானது, TKE இனால் அங்கீகரிக்கப்பட்ட மற்றைய திட்டமாகும். TKE மின் தூக்கிகளை விநியோகித்தல், நிறுவுதல், சோதனை செய்தல், இயக்குதல் ஆகியன இதில் உள்ளடங்குகின்றன.



கொவிட்19 தொற்றுப் பரவலுக்கு எதிராக சுகாதாரப் பராமரிப்புத்துறை செயலாற்றுவதற்கு உதவிகளை வழங்கும் தொடர்ச்சியான முயற்சிகளின் அங்கமாக, SLTMOBITEL, மூன்றுMulti Para Monitorsகளை பலபிட்டிய ஆதாரவைத்தியசாலைக்கு அண்மையில் அன்பளிப்புச் செய்திருந்தது. பலபிட்டிய ஆதாரவைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர். கே. சோமரத்னவிடம் இந்தசாதனத்தைSLTMOBITEL அதிகாரிகள் கையளித்திருந்தனர். முன்பு இந்நிறுவனத்தினால் ஐந்து PCR இயந்திரங்கள் நாடுமுழுவதையும் சேர்ந்த முன்னணி பொது வைத்தியசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன.

## சர்வதேச செய்திகள்

### ஊடக ஒடுக்குமுறை தொடர்பில் கவலை



ஹொங்கொங்கில் சீன நிர்வாகத்தால் கடந்த மாதங்களில் சுதந்திர ஊடகங்கள் ஒடுக்கப்படுவது தொடர்பில் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து கவலை வெளியிட்டுள்ளன.

21 நாடுகள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஹொங்கொங் மற்றும் தலைநிலமான சீன நிர்வாகம் ஹொங்கொங்கில் ஊடகங்கள் மீதான தாக்குதல் மற்றும் உள்ளூர் ஊடகங்கள் மீதான ஒடுக்குமுறை தொடர்பில் ஒப்பிடப்பட்டுள்ள ஊடக சுதந்திர கூட்டணி தமது ஆழ்ந்த கவலையை வெளியிடுகிறது' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### 48 மணி நேரத்திற்குள் ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் அழைப்பு

உக்ரைன் எல்லையில் பதற்றம் அதிகரித்திருக்கும் நிலையில் ரஷ்யா மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு தொடர்பான முக்கிய உறுப்பு நாடுகளுக்கு உக்ரைன் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

துருப்புகள் குவிக்கப்படுவது பற்றி உத்தியோகபூர்வமாக விளக்கம் கோரப்பட்டபோதும் அதனை ரஷ்யா பொருட்படுத்தவில்லை என்று உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அடுத்த கட்டமாக ரஷ்யாவின் திட்டங்கள் பற்றிய வெளிப்படை தன்மைக்காக 48 மணி நேரத்திற்குள் பேச்சுவார்த்தைக்கு கோரப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.



உக்ரைன் எல்லையை ஒட்டி ரஷ்யா சுமார் 100,000 படைகளை குவித்திருந்தபோதும் உக்ரைன் மீது தாக்குதல் தொடுக்கும் திட்டம் இல்லை என்று அது தொடர்ந்து மறுத்து வருகிறது.

எனினும் ரஷ்யா எந்த நேரத்திலும் வான் தாக்குதல்களை ஆரம்பிக்கலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. பல டஜன் நாடுகள் உக்ரைனில் இருக்கும் தமது நாட்டு மக்களை அங்கிருந்து வெளியேறும்படி அறிவிறுத்துள்ளன.

இந்நிலையில் பதற்ற சூழலை தனிக்கும் இராஜதந்திர முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை தலைநகர் கீவ்வில் ஜெர்மன் ஆட்சித்துறைத் தலைவர் ஓலாப் ஸ்கால்ஸ் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். மேலும், அவர் இன்று செவ்வாய்க்கிழமை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் மொஸ்கோவில் சந்திப்பு நடத்த உள்ளார்.

ஏஞ்சலா மெர்கலிடமிருந்து ஜெர்மனியின் தலைமைப் பொறுப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள ஓலாப் ஸ்கால்ஸ், எவ்வித படையெடுப்பை நிகழ்த்தினாலும், ரஷ்யா தீவிரமான பொருளாதார விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளார். இதன்மூலம், அவர் மற்ற மேற்கு நாடுகள் மற்றும் நேட்டோ இராணுவ கூட்டணியின் உறுப்பு நாடுகளின் கருத்துகளையே எதிரொலித்துள்ளார்.

இதற்கிடையில், 'போரின் விளிம்பிலிருந்து' ரஷ்யாவை திருப்பி அழைத்துவர ஐரோப்பா முழுவதும் புதிய இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் திட்டமிட்டுள்ளார்.

### இஸ்ரேலிய தாக்குதலில் பலஸ்தீன சிறுவன் பலி



ஆக்கிரமிக்கப்பட்ட ஜெனின் நகருக்கு அருகில் இடம்பெற்ற மோதலில் 17 வயது பலஸ்தீன சிறுவன் ஒருவனை இஸ்ரேலிய படையினர் சுட்டுக்கொன்றிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சிலாத் அல் ஹார்தியா கிராமத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வந்த படையினர் இஸ்ரேலிய குடியேற்ற வாசி ஒருவரை கொன்றதாக குற்றம்சாட்டப்பட்ட முஹமது ஜரதத் என்பவரின் வீட்டை தரைமட்டமாக்கியுள்ளனர். இதன்போது முஹமது அபூ சலா என்ற அந்த சிறுவனை கொன்றதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இராணுவ புல்டோசர் ஒன்றுடன் வந்திருக்கும் இஸ்ரேலிய படையினர் வாகனங்கள் வருவது மற்றும் வெளியேறுவதையும் தடுத்துள்ளனர்.

## மதநிந்தனை குற்றச்சாட்டில் ஒருவர் அடித்துக் கொலை

பாகிஸ்தானில் மதநிந்தனை தொடர்பான வன்முறையின் தொடர்ச்சியாக, புனித குர்ஆனின் பக்கங்களை எரித்த குற்றச்சாட்டில் மத்திய பாகிஸ்தானில் கும்பல் ஒன்றால் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

பஞ்சாப் மாகாணத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட 80க்கும் அதிகமானோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்த ஆடவரையே கும்பல் வெளியே எடுத்து கொலை செய்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவரது உடல் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியை நடைபெற்றது.

இது தொடர்பில் முழுமையாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த ஆடவரை பாதுகாக்கத் தவறியது பற்றி பொலிஸாரிடம் விசாரணை நடத்தப்படும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

தனது 40 வயதுகளில் இருக்கும் அந்த ஆடவர் மரத்தில் கட்டப்பட்டு சுய நினைவு அற்ற நிலையில் காணப்பட்டதாக முனவ்வர் ஹுஸைன் என்ற பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

'தடிகள், கோடாரிகள் மற்றும் இரும்புக் கம்பிகளுடன் இருந்த கிராமத்தினர் அவரைக் கொன்று அவரது உடலை மரம் ஒன்றில் தொங்கவிட்டனர்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட நபர் கடந்த 15 ஆண்டுகளாக மனநிலை பாதிக்கப்பட்டு இருந்ததாக சம்பவம் நடந்த காவல்நிலைய தலைமை அதிகாரி முனவர் குஜ்ஜார் ஏ.பீ செய்தி முகமையிடம் தெரிவித்துள்ளார்.

இதே பஞ்சாப் மாகாணத்தில் உள்ள சியால்கோட் நகரில் மத நிந்தனை செய்ததாக இலங்கையைச் சேர்ந்த தொழிற்சாலை முகாமையாளர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டு இரண்டு மாதங்களே ஆகியுள்ள நிலையில் பாகிஸ்தானில் இன்னொரு கும்பல் கொலை நடந்துள்ளது.

இஸ்லாம் மதத்தை அவமதித்து மத நிந்தனை செய்வோருக்கு பாகிஸ்தான்சட்டங்களின்படி மரணதண்டனை விதிக்கக் கூட வாய்ப்பு உள்ளது.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
13 முதல் 17 வரை
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் மாசி 3
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சதுர்த்தசி






சுகாதார தாதிமார் சங்கம் நேற்று கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். புறக் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இருந்து ஜனாதிபதி செயலகம் வரை ஊர்வலமாக செல்வதை படத்தில் காணலாம். படம்: கெலும் லியனகே

# கோப் குழு முன்னிலையில் மேலும் சில நிறுவனங்களுக்கு அழைப்பு

எதிர்வரும் நாட்களில் அரசாங் கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) முன்னிலையில் மேலும் சில அரசாங்க நிறுவனங் கள் அழைக்கப்படவுள்ளன. கடந்த கூட்டத்தொடரில் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த நிறுவனங் களும் இதில் உள்ளடங்குகின்றன.




இதற்கமைய எதிர்வரும் பெப்ர வரி 23ஆம் திகதி புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகமும், பெப்ரவரி 24ஆம் திகதி இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவன மும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அபிவிருத்தி 06


## காலி கோட்டை பீரங்கிகள் சுற்றுலா பயணிகளால் சேதம்

பல மாதிரி பீரங்கிகள் நொறுங்கிய நிலையில்

காலி கோட்டையில் அமையப் பெற்றுள்ள பீரங்கிகள் வைக்கப்பட் டிருந்த பாதுகாக்கப்பட்ட பகுதியில் பீரங்கிகள் சில சேதமடைந்துள்ளதாக எமது செய்திச் சேவைக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதற்கமைய சில பீரங்கிகள் நொறுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சில பீரங்கிகளின் பாகங்கள் அகற்றப் பட்டுள்ளதாகவும் அதன் திட்ட அதி காரிகள் தெரிவிக்கின்றனர். சுற்றுலா பயணிகள் சிலர் காலி 06

## O/L சித்தியடையாத மாணவர்களுக்கும் அரச வேலைவாய்ப்பு




2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுக ளின் அடிப்படையில் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தகுதி பெறாத மாணவர்களை தொழிற் பயிற்சிக்கு உட்படுத்தி அவர்களுக்கான வேலை வாய்ப்பை வழங்கும் நடைமுறை யொன்றை வகுக்க திட்டமிடப்பட் டுள்ளது.

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தினால் இந்த வேலைத்திட்டம் திட்டமிடப்பட் டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற் றியவர்களில் சுமார் 98,000 மாண வர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெறவில்லை. இவர்களுள், கணிதப் பாடத்தில் சித்தியடையாத, ஆனால் பின்னர் அதன் பெறுபேற்றை பெற்றுத் தருவதாக கூறி க.பொ.த உயர்தரப் 06

## உலகில் 41 கோடி பேருக்கு கொவிட்

ஆய்வு ஒன்று உறுதி செய்தது



உலகில் மொத்தம் 41 கோடி பேருக்கு கொரோனா நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக தர வுகள் அடிப்படையில் ஞாயிற் றுக்கிழமை காலை நிலவரப்படி உலகில் மொத்தம் 410,024,095 பேருக்கு நோய்த் தொற்று இருப் பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பலி எண்ணிக்கை 5,809,171 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை மொத்தம் 10,189,927,521 தடுப்பூ சிகள் செலுத்தப்பட்டுள் ளன.

அதிகம் பாதிக்கப் பட்டுள்ள நாடுகளில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத் தில் உள்ளது. அங்கு மொத்தம் 77,702,689 பேருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது. மொத்த பலி எண்ணிக்கை 919,171 ஆக 06

செந்தில் குருக்கள் ஏற்பாட்டில

## டி.எம்.எஸ் 100ஆவது ஆண்டு சிறப்பு விழா



மார்ச் 24 தமிழகம் விருகை நகரில் எதிர்வ ரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை ஐந்து மணி முதல் ஒன்பது முப்பது மணி வரை இந்தியா சென்னை விருகம்பாக்கம் கோல்டன் பரடைஸ் மண்டபத்தில் டி.எம் சௌந்தரராஜன் அவருடைய நூறாவது பிறந்த தின விழா சிறப் பாக கொண்டாடப்படு வதற்கான ஏற்பாடுகளை இலங்கை குரு முதல்வர் சிவஸ்ரீ செந்தில் சாம்பசிவ குருக்கள் செய்து வருகி றார்.

இந்நிகழ்வில் தமிழகத் தைச் சேர்ந்த பிரபல நடிக, நடிகைகள் மற்றும் பாடல் ஆசிரியர்கள், பாடகர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

## உதவி கோரல்



தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்ட ஏ.எம். கவிஷ் கிரினிது அத்தநாயக என்ற 3 வயது சிறுவனின் மருத்துவ சிகிச்சைக ளுக்காக அவரது தந்தை பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளார்.

எலும்பு மச்சை பொருத்தும் சத்திரசி கிச்சை மூலமே தலசீமியா நோயினை முற்றாக குணப்படுத்த முடியும் என வைத் தியர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இச்சத்திர சிகிச்சை கொழும்பு ஆசிரி மத்திய வைத்தியசாலையிலேயே தற்சம யம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்காக 8 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே கருணை உள்ளம் கொண்ட வர்கள் உதவிசெய்யுமாறு அவரது தந்தை கோரியுள்ளனர். **ஏ.ஏ.எம்.சீ. அமரதுங்க, 101 352 397 494, சம்பத் வங்கி, மஹரகம கிளை அல்லது ஏ.ஏ.எம்.சீ அமரதுங்க, 884 25 324, இலங்கை வங்கி மஹரகம கிளை என்ற வங்கிக்கணக்குகளில் நிதி உதவி களை வைப்பிலிடுமாறு கோரியுள்ள அவர் தனது தொலைபேசி இலக்கம் 0710746762** எனவும் அறியத்தந்துள்ளார்.

## சமுதித்தவின் வீட்டின் மீதான தாக்குதலுக்கு உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

ஊடகவியலாளர் சமுதித்த சம ரவிக்கிரமவின் வீடு மீது ஆயுதம் தாங்கிய நபர்களால், நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதலை இலங்கை உழைக்கும் ஊடகவியலா ளர் சங்கம் வன்மையாகக் கண்டித் துள்ளது.

நாட்டில் ஊடக சுதந்திரத்துக்கு இவ்வாறு கடும் அச்சுறுத்தலை ஏற்ப டுத்தி, ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் நபர்களை பாதுகாப்பதே இத்தகைய தாக்குதல்களின் நோக்கம் என்பது தெளிவாகின்றது. ஊடகவிய லாளர்கள் படுகொலை செய்யப்பட் டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன் னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி ‘கறுப்பு ஜனவரி’ நினை வுகூரப்பட்டு ஒரு மாதம் நிறைவ டைவதற்குள் இத்தகையதொரு தாக் குதல் இடம்பெற்றுள்ளமை ஊடக சமூகத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே அமைந் துள்ளது. 06

## தேசிய தொழில் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா 2022 க்கு Dialog Enterprise அனுசரணை வழங்கியது



டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் வளர்ந்து வரும் வர்த்தகப் பிரிவின் தலைவர் சன்ன அமரசேகர, இலங்கை பிரதமர் கௌரவ திரு. மஹிந்த ராஜபக்ஷ கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவன்ச மற்றும் பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணவீர, டயலொக் எண்டர்பிரைஸ் குழும பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் ஆகியோருக்கு டயலொக் எண்டர்பிரைஸ் வழங்கும் ICT தீர்வுகள் குறித்து தெளிவுபடுத்துவதை படத்தில் காணலாம்.

இலங்கையின் கைத்தொழில்கள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் புதிய இயல்புநிலையில் புத்துயிர் பெறுவதற்காக அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, டயலொக் எண்டர்பிரைஸ் ஆனது 2022 "தேசிய கைத்தொழில் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழாவிற்கு அனுசரணை வழங்கியது. இந் நிகழ்வானது பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவன்ச மற்றும் பிரம்பு, பித்தளை, மட்பாண்டம், மற்றும் கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணவீர, டயலொக் எண்டர்பிரைஸ் குழும பிரதான அதிகாரி நவீன் பீரிஸ், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் வளர்ந்து வரும் வர்த்தகத்தின் தலைவர் சன்ன அமரசேகர, டயலொக் ஃபினான்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி நசீம் மொஹமட் மற்றும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனைய முக்கியஸ்தர்கள் முன்னிலையில் 2022 தேசிய தொழில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. உபசேன திஸாநாயக்க, "நாட்டில் பாரிய தொழிற்துறை மறுமலர்ச்சிக்கான அத்திவாரத்தை அமைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட தேசிய வேலைத்திட்டத்தின் மற்றுமொரு வெற்றிகரமான படியாக இந்த நான்கு நாள் தேசிய கைத்தொழில் கண்காட்சியை நடாத்தியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த தொழிற்துறை மறுமலர்ச்சி முயற்சிகளை மேலும் மேம்படுத்துவதற்கான எங்கள் பகிர்ப்பட்ட பார்வையில் எங்களுடன் இணைந்ததற்காக எங்களின் அனுசரணையாளர் - டயலொக் எண்டர்பிரைஸ் மற்றும் உத்தியோகபூர்வ ஃபின்டெக் பங்காளர் - டயலொக் ஃபைனான்ஸ் மற்றும் கொடுப்பனவு பங்காளர் - டயலொக் பணத்தை ஆகியோருக்கு நாங்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்" என மேலும் தெரிவித்தார்.

நாட்டின் 20 தொழில் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு 300 க்கும் மேற்பட்ட கண்காட்சி கூடங்களை கொண்ட இந்த கண்காட்சி, தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கும், தொற்றுநோயின் பாதகமான விளைவுகளிலிருந்து மீள்வதற்கும் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கு உதவுவதற்காகவும் நடத்தப்பட்டதுடன் இந்த கண்காட்சியில் 20,000 க்கும் அதிகமான பார்வையாளர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. டயலொக் எண்டர்பிரைஸ் உடன், டயலொக் ஃபைனான்ஸ் பிஎல்சி மற்றும் டயலொக் பணத்தை உத்தியோகபூர்வ பங்காளராகவும் FinTech கொடுப்பனவு பங்குதாரராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது இலங்கை நிறுவனங்களை புதிய இயல்புநிலையில் சிறந்த டிஜிட்டல் தீர்வுகள் மூலம் டிஜிட்டல் முறையில் மாற்றியமைக்க உதவும்.



டயலொக் எண்டர்பிரைஸ் வழங்கும் ICT தீர்வுகள் குறித்து டயலொக் எண்டர்பிரைஸ் குழுமத்தின் பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் அவர்கள் கம்பனி தோட்ட மறுசீரமைப்பு, தேயிலை தோட்டங்கள் தொடர்பான பயிர்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்கள் சாகுபடி மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ. கனக ஹேரத் அவர்களுக்கு தெளிவுபடுத்துகின்றார். மேலும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. உபசேன திஸாநாயக்க அவர்களையும் படத்தில் காணலாம்.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 03ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 13

## குறள் தரும் சிந்தனை



அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு

அன்பு, அறிவு, செயலாற்றும் திறமை, பேராசைப்படாத குணம் ஆகிய நான்கு பண்புகளையும் நிலையாகப் பெற்றிருப்பவரைத் தேர்வு செய்வதே நலம்.

# சமரச வழிமுறையில் தீர்வு காணப்பட வேண்டிய இந்திய மீனவர் விவகாரம்!

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக அத்துமீறி மீன்பிடிக்கும் விவகாரமானது தற்போது சிக்கலான நிலைமையை அடைந்துள்ளது. இலங்கை மீனவர்கள் மற்றும் தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமையொன்று தற்போது உருவாகியிருப்பது மிகவும் கவலை தருகின்றது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் பரப்புக்குள் அத்துமீறுகின்றனரென்ற கோணத்தில் மாத்திரம் இவ்விவகாரத்தை நாம் நோக்க முடியாது. அதற்கும் அப்பால் வடபகுதித் தமிழர்களுக்கும், தமிழக மக்களுக்கும் இடையில் கசப்புணர்வுகள் உருவாகி விடுமோ என்பது தான் தமிழர்களின் கவலையாகும்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் உண்மையான பூர்வீகம் தென்னிந்தியா ஆகும். அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் தமிழகத்துடனான பூர்வீகத் தொடர்புகளை மறந்து விட முடியாது. உலகத் தமிழர்கள் பேணி வருகின்ற அத்தனை கலாசார பாரம்பரியங்களுமே தமிழகத்திலிருந்து பெற்றுக் கொண்டவைதான் என்பதில் ஐயமில்லை. எனவேதான் தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையே 'தொப்புள்கொடி உறவு' நிலவுவதாக கூறப்படுவதுண்டு.

தமிழகத்துடனான பூர்வீகத் தொடர்புகளை இலங்கைத் தமிழர்கள் புறந்தள்ளி விட முடியாதென்பது ஒரு புறமிருக்க, தமிழக மக்கள் கடந்த காலத்தில் வழங்கி வந்த ஆதரவையும் அரவணைப்பையும் கூட மறந்து விட முடியாது. இலங்கைத் தமிழர்கள் மீதான வாஞ்சையும் அன்பும் தமிழக மக்கள் மத்தியில் இன்றும் மாறாமலேயே உள்ளன.

1983 ஆம் ஆண்டு வன்செயல்களைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்தலும் ஆரம்பமாகியது. வடக்கு, கிழக்கில் மோதல்கள் தீவிரமடைந்ததும் முதன் முதலில் வடக்குத் தமிழர்கள் தமிழகத்தை நோக்கியே புலம்பெயரத் தொடங்கினர். அதன் பின்னர் வடபகுதித் தமிழ் மக்கள் மாத்திரமன்றி கிழக்குத் தமிழர்களும் வகைதொகையின்றி படகுகள் மூலம் தமிழகத்தை நோக்கி தமது உயிரைப் பணயம் வைத்தவாறு புலம்பெயர்ந்து சென்றனர்.

இவ்விதம் இடம்பெயர்ந்து சென்ற இலங்கைத் தமிழ் மக்களை எதுவித பிரதியுபகாரமுமின்றி அரவணைத்து ஆதரவளித்தவர்கள் தமிழக மக்களும் அங்குள்ள அரசியல்வாதிகளுமாவர். இலங்கையில் அன்று நிலவிய உச்சக்கட்ட யுத்த வேளையில் தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகளும் எதுவித பேதமுமின்றியே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளித்தனரென்பதை மறந்து விட முடியாது.

இலங்கை அகதிகளுக்கான விசேட முகாம்கள் அமைக்கப்பட்டு அவர்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டதுடன், அகதிகளுக்கான உணவு மற்றும் அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இன்றுவரை இலங்கை அகதிகள் தமிழகத்தில் பாதுகாப்புடனேயே வாழ்ந்து வருகின்றனர். அது மாத்திரமன்றி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் வெளியிட்டிருந்த அறிவிப்பையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிரந்தரமான இருப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன், அவர்களுக்கு அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டு கௌரவமாக வாழ்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்திருந்தார். இலங்கைத் தமிழ் மக்கள் மீது தமிழகம் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாகவே ஸ்டாலினின் அறிவிப்பை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறெல்லாம் இலங்கைத் தமிழ் மக்கள் இடருக்கு உள்ளான வேளைகளில் ஆதரவளித்த தமிழக மக்கள் மத்தியில் வேதனை தோன்றுமளவுக்கு மீனவர் விவகாரம் சென்று விடக் கூடாதென்பதே உணர்வாளர்களின் கவலையாகும். தமிழக மீனவர்கள் எல்லை தாண்டும் விவகாரமானது மிக கவனமான முறையில் கையாளப்பட்டு தீர்க்கப்பட வேண்டுமென்பதே பலரதும் எண்ணமாகும்.

வடபகுதி மீனவர்களின் போராட்டத்தில் நியாயம் உள்ளதை மறுப்பதற்கில்லை. அவர்களது வாழ்வாதாரம் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வடபகுதி கடற்பரப்புக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிப்பதுடன் மாத்திரம் நின்று விடாமல், எமது நாட்டின் கடல்வளங்களையும் நாசமாக்கிச் செல்வது முடிவின்றித் தொடர்கின்றது. இலங்கையின் கடல் சூழலை தமிழக மீனவர்கள் வேகமாக அழித்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் பயன்படுத்துகின்ற மீன்பிடி உபகரணங்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டவையாகும். இலங்கை மீனவர்கள் பயன்படுத்த முடியாத மீன்பிடி உபகரணங்களையெல்லாம் தமிழக மீனவர்கள் எமது கடல் பரப்புக்குள் பயன்படுத்துகின்றனர். வடபகுதி கடலின் அடிப்பரப்பில் உள்ள பவளப்பாறைகளையும் அவர்களின் மடிவலைப் படகுகள் சேதப்படுத்துகின்றன.

அதுமாத்திரமன்றி, இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசிப்பது சட்டவிரோதமான செயலென்று ஏற்றுக் கொள்வதற்கும் அவர்கள் தயாராக இல்லை. அவர்கள் வகைதொகையின்றி எமது கடற்பரப்புக்குள் பிரவேசிக்கின்ற போது மோதல்கள் உருவாகின்றன. இந்த விடயத்தில் தமிழக மீனவர்களின் செயலானது முற்றிலும் தவறானதாகும்.

எது எவ்வாறாக இருப்பினும் தமிழக மீனவர்களின் எல்லை தாண்டும் விவகாரமானது வன்முறையைப் பிரயோகித்து தீர்க்கப்படக் கூடியதல்ல. சமரச வழிமுறைகள் ஊடாகவே அப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு சிக்கல்களைத் தீர்க்க முற்படுவதன் மூலம் இருநாட்டுத் தமிழர்களுக்குமிடையே கசப்புகள் உருவாகி விடுவதற்கு இடமளிக்கலாகாது!

editor.tkn@lakehouse.lk

# சர்வதேச நாடுகளின் அரசியல் சதுரங்கத்துக்கு மத்தியில் பெய்ஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக்

எப்படி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றனவோ, அதனைப் போன்றே மாறுபட்ட 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் குளிர்கால ஒலிம்பிக்கின் 24வது போட்டிகள், சில நாடுகளின் பங்குபற்றுதல் இன்றி சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள குருவிக் கூடு (BIRD'S NEST) மைதானத்தில் கடந்த 4ம் திகதி (04/02/2022) இடம்பெற்ற சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பெய்ஜிங்(Beijing)நகரின் BIRD'S NEST மைதானம் மற்றும் அங்குள்ள யாங்கிங் (Yanqing), ஜாங்சியாகவ் (Zhangjiakou) ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள முற்றிலும் பனிக்கட்டிகளாலான சிறப்பு மைதானங்களில் இடம்பெறும் இந்த குளிர்கால போட்டிகள் கண்களுக்கும், மனதுக்கும் இதம் அளித்துக் கொண்டிருக்கின்றன.

இம்மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளை நடத்தி முடிப்பதன் மூலம், 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற கோடை கால ஒலிம்பிக்ஸ் மற்றும் தற்போதைய குளிர்கால ஒலிம்பிக்ஸ் இரண்டையும் வெற்றியுடன் நடத்தி முடித்த பெருமையை சீனாவின் பெய்ஜிங் நகர் பெறுகிறது.

109 தங்க, வெள்ளி, வெண்கல பதக்கங்களுக்காக நடைபெறும் இப்போட்டிகளை நடத்துவதற்காக நோர்வே தலைநகர் ஒஸ்லோ, கஜகஸ்தானின் அல்மாட்டிநகர் ,மற்றும் சீனத் தலைநகர் பெய்ஜிங் ஆகியவற்றிற்கு இடையே கோலாம்பூரில் நடைபெற்ற பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனக் கூட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் பெய்ஜிங் நகரம் தேர்வு செய்யப்பட்டது.

சீனாவில் இடம்பெறும் இந்த ஒலிம்பிக் போட்டிகளை முதலில் அமெரிக்காவும் அதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா, நியூசிலாந்து,கனடா மற்றும் பிரிட்டன், இறுதியாக பிரான்ஸ்,ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும், இந்த 24வது குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கு தமது விளையாட்டு வீரர்களையும் அவர்களது நிர்வாக அதிகாரிகளையும் மட்டுமே அனுப்புவோம் என அறிவித்து ஒலிம்பிக் போட்டிகளை வெளியுறவு ரீதியாகப் புறக்கணித்துள்ளன.

இந்தியாவின் லடாக் மாநிலத்தின் இமய மலைப் பகுதியில் சீன, இந்திய இராணுவத்தினருக்கு இடையில் நடைபெற்ற மோதல் ஒன்றில் முன்னிலை வகித்த சீன இராணுவ அதிகாரி ஒருவரே இந்த போட்டிகளின் ஒலிம்பிக் தீபத்தை சீனாவினுள் எடுத்து சென்றதால் நாமும் பெய்ஜிங் நிகழ்வுகளை பகிஷ்கரிக்கிறோம் என்று தெரிவித்து இந்தியாவும் இராஜதந்திர புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் சீன ஜனாதிபதி மேற்படி போட்டியை புறக்கணிக்கும் நாடுகள், அமெரிக்காவை நம்பி தமது நாட்டு மக்களுக்கு தாமே துரோகம் இழைக்கின்றன என்று கவலையுடன் கருத்து வெளியிட்டுள்ளார்.


இது போன்ற பல இராஜதந்திர சிக்கல்கள், தொடரும் கொவிட் பெரும் தொற்று என்பவற்றுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த குளிர்கால ஒலம்பிக் போட்டிகளின் தொடக்க விழா சிறப்பாக நடாத்தப்பட்டது. 1970 களில் இடம்பெற்ற சீன கலாசாரப் புரட்சியின் போது அரங்கேற்றப்பட்ட நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் வகையில், ஆரம்ப நிகழ்வுகள் அமைந்திருந்ததாக வர்ணனையாளர்கள் தெரிவித்திருந்திருந்தனர்.





செஞ்சீனத்தின் தலைவர் மாவோவை நினைவுபடுத்திய 'சிறிய சூரியகாந்திகள்' என்னும் குழந்தைகள் நடனமும் அந்த நடன அரங்கின் அழகியல் அமைப்பும் பார்வையாளர்களின் சிறப்புக் கவனத்தை ஈர்ந்தன.சீனாவின் மக்கள் இராணுவத்தை (Peoples Liberation Army) சேர்ந்த வீரர்கள் சீனாவின் தேசியக் கொடியை அணிவகுத்துச் சென்று அதிகாரபூர்வமாக ஏற்றி வைக்க எண்ணிலடங்கா ஒத்திசைக்கப்பட்ட வெகுஜன நிகழ்ச்சிகள் அரங்கத்தை அதிர வைத்தன.

இளம் பெண்களின் பாம்பாம்ஸ் குலுக்கல் (Shaking PomPoms)நடனம் மற்றும் இளம் சிறுவர்களின் லைட்சேபர்களைப் (Wielding Light Sabers) பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மின்னணு மலர்களின் (electronic flowers) இருள் நடனம் என்பன மேலும் மெருகூட்டின.



சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் முகக்கவசத்துடன் முழுநீள நீல நிற பர்கா (Blue Parka) உடையில் ஆரம்ப நிகழ்வு நடவடிக்கைகளை ஆய்வு செய்தத்துடன் கலைநிகழ்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார். மாவோ சேதுங்கிற்குப் போட்டியாக ஆளுமைமிக்க தலைவராக தன்னை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் அவரது எண்ண வெளிப்பாட்டு முறைமையானது அவரது கவர்ச்சி, ஆளுமை என்பவற்றின் குறைபாட்டால் (Non Charismatic) மக்கள் மத்தியில் மட்டுமல்லாது உலக அரங்கிலும் பின்நோக்கியே நகர்கிறது என்கின்றனர் மேற்குலக ஆய்வாளர்கள்.

இந்த எண்ணக் கருவை முறியடித்து தன்னை ஒரு ஆளுமை மிக்க தலைவராக(Charismatic Leader) உலகிற்கு காட்டிக் கொள்ளும் முன்னெடுப்புகளில் ஒன்றே ஷி ஜின்பிங் அவர்களின் இந்த ஒலிம்பிக் போட்டிகளை தனது தலைமையில் நடத்த எடுக்கப்பட்ட பிரயத்தனமும்,ஆரம்ப விழாவின் நவீன ஆடம்பரங்களும் என்னும் விமர்சனங்களும் உள்ளன.

'ஒரே உலகம் ஒரே குடும்பம்' (One belt One road) என்கிற சீன கொமியூனிஸ்ட் கட்சியின்(CCP) கருப்பொருளைச் சுற்றியே ஆரம்ப விழா நிகழ்வுகள் அமைக்கப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. சீனாவில் 2008 இல் இடம்பெற்ற கோடைகால ஓலம்பிக்கின் தொடக்க விழாவைப் போலவே, இந்த நிகழ்சிகளுக்கும் பிரபல சீன திரைப்பட இயக்குனர் ஜாங் யிமோ(Zhang Yimou) மீண்டும் கலை இயக்குநராக இருந்து கலை நிகழ்ச்சிகளை சிறப்புற வடிவமைத்திருந்தமை நிகழ்சிகளுக்கு மேலும் மெருகூட்டியது.

இஸ்லாமிய மக்கள் வாழும் சீனாவின் மேற்கு மாகாணமான சின்ஜியாங்கின் உய்கர்(Uyghur) இன வீராங்கனை ஒருவரும் சீன வீரர் ஒருவரும் இணைந்து 24வது குளிர்கால ஒலிம்பிக்கின் இறுதிச் சுடரை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்தமையானது சிறுபான்மை இன மக்கள் சீன அரசால் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்கிற அமெரிக்காவின் பிரசாரத்தை மழுங்கடிப்பதாய் அமைந்திருந்தது.

இந்த 24வது குளிர்கால ஒலிம்பிக்கை 'இனப்படுகொலை விளையாட்டுகள்' என்று ஏளனமாக வர்ணித்திருந்த அமெரிக்கா உட்பட்ட அனைவருக்கும் உய்கர்(Uyghur) இன வீராங்கனை ஒருவருக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமும், சீனாவின் ஏனைய 4 சிறுபான்மை இன போட்டியாளர்கள் தேர்வு செய்யப்பட்ட முறைமையும் ஒரு தெளிவான கண்டனத்தை வெளியிடுவதாக அமைந்திருந்தன. அமெரிக்காவினதும் அதன் ஆதரவு நாடுகளின் பகிஷ்கரிப்பை பொருட்படுத்தி பிரபல சர்வதேச நிறுவனங்கள் வழமை போன்று விளையாட்டுகளுக்கு அனுசரணை வழங்கி, நிதிப்பங்களிப்பு செய்யும் தமது செயற்பாட்டை நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒமிக்றோன் பரவலுக்கு எதிரான சீனாவின் தடுப்பூசிகள் பெரும்பாலும் பயனற்றவை என்னும் மேற்குலகின் பரப்புரைகளால், சீனாவின் தடுப்பு ஊசிகளை தவிர்த்து வரும் உலகநாடுகளின் போக்கை முறியடிக்க பெரும் பிரயத்தனம் எடுத்து வரும் சீன அரசு தனது நாட்டினுள் பூச்சிய கொவிட் நிலைமையை ஏற்படுத்தும் வேலைத் திட்டங்களின் பிரதிபலிப்பு இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழாவிலும் எதிரொலித்தது.

15,000 பார்வையாளர்களைக் கொள்ளக் கூடிய ஆரம்ப நிகழ்வு இடம்பெற்ற குருவிக்கூடு அரங்கினுள் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட சிலர் மட்டுமே விழாவில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். அரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு மாபெரும் தொலைக்காட்சியில் இருந்து உலகம் பூராவும் நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பு செய்யும் அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

விழாவில் கலந்து கொண்ட 26 வெளிநாட்டுத் தலைவர்களில் பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான், செர்பிய ஜனாதிபதி அலெக்சாண்டர் வுசிக், சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விலாடிமிர் புட்டின், எகிப்து ஜனாதிபதி அப்டெல் பற்றா, கஜகஸ்தானின் இன்றைய தலைவர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

சீனாவின் இந்த ஒலிம்பிக் தொடக்க விழா அமைதி மற்றும் அன்பை வெளிப்படுத்தியது எனவும் ஹொங்கொங், தாய்வான், திபெத்,அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா மற்றும் அமெரிக்கா என்பவற்றின் மோதல் போக்குக்கு சவால் விடும் வகையிலும் அமைந்திருந்தது எனவும் பக்கச்சார்பற்ற விமர்சகர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். ஒன்றரை நூற்றாண்டுகால பொருளாதார போராட்டம், சவால்கள் என்பவற்றிற்கு முகம் கொடுத்து மீண்டும் செல்வம் கொழிக்கும் நாடாகவும், உலக அதிகார வர்க்கத்தை அச்சுறுத்தும் நாடாகவும் சீனா உள்ளது எனவும் அவர்களது கருத்து வெளிப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழலில் இடம் பெறுகின்ற ஒலிம்பிக் போன்ற சர்வதேச போட்டிகளில் நாடுகளிடையேயான அரசியல் சதுரங்கம் வெளிப்படையாகவே ஆடப்படுகின்றது.



கோவை நந்தன்...

# தொழில்சார் கல்வியியலாளர்கள் சங்க தேசிய சம்மேளனம் நாளை

ஜனாதிபதி தலைமையில், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ஆகியோரின் பங்களிப்புடன் கொழும்பிலுள்ள தாமரைத் தடாக அரங்கில் நாளை 16. 2 .2022 ஆம் திகதி அகில இலங்கை தொழில்சார் கல்வியியலாளர்கள் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய சம்மேளனம் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை தொழில்சார் கல்வியியலாளர்களின் சங்கம் ((APLA) இலங்கை பூராவும் விரிவடைந்துள்ள மேலதிக வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களின் கூட்டிணைப்பால் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பல்வகை நோக்கங்களுடன் கூடிய தேசிய அமைப்பாகும். தனியார் மேலதிக வகுப்புகள் துறையில் ஈடுபட்டுள்ள இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான ஆசிரிய ஆசிரியைகளுடன் தேசிய ரீதியாக, தொழில் ரீதியாக, முறையாக அமைக்கப்பட்ட வலையமைப்பின் வலுவான, பாரிய தொழில் அமைப்பு இதுவாகும்.

இந்த அமைப்பில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், பலவிதமான தொழில் நிபுணர்கள், அரச பாடசாலை ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் பலரும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். நாட்டின் கல்விக்காக பெரும் பணியாற்றும், நாட்டுக்கு சக்தியாக விளங்கும், வருமானவரி வழங்கி நடவடிக்கையில் ஈடுபடும் சங்கத்தினர் இவர்களாவர்.

நவீன மாணவர் சமூகத்துக்காக பலவிதமான சமூக நலத் திட்டங்களை மேற்கொண்டு கல்வியில் மறுமலர்ச்சியை எதிர்பார்க்கும் நாடு பூராவும் உள்ள மேலதிக வகுப்பு ஆசிரியர்களை ஒரே நிழலின் கீழ் கொண்டு வந்து அவர்களின் தொழில் உரிமைகளை பாதுகாக்கும் சுமையை தோள் மீது கொண்ட ஆசிரியர்களின் நலனை இலக்காகக் கொண்ட APLA நாட்டின் தொழில்சார் கல்வியியலாளர்களின் தேசிய அடையாளமாகும்.

அகில இலங்கை தொழில்சார் கல்வியியலாளர்களின் சங்கம் தனது நோக்காக தொழில் சகோதரத்துவத்தை, தொழில் கௌரவத்தை, தொழில் உரிமைகளை பாதுகாப்பது மற்றும் தேசிய மட்டத்தில் அந்நியோன்யத்தை வளர்ப்பது போன்ற பொறுப்புக்கள் மற்றும் கடமைகளைக் கொண்டது.

ஆசிரியர்களின் பங்கை செழுமையாகவும் மிகுந்த அர்ப்பணிப்புடனும், சிறந்த ஆசிரியர் ஆளுமையுடனும் தொழில் கௌரவத்துடன் யுகத்துக்கு தேவையான மனிதர்களாக தொழில்சார் கல்வியலாளர்களை வலுப்படுத்துவதே APLA இன் நோக்கமாகும்.

தொழில் பங்களிப்பை வழங்கும் இலங்கையின் அனைத்து தொழில்சார் கல்வியியலாளர்களின் தொழில் உரிமைகளை பாதுகாப்பதும் , அவர்களின் தொழில் பிரச்சினைகளின் முன்னால் குறிப்பிட்ட பிரிவினருடன் நேரடியாக தொடர்பாடலை ஏற்படுத்தி நிலையான தீர்வுகளை தொழில்சார் கல்வியியலாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதும், தனித்துவமான சமூக பணிக்கு பங்களிப்பை வழங்குபவர்களாக மாவட்ட மற்றும் பிரதேச அதிகார சபையுடன் ஒரே குடும்பமாக தொழில் சகோதரத்துவத்துடன் நடவடிக்கையில் ஈடுபடுவதும், தொழிலில் மற்றும் தொழில்சார் கல்வியியலாளர்களின் தொழில் கௌரவத்தை பாதுகாப்பதும், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வழங்குவதும், அங்கத்துவ சமூகத்தின் பொது அபிலாசைகளில் பாரபட்சமின்றி நடவடிக்கையில் ஈடுபடுவதும் இந்த அமைப்பின் பணியாகும்.



சமூகத்தில் அதிகமாக பேசப்படாவிட்டாலும் குறைந்த வருமானம் உடைய குடும்பத்தில் உள்ள பெருமளவான பிள்ளைகள் மேலதிக வகுப்புகள் மூலம் இலவசமாக கல்வி கற்பதோடு தொழில்சார் கல்வியியலாளர்கள் இலவசமாக பயிற்சி பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளையும் நடத்தி பணி புரிகின்றார்கள். இந்நாட்டில் கல்விக்கு சிறப்பான மற்றும் தரமான இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன் பல சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அகில இலங்கை தொழில்சார் கல்வியியலாளர்கள் சங்கத்தின் தற்போதைய தலைவர் கலாநிதி அமித் புஸ்ஸல்ல மற்றும் பொதுச் செயலாளர் கமல் பிரியங்கர தலைமையில் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இந்நாட்டில் மாணவர் சமுதாயத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சமூகப் பணிகள் ஏராளம். இலவச மேலதிகவகுப்பு ஆசிரியர்களின் பூரண பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சமூக வலுவூட்டல் மூலம் அனுராதபுரம் மாவட்டத்தின் தலாவ மற்றும் தம்புத்தேகம அரச பாடசாலைகளில் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்காக பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கன் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட கட்டுவாப்பிட்டிய பிரதேச பிள்ளைகள் மற்றும் பெரியோர்களுக்காக எமது சங்கத்தின் தற்போதைய ஆலோசகர் நிஹால் லியனகேவின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட சமூக நிவாரண திட்டங்கள் போன்று மொனராகலை மாவட்டத்தில் குறைந்த வருமானம் உடைய 10000 மாணவ மாணவிகளுக்காக பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் மாணவர்களை மையமாகக் கொண்ட திட்டங்களில் சிலவாகும்.

குடிநீர் மற்றும் விவசாய தேவைகளுக்காக நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருந்த வவுனியா நாமல்வெவ, போகஸ்வெவ பிரதேசவாசிகளுக்காக அங்கு தூர்ந்து போயிருந்த பழைய குளத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காக அமித் புஸ்ஸல்ல தனது சொந்தப் பணத்தில் இருந்து பணத்தை பெற்றுக் கொண்டதோடு போகஸ்வெவ மகாவித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறையை நிர்மாணிப்பதற்கான பெருமளவு பணத்தை பெற்றுக் கொடுத்ததை இங்கு நன்றியுடன் குறிப்பிட வேண்டும்.

கொரோனா தொற்று காலத்தில் அரச வைத்தியசாலைகளில் சுகாதார உதவிகளை பெற்றுக் கொடுக்க அகில இலங்கை தொழில்சார் கல்வியலாளர்கள் சங்கம் ஆசிரியர்களுடன் இணைந்து முன்வந்தது தாய்நாட்டிற்காக செய்ய வேண்டிய கடமையை நன்றாக எடுத்துக் காட்டியது.

கொரோனா காலத்தில் மேலதிக வகுப்புகள் மூடப்பட்டதால் மோசமான பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுத்திருந்த அங்கத்தவர்களான ஆசிரிய ஆசிரியைகளுக்கு அறிமுகம் செய்த APLAHNB கடன் திட்டத்தின் ஊடாக இதுவரை 40 கோடி ரூபாய் அளவில் பணத்தை பெற்றுக் கொடுத்துள்ளது. இந்த திட்டத்தை வெற்றியடையச் செய்ய தேசிய அமைப்பின் ஜகத் வீரமன் மற்றும் பிரதி பொருளாளர் சந்திக்க ஜீவநாத் ஆகியோர் பெரும்பணி ஆற்றியுள்ள தோடு ஏனைய திட்டங்களான BOC APLA கடன் நிவாரணத் திட்டம்,APLA Union assurance ஆசிரியர் காப்புறுதித் திட்டம்,,APLANawaloka hospital குரு அபிமான சுகாதார உதவி வேலைத்திட்டம் மற்றும்APLA SOLO சூரிய சக்தி திட்டம் என்பனவும் அவற்றுள் அடங்கும்.

கொரோனா அச்சுறுத்தலுடன் மிகவும் கஷ்டமான பாதையை APLA கடந்து வந்த வேளையில் மீண்டும் இலவச மேலதிக வகுப்புகளை ஆரம்பிக்க தேவையான சுகாதார வழிகாட்டல்களை தயாரித்து இலங்கை தொழில்சார் கல்வியியலாளர்கள் மீண்டும் மறுமலர்ச்சியை உருவாக்குவதற்காக பொருளாளர் அசங்க நிரோஷன் பெற்றுக் கொடுத்த சேவையை இங்கு நன்றியுடன் குறிப்பிடுகின்றோம்.

தங்கள் சொந்த நோக்கங்களை பின்தள்ளி அனைத்து அங்கத்தவர்களும் பொதுவான நோக்கங்களுக்காக அர்ப்பணிப்புடன் தற்போதைய அதிகாரிகள் சபை ஏனைய நிறைவேற்று அங்கத்தவர்களான நீல் சாந்த ஹேவகே, சஞ்சீவ ஹெட்டியாராச்சி ஆகியோருடன், அவர்களுக்கு பக்க பலமாக இருந்த அனைத்து மாவட்டங்கள் மற்றும் பிரதேச அதிகாரசபை அதிகாரிகளுக்கும்,அனைத்து அங்கத்தவர்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்க இதனை சந்தர்ப்பமாக கொள்கின்றோம். எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் ஒன்றுகூடி APLA சகோதரத்துவத்தை மேலும் பலப்படுத்திக் கொள்வோம்.

ஷானிக கிரிந்தெனிய...
பிரதிப் பொதுச் செயலாளர்
அகில இலங்கை தொழில்சார் கல்வியியலாளர்கள் சங்கம்
(தமிழில்: வீ.ஆர்.வயலட்)

# ஏழைகளின் உள்ளத்தைப் பெற்றிடுவோம்

ஏழை மனிதர் ஒருவர் வாழ்வில் ஒரு கட்டத்தில் பல்வேறு துன்பங்களைப் பொருளாதாரக் குறைவின் காரணமாக அனுபவித்தார். எந்நேரமும் கடவுளே தஞ்சம் என்று இருந்தார். ஒரு கட்டத்தில் அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது. கடவுள் புண்ணியத்தில் அவர் அந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். அதன் பிறகு படிப்படியாக அரசியலிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்தார்.

அவர் எந்த அளவுக்கு ஏழையாக இருந்தாரோ, அந்தளவுக்கு செல்வச் செழிப்பில் உயர்வடைந்தார். ஏழையாக இருக்கும் போது கடவுளைத் தேடிய அவர், பொருளாதாரத்தில் வளர்ந்த பிறகு பணத்திற்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்தார். கடவுளை மறந்து கட்டிடங்களைக் கட்டி பணம் சேர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

பல நேரங்களில் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் பொழுது இயேசு செல்வந்தரைக் கடுமையாகச் சாடுவதாகத் தெரியும். ஆனால் அதிலுள்ள உண்மையைப் புரிந்துகொள்ள நாம் முயல வேண்டும். இயேசு செல்வந்தரை வெறுப்பவர் அல்ல. செல்வம் தான் எல்லாம் என்று நினைப்பவர்கள் முன்னிலையில் தான் இயேசு தன்னுடைய கண்டனத்தையும் முன்வைக்கிறார்.




கடந்த ஞாயிறு நற்செய்தியில் சமவெளிப் பொழிவை வாசிக்கிறோம். மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவின் மலைப்பொழிவை எழுதியுள்ளார்.

ஆனால் லூக்கா நற்செய்தியாளர் இயேசுவின் சமவெளிப் பொழிவை எழுதியுள்ளார். மத்தேயு நற்செய்தியாளர் மலைப் பொழிவை பற்றி எழுதியதற்கு காரணம் யூத கிறிஸ்தவர்கள் மலைமேல் தான் கடவுளின் பிரசன்னம் இருக்கின்றது என்று நம்பிக்கை கொண்டிருந்தனர்.

லூக்கா நற்செய்தியாளர் ஏழைகளின் நற்செய்தியாளர். ஏழை எளிய மக்கள், பெண்கள், சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், பாவிகள் போன்றோருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

எனவேதான் தன்னுடைய நற்செய்தியில் இயேசுவின் சமவெளிப் பொழிவைச் சிறப்பாக எழுதியுள்ளார்.

இயேசுவின் சமவெளிப் பொழிவு ஏழைகளுக்கான அருளுரை. ஏழைகள் வளம் பெறவும் இறைநம்பிக்கை பெறவும் கடவுளின் ஆசீரைப் பெறவும் இவ்வார்த்தைகள் மூலம் வழிகாட்டியுள்ளார் லூக்கா. இயேசு ஏழைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தற்கான காரணத்தைப் பார்த்தால்,

ஏழைகள் தங்களுடைய வாழ்வில் பெரும்பாலும் கடவுளை மட்டுமே நம்புவர். செல்வர் தங்களிடம் இருக்கின்ற பணத்தை நம்புவர். கடவுளுக்கு முக்கியத்துவம் அளிப்பதை விட செல்வத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பர். தனக்கு செல்வம் அளித்ததே கடவுள் தான் என்பதை மறந்து இல்லாதவருக்கு பகிரும் பண்பை தொலைத்துவிடுவர். எனவேதான் பகிராத செல்வர்களை இயேசு வன்மையாகக் கண்டித்தார். கடவுளே தஞ்சம் என்று நினைத்த செல்வர்களை இயேசு நம்பிக்கை கொடுக்கும் விதமாகப் பாராட்டினார்.

ஏழைகளிடம் இன்னும் பல நல்ல பண்புகள் இருக்கின்றன. தாங்கள் வறுமையிலும் துன்பத்திலும் வாடுவதன் காரணமாக பிறருடைய துன்பத்தையும் வறுமையையும் எளிதில் புரிந்து கொள்கின்றனர் ஏழைகள்.

எனவேதான் துறவு நிலையில் மேற்கொள்கின்ற துறவிகள் "ஏழ்மை"என்ற வார்த்தைப் பாட்டை கடவுள் முன் கொடுக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் ஏழைகளாக வாழ்ந்து ஏழைகளின் துன்பங்கள் அறிந்து பணி செய்ய வேண்டும் என்பதற்காகவே. எனவே ஏழையரின் மனநிலையில் வாழ நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டுள்ளோம்.



கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் மனிதர் மேல் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் வலிமை காண்போரும் சபிக்கப்பட்டவர் என்று வாசிக்கிறோம். இது எதை சுட்டி காட்டுகிறதென்றால் மனிதர்கள் வலுவற்றவர்கள். எந்நேரத்திலும் அவர்கள் நம்மைக் கைவிடலாம் என்பதையே.

நாம் கடவுள் மீது ஆழமான நம்பிக்கை கொண்டு நீரோடை நோக்கி செல்லும் வேரைப் போல வாழமுயற்சி செய்ய வேண்டும். அப்போது நிச்சயமாக ஒரு மரத்தின் வேர் நீர் அருகில் இருக்கின்ற பொழுது செழிப்பாய் இருப்பது போல, நம்முடைய வாழ்வும் மாறும். வறட்சிமிகு ஆண்டிலும் அதற்குக் கவலை இராது; அது எப்போதும் கனி கொடுக்கும். எனவே நம்முடைய வாழ்க்கையில் பலன் கொடுக்க வேண்டுமெனில், கடவுள் மீது ஆழமான நம்பிக்கை வேரூன்ற வேண்டும்.

எனவே நம்முடைய அன்றாட வாழ்க்கையில் ஏழையரின் உள்ளத்தோடு வாழ்ந்து கடவுள் மீது ஆழமான நம்பிக்கை கொண்டு கடவுளின் ஆசீர்வாதத்தை முழுமையாகப் பெற்று வாழ முயற்சி செய்வோம். அத்தோடு பேராசை, ஆணவம், தற்புகழ்ச்சி இவற்றிலிருந்து முழு விடுதலை பெற்று இறைவனின் பிள்ளைகளாக மாறுவோம். ஏழைகளின் உள்ளத்தைப் பெற்றிடுவோம். ஏழைகளின் துன்பங்களை அறிந்து அவர்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்வோம்.

அருட்பணி
குழந்தை இயேசு பாபு...

---

## இன்றைய புனிதர்



# இயேசுவின் திருஇருதய பக்தி பாதுகாவலர் புனிதர் கிளாடி டி லா கொலொம்பியெர்

புனிதர் கிளாடி டி லா கொலொம்பியெர் இயேசு சபையைச் சார்ந்தவர் என்பதால் இயேசு சபையைச் சேர்ந்த துறவியர் மற்றும் குருக்களுக்கு இன்றைய தினம் ஒரு விஷேட தினமாகும். கிளாடி தமது சிநேகிதியும் ஆன்மீக துணையுமான "புனிதர் மார்கரெட் மேரி அலகோக்யூ'வுடன்" இணைந்து இயேசுவின் திருஇருதய பக்தியை பரப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். ஆகவே, இயேசுவின் திருஇருதயத்தின் மீது தீவிர பக்தி கொண்டுள்ளோர்க்கும் இன்றைய தினம் ஒரு விஷேட தினமாகும். புனிதர் கிளாடி டி லா கொலொம்பியெர்ஒரு இயேசு சபை குரு என்பதுடன் ஒப்புரவாளரும் துறவறம் சார்ந்த எழுத்தாளருமாவார். 1641ம் ஆண்டு பிரான்ஸில் பிறந்த கிளாடியின் தந்தை "பெர்ட்ரான்ட்" ஒரு பத்திர சான்றளிக்கும் அலுவலர் ஆவார். தாயாரின் பெயர் "மார்கரெடகொயெண்டர். 1658ம் ஆண்டு தமது பதினேழாம் வயதில் கிளாடி "அவிக்னான்" என்ற இடத்திலுள்ள இயேசு சபையின் துறவற மடத்தில் இணைந்தார். 1676ம் ஆண்டு கிளாடி அப்போதைய இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து நாடுகளின் அரசியான (Queen consort of England, Scotland and Ireland) "மேரி" (Mary of Modena) என்பவரின் போதகராக இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்பப்பட்டார். ஃபிரான்ஸ் நாட்டிலிருந்தது போலவே அங்கேயும் திறமையான மறை போதகராகவும் ஒப்புரவாளராகவும் செயல்பட்டார். தமது வாழ்க்கையின் கடைசி இரண்டு வருடங்களை லியோன் நகரில் செலவிட்ட கிளாடி கடும் நோய் காரணமாக 1682 பெப்ரவரி 15ஆம் திகதி இறையடிசேர்ந்தார்.

(ஸ)

---

# எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்தவர்களுக்கு கத்தோலிக்க திருச்சபை வழங்கும் புனிதர் பட்டம்

பொதுவாக ஒரு புனிதரின் திருநாள் அவரின் இறந்த நாளாகத் தான் இருக்கும். இறந்த நாள் தெரியாத போதும் ஒரே நாளில் பல புனிதர்களின் இறந்த நாள் இருப்பினும் வேறு சில தனிச்சிறப்பான காரணங்களாலும் வேறு நாட்களில் திருநாள் நிர்ணயக்கப்படுகிறது.

ஒருவரின் இறப்பு அவரின் நித்திய விண்ணக வாழ்விற்கு நுழைவாயிலாய் இருப்பதால், ஒரு புனிதரின் திருநாள் அவரது இறப்பு நாளன்று கொண்டாடப்படுகிறது

பொதுவாக ஒரு புனிதரின் இறந்த நாளை கொண்டாடும் திருஅவை, மூன்று நபர்களின் பிறப்பை கொண்டாடுகிறது.

இயேசு கிறிஸ்து – கடவுள், நம் மீட்பர்.

அன்னை மறியாள் – சென்ம பாவம் இல்லாமல் பிறந்ததால்.

திருமுழுக்கு யோவான் – கருவிலே தூய ஆவியாரால் தூய்மை அடைந்ததால். (லூக்கா 1:15, 41).அவரது இறப்பு ஆகஸ்ட் 29ஆம் நாள் நினைவு கூறப்படுகிறது.

கத்தோலிக்க திருஅவை புனிதர்களின் திருநாளை மூன்று விதமாக கொண்டாடுகிறது.

கத்தோலிக்க திருவையில் ஏன் புனிதர் பட்டம் கொடுக்கப்படுகிறது?

ஒரு எடுத்துக்காட்டான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்தவர்களுக்கு கத்தோலிக்க திருஅவையில் புனிதர் பட்டம் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்துவ விசுவாசத்திற்க்காக உயிர் நீத்தவர்கள், துன்பப்பட்டவர்கள், விசுவாசத்தைப் பாதுகாத்தவர்கள், விசுவாசத்திற்கு எடுத்துகாட்டாக வாழ்ந்தவர்கள், கத்தோலிக்க கோட்பாடுகளை சிறப்பாக பின்பற்றியவர்கள், கத்தோலிக்க கோட்டபாடுகளுடன் தொண்டு செய்தவர்கள் போன்றவர்களுக்கு புனிதர் பட்டம் கொடுக்கப் படுகிறது.

ஒருவர் இறந்த பின் பொதுவாக ஐந்து ஆண்டுகள் கழித்து தான் அவருக்கு புனிதர் வழங்குவது தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்படுகிறது. திருத்தந்தை ஒப்புதல் அளித்தால் ஐந்து வருடத்திற்குள்ளாகவே அவருக்கு புனிதர் பட்டம் வழங்குவது தொடர்பான வேலைகளை ஆரம்பிக்கலாம்.

புனிதர் பட்டத்திற்கான ஆரம்ப நிலைகள்;

இறை ஊழியர்,வணக்கத்துக்குரியவர், முத்திப்பேறு பெற்றவர் / ஆசிர்வதிக்கப்பட்டவர்,புனிதர் இறை ஊழியர்; ஒருவர் வாழ்ந்த,மறைந்த ஊரின் மக்கள்,துறவியர் அவர்களின் ஆயரிடம் அவருக்கு புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்று அவரைப் பற்றிய குறிப்புடன் கோரிக்கை வைக்கலாம். ஆயர் அந்த விண்ணப்பத்தை பரிசீலித்து புனிதர்களின் அலுவல்களுக்கான பேராயத்திற்க்கு (Congregation for the Causes of Saints) அனுப்பி வைப்பார். ஒருவருக்கு புனிதர் பட்டம் வழங்குவது தொடர்பான வேலைகளை ஆரம்பிக்கலாம் என்று ஒப்புதல் கிடைத்த பிறகு அவரை இறை ஊழியர் என்று அழைக்கலாம்.

வணக்கத்துக்குரியவர் ; ஒரு இறை ஊழியர் தூய்மையான கத்தோலிக்க வாழ்கை வாழ்ந்தார் என்று திருத்தந்தை அங்கீகரித்தால் அவர் வணக்கத்துக்குரியவர் என்று அழைக்கப்படுவார். முத்திப்பேறு பெற்றவர் ,ஆசிர்வதிக்கப்பட்டவர்; வணக்கத்துக் குரியவரின் பரிந்துரையால் புதுமை ஏதும் நடந்து அது திருஅவையால் கண்டுணரப்பட்டால் அவர் முத்திப்பேறு பெற்றவர், ஆசிர்வதிக்கப்பட்டவர் என்று அழைக்கப்படுவார்.



அவர் நிச்சயாமாக விண்ணகத்தில் இருக்கிறார் என்றும் பரிந்து பேசும் வல்லமை பெற்றவர் என்றும் திருஅவையால் உறுதி செய்யப்படும். வணக்கத்துக்குரியவர் வேத சாட்சியாக இருந்தால் புதுமை அவசியமில்லை. மாறாக அவர் விசுவாசத்திற்காக அல்லது பிறரின் நலனில் அக்கறை கொண்டு மனமுவந்து உயிர் துறந்தார் என்று திருத்தந்தையால் அறிவிக்கப்பட வேண்டும். இந்த அங்கீகாரம் வழங்குவதை, சான்றளித்தலை அருளாளர் பட்டம்,முத்திப்பேறு பட்டம் என்று அழைக்கப்படுகிறது.

புனிதர் – ஆசிர்வதிக்கப்பட்டவரின் பரிந்துரையால் மேலும் ஒரு புதுமை நடந்து அது அங்கீகரிக்கப்பட்டால் அவர் புனிதர் என்று திருத்தந்தையின் திருப்பலியின்போது அறிவிக்கப்படுவார். (ஸ)

---

# இலங்கையின் புனிதர் ஜோசப் வாஸ் அடிகளார்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

இலங்கைத் திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பை ஜோசப் வாஸ் அடிகளார் மேற்கொண்டபோது முக்கிய தீர்மானங்களை தன்னுடன் இருந்த ஏனைய குருக்களிடம் கலந்துரையாடியே முன்னெடுத்துள்ளார்.

குருக்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் பொறுப்பு வாய்ந்த பொது நிலையினரிடம் கலந்தாலோசித்து தீர்மானங்களை மேற்கொண்டார் என்பதை அவருடன் வாழ்ந்த குருக்கள் சான்று பகர்கின்றன.



ஜோசப் வாஸ் அடிகளார் 1687 முதல் தனியொருவராகவே பணியாற்றினார். மிக நெருக்கடியான சூழ்நிலைகளில் தன்னுடைய பணியை பொதுநிலையினரின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக மேற்கொண்டார்.

ஜோசப் வாஸ் அடிகளாரும் ஏனைய ஒறற்றோரியன் சபை குழுக்களும் தங்கள் பணிகளை திட்டமிட்டபடி செயற்படுத்துவதற்கும் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கவும் மூப்பர்கள் அண்ணாவிமார் போன்றோரின் செயற்பாடுகள் உதவியாக அமைந்தன.

மக்களும் அவர்களை தம் தலைவர்களாக ஏற்று அவர்களுக்கு தமது ஒத்துழைப்புகளையும் மதிப்பையும் அதிகமாக வழங்கினர்.

இந்த நடைமுறை போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே தொடர்ந்தது. ஜோசப் வாஸ் அடிகளார் சில்லாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மூப்பர்களின் கண்காணிப்பில் விடப்பட்டமை அதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

ஜோசப் வாஸ் அடிகளாரும் எனைய குருக்களும் மறை தூதுப் பயணங்களை மேற்கொண்டபோது ஒல்லாந்த அதிகாரிகளால் பல்வேறு எச்சரிக்கைகள், உயிர் ஆபத்துக்கள், தண்டனைகளையும் எதிர்நோக்க நேர்நதது.அந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அந்தந்த பகுதி மக்கள் அவர்களுக்கு தமது குடிசைகளில் புகலிடம் வழங்கி கண்காணித்து வந்தனர்.

ஜோசப் வாஸ் அடிகளாரின் இலங்கை வருகையின் 200 ஆண்டுகள் நிறைவை நினைவு கூரும் வகையில் இலங்கை அரசாங்கத்தினால் சிறப்பு முத்திரை வெளியிடப்பட்டது.இம் முத்திரையில் இடம்பெற்ற ஓவியத்தில் அவருக்கு அருகில் ஆயர்களுக்கு உரிய செங்கோலும் ஆயர்கள் அணியும் கிரீடமும் காணப்படுகின்றன. தாழ்ச்சியையே அதிகம் விரும்பிய ஜோசப் வாஸ் அடிகளார் ஆயர் பதவியையோ அதனோடு இணைந்த புகழையோ விரும்பவில்லை. ஜோசப் வாஸ் அடிகளாருக்கு சிங்களபௌத்த மன்னர்களின் ஒத்துழைப்பும் கிடைத்தது.

ஜோசப் வாஸ் அடிகளார் ஏனைய மதங்கள் தொடர்பில் பெரும் மதிப்புடன் செயல்பட்டார் சுதேச மதங்களுடனோ அல்லது மக்களுடன்னோ முன்தொடர்பற்ற.நிலையில் ஆசிய மக்கள் பற்றிய தவறான கருத்தியலின் பின்னணியிலேயே போர்த்துக்கேய குழுக்கள் தம் பணியை மேற்கொண்டனர்.

எனினும் ஜோசப் வாஸ் அடிகளார் கத்தோலிக்க சூழல் நிறைந்த கோவாவில் பிறந்து வளர்ந்ததாலும் கன்னடத்தில் பணியாற்றிய காலத்தில் கிடைத்த அனுபவங்களின் வழியிலும் இந்து சமயத்தவர்களின் ஆன்மீகம், மதப்பற்று, வாழ்க்கை முறை பற்றி நன்கு அறிந்திருந்தார்.

அந்த மக்களின் உணர்வுகளை மதித்து செயற்பட்டார். பௌத்த மன்னர்கள் அவருக்கு வழங்கிய கௌரவமும் மரியாதையும் அதற்கு சிறந்த சான்று.

## 2021இல் சிறந்த நபராக...

இருதரப்பு உறவுகளுக்காக '2021 ஆம் ஆண்டின் சிறந்த நபர்களில்' ஒருவராக தேர்ந்தெடுத்துள்ளது.

உலக வளர்ச்சி மன்ற இதழ் 2021ஆம் ஆண்டில் உலகின் நேர்மறையான வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான பாத்திரங்களை வகித்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த நபர்களைத் தேர்ந்தெடுத்துள்ளதுடன், 'இராஜதந்திரம் மற்றும் இருதரப்பு உறவுகளில் மைற்கற்களை உருவாக்குதல்' என்பதற்காக 2021ஆம் ஆண்டின் உலக வளர்ச்சி மன்ற நபராக தூதுவர் அமீர் அஜ்வத் தேர்தெடுக்கப்பட்டார்.

இந்த இதழ் தனது ஜனவரி 2022 இதழில் தூதுவர் அமீர் அஜ்வத்துடனான ஒரு பிரத்தியேக நேர்காணலை வெளியிட்டுள்ளது.

ஒரு இலாப நோக்கற்ற அறக்கட்டளையான உலக வளர்ச்சி மன்ற இதழ், உலகத் தலைவர்களை நேரம்றையான உலக வளர்ச்சிக்கான சிறந்த ஒரு தளத்திற்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலக வளர்ச்சி மன்றம், அனைத்து பிரிவுகள், சமூகங்கள், பொருளாதாரங்கள், பிராந்தியங்கள், நாடுகள் மற்றும் கண்டங்களுக்கு இடையே எல்லா நேரங்களிலும் அமைதி, செழிப்பு மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்யும் நோக்குடன் பல நாடுகளில் அதன் இருப்பு மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்கு வகிக்கின்றது. உலக வளர்ச்சி மன்றத்தில் 85க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 25,000க்கும் மேற்பட்ட வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் உள்ளன.

அமீர் அஜ்வத் நீண்டகாலமாக இராஜதந்திர பணிகளில் ஈடுபட்டு வருவதோடு பல நாடுகளில் சேவையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விலை சூத்திர பத்திரம்...

உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ளதை தொடர்ந்து பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டும் எனவும் விலை அதிகரிக்காமல் இருப்பதனால் ஒரு லீட்டர் டீசல் விற்பனையின்போது 50 ரூபா நட்டத்தையும் ஒரு லீட்டர் பெற்றோல் விற்பனையின் போது 16 ரூபா நட்டத்தையும் கூட்டுத்தாபனம் எதிர்கொள்கிறது.

இவ்வாறான பின்னணியில் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க கடந்த 7ஆம் திகதி நிதியமைச்சிடமும் வலுசக்தி அமைச்சிடமும் வலியுறுத்தினார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விடுத்த கோரிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பில மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## 2300 கொள்கலன்கள் துறைமுகத்தில்...

சங்கம் தெரிவித்துள்ளது. அது தொடர்பில் நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் அவற்றை விடுவிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக அந்த அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் மேற்படி சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவிக்கையில்:

மேற்படி கொள்கலன்களில் அரிசி, பருப்பு உட்பட பல்வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்களும் உள்ளடங்குவதாக குறிப்பிட்டார்.

எவ்வாறெனினும் பெரிய வெங்காயம் உருளைக்கிழங்கு போன்றவற்றை விரைவாக விடுவிக்காவிட்டால் அவை பழுதாகிவிடும் என்பதையும் குறிப்பிட்டுள்ள அவர், அவற்றை மிக விரைவாக விடுவிப்பது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாகவே மேற்படி அத்தியாவசியப் பொருட்களை துறைமுகத்தில் இருந்து விடுவிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அது தொடர்பில் நிதியமைச்சு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## ஊடகவியலாளர் சமுதித்த...

நடத்தியவர்கள் வீட்டின் மீது கற்களை வீசி தாக்கியதாக சமுதித்த சமரவிக்ரம மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல தடவைகள் துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதாகவும், அதன் பிரகாரம் பொலிஸார் வந்து வீட்டுத் திட்டத்தைச் சூழவுள்ள பகுதிகளில் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறித்த தாக்குதல் தொடர்பான சீ.சீ.ரீ.வி காணொளிகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹிரு தொலைக்காட்சியின் 'பத்தரே விஸ்தரே' என்ற பத்திரிகை விவரண நிகழ்ச்சி மற்றும் 'சலகுண' என்ற அரசியல் உரையாடல் நிகழ்ச்சிகளை சமுதித்த நெறியாள்கை செய்து வருகிறார்.

அத்துடன் அரசியல் பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகளை நோக்கி நேரடியாக கேள்விக்கணைகளை தொடுக்கும் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் அவர் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## துரித விசாரணை நடத்துமாறு...

குழுக்கள் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பிலியந்தலை, வேவலயில் அமைந்துள்ள ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நேற்று (14) அதிகாலை வெள்ளை நிற வானில் வந்த இனந்தெரியாத குழுவினர் முகமூடி அணிந்து தாக்குதல் நடத்தியுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

அடுக்குமாடி குடியிருப்பின் பாதுகாவலரை துப்பாக்கியை காட்டி மிரட்டி, பாதுகாப்பு அறையில் அடைத்து வைத்து தாக்குதல் நடத்தியதாக பொலிசார் தெரிவித்தனர்.

நான்கு பேர் கொண்ட குழுவொன்று சிறிய வெள்ளை வானில் வந்ததாகவும், பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு ஆயுதத்தை காண்பித்து அச்சுறுத்தி அவரை தடுத்து வைத்ததாகவும் அறிய வருகிறது. அவர்களில் ஒருவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு அருகில் தரித்திருந்ததாகவும், ஏனைய மூவரும் சமரவிக்ரமவின் வீட்டிற்கு முன்னால் சென்று கற்கள் மற்றும் மலத்தை வீசியதாகவும் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த வளாகத்தில் 100க்கும் மேற்பட்ட வீடுகள் இருப்பதாகவும், திட்டமிட்டபடி சந்தேகநபர்கள் சமுதித்தவின் வீட்டை ஏன் இலக்குவைத்து தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் தொடர்பில் சந்தேகிக்கவேண்டியிருப்பதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலால் சமுதித்தவின் இரண்டு மாடி வீட்டின் கண்ணாடி ஜன்னல்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சிசிடிவி காட்சிகள் மற்றும் பிற தகவல்களின் மூலம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## 31 தமிழக மீனவரை விடுவிக்க...

பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு, தாக்கப்பட்டு வரும் நிலையில், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகைய அச்சமூட்டும் சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்வது தமிழக மக்களுக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்துகின்றன. இரண்டு இயந்திர மீன்பிடிப் படகுகளில் மீனவர்கள் ராமேஸ்வரம் தளத்திலிருந்து மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்றநிலையில், ஞாயிற்றுக்கிழமை (13) அதிகாலை இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு தலைமன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 2 வாரங்களில் இவ்வாறு நடந்துள்ள மூன்றாவது சம்பவம் இது என்பதையும், தற்போது வரை, தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் 41 பேரும் 6 மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையின் வசம் உள்ளதையும் உங்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதுமான நிகழ்வுகள் தமிழக மீனவர் சமூகத்திடையே, குறிப்பாக பாக். நீரிணைப் பகுதியில் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்தியுள்ளதுடன் மீனவர்களின் வாழ்வாதாரங்களை மோசமாகப் பாதித்துள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகளின் வாயிலாக, நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் இந்த எரிச்சலூட்டும் சிக்கலுக்கு நிலையான தீர்வைக் காண வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

அதன் தொடக்கமாக இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கரோனா தீவிரம் குறைந்துள்ள தற்போதைய நிலையில், கூட்டுச் செயற்குழுக் கூட்டம் மூலம் பேச்சுவார்த்தைகளை உடனடியாக மீண்டும் தொடங்க வலியுறுத்துகிறேன்.

அதனுடன் தமிழகத்தைச் சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு கோருகிறேன்.

## வரி நிவாரணமா...

அல்லது எரிபொருள் விலையை அதிகரித்தல் இரண்டிலொன்றை மேற்கொள்ளுமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி அமைச்சிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

அதுதொடர்பில் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கையில், தற்போது எதிர்கொள்ள நேர்ந்துள்ள சூழ்நிலையின் கீழ் தற்போதுள்ள விலையில் எரிபொருளை முன்னெடுக்க முடியாது என்றும் அதனால் பாரிய நட்டத்தை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுமக்கவேண்டியுள்ளதாகவும் கூட்டுத்தாபனம் நிதியமைச்சுக்கு தெரிவித்துள்ளது.

நிதி பற்றாக்குறை நிலவுமிடத்து எதிர்வரும் காலங்களில் டொலரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சவாலை எதிர்கொள்ள நேருமென்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் எரிசக்தி அமைச்சின் உயரதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக நாட்டுக்குத் தேவையான எரிபொருளை கொள்வனவு செய்வதில் நெருக்கடி நிலை ஏற்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிலையை கவனத்திற்கொண்டு எரிபொருளுக்காக விதிக்கப்பட்டுள்ள வரியில் நிவாரணம் வழங்குமாறும் அல்லது எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதியமைச்சை கேட்டுக்கொண்டுள்ளது. இந்த வேண்டுகோள் தொடர்பில் விரைவான நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் கூட்டுத்தாபனம் நிதியமைச்சை கேட்டுக்கொண்டுள்ளது.

அதேவேளை, IOC நிறுவனம் கடந்த 6 ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களுக்கான விலைகளை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார சபைக்கு இந்தியாவிலிருந்து...

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கம் இலங்கை மின்சார சபைக்கு எரிபொருளை வழங்க சம்மதம் வெளியிட்டால், இலங்கை மின்சார சபை அல்லது IOC மூலம் அதைச் செய்ய முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார். கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இந்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## EPF வரி அறவீடு...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியியும் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் முக்கியமான அமைச்சர்கள் நேற்றைய தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அது தொடர்பில் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மேற்படி வரி அறவிடலுக்கு எதிராக வர்த்தக வளையத்தின் ஊழியர்கள் தேசிய மத்திய நிலையம் அதன் கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளது.

மோசமான பொருளாதார நிலை காரணமாகவே மேற்படி வரியை அறவிடுவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ஸ)

## ஜெனீவாவில் நீதி கிட்டும்...

அந்த அறிக்கை தொடர்பாக மார்ச் 03 அன்று விவாதிக்கப்படும். ஜெனீவா மாநாட்டில் நீதி கிடைக்கும் என்ற பெரும் நம்பிக்கையுடன் தான் நாம் கலந்து கொள்கிறோம். இலங்கையுடன் நட்புறவுடன் செயல்படும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்ற நாங்கள் எப்போதும் தயாராகவே உள்ளோம். அந்த பாணியில் வேலை செய்வதன் மூலம் இந்த பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்று நம்புகிறோம். 49வது அமர்விற்கு நான் இந்த விடயத்தை தான் முன்வைக்க எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுன தலைமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டே புலிகளும் இராணுவப் படையும் போரிட்டதாகவும் இராணுவத்தினர் சர்வதேச நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய தேவை கிடையாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். யுத்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. எமது படையினர் சர்வதேச சட்டங்கள் ,சர்வதேச மனிதாபிமான சட்டம் ,சர்வதேச மனித உரிமை சட்டம் என்பவற்றுக்கு உட்பட்டே செயற்பட்டார்கள்.இந்த விடயத்தில் எமது அரசு தௌிவுடன் செயற்படுகிறது எனவும் அமைச்சர் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த மாத இறுதி வாரத்தில் இலங்கை குழு ஜெனீவா செல்ல உள்ளதோடு அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், அலி சப்ரி மற்றும் உயரதிகாரிகள் இதில் கலந்து கொள்ள உள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## உக்ரேனில் இலங்கையர்...

நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரேனில் நெருக்கடி நிலை தோன்றியுள்ள நிலையில் சர்வதேச நாடுகளிலிருந்து பல்வேறு காரணங்களுக்காக அங்கு தங்கி யுள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு உரிய அறிவுறுத்தல்களை அந்தந்த நாடுகள் வழங்கியுள்ளன. அதற்கிணங்க அந்த நாட்டில் இலங்கையர்கள் 42 பேர் வசிப்பதுடன் அவர்களின் ஏழு பேர் மாணவர்கள் என்றும் அவர்களுக்கு எந்தவித சிக்கல்களும் கிடையாது என்பதையும் வெளிநாட்டு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. உக்ரேனில் இலங்கை தூதுவராலயம் இல்லாதபோதும் துருக்கியின் அக்காறா பிரதேசத்திலுள்ள தூதுவராலயத்தின் ஊடாக தேவையான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் வெளிநாட்டு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.(ஸ)

## சீமெந்துக்கான தட்டுப்பாடு...

அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

தற்போது துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்களுக்கு தாமதக்கட்டணம் இன்றி விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். பண்டிகைக் காலத்தில் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

## ஊருக்குள் புகுந்த யானை;...

வீடுகளையும் மற்றும் தென்னை மரங்கள், வாழை மரங்கள் முதலானவற்றை உடைத்தும், சேதப்படுத்தியும் உள்ளன. இதனால் தாம் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகரும், தென்னைச் செய்கையாளர்களும் தெரிவிக்கின்றனர்

அத்துடன் தென்னந் தோட்டத்துக்குள் புகுந்த யானைகள் சுமார் 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளதாக தெரிவித்தனர். வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த நெல்லை உட்கொண்டதுடன் வெளியில் வீசி சேதப்படுத்தியுள்ளன.

## பிம்ஸ்டெக் மாநாடு...

18 ஆம் திகதி இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 7 நாடுகளின் பங்கேற்புடன் நடைபெறும் பிம்ஸ்டெக் மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர்: இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதுடன் அவர் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

அதேவேளை, எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது. 7 நாடுகளைக் கொண்ட பிம்ஸ்டெக் அமைப்பின் தலைமைப் பதவியை தற்போது இலங்கை கொண்டுள்ளது. மாநாட்டில் பங்கேற்பதற்காக மேற்படி 7 நாடுகளின் தலைவர்களுக்குமான அழைப்பை இலங்கை அரசாங்கம் விடுத்துள்ளது. (ஸ)

## கோப் குழு முன்னிலையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

லொத்தர் சபை மார்ச் 10ஆம் திகதியும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மார்ச் 11ஆம் திகதியும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன. மார்ச் 23ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியும், மார்ச் 24ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்தி சபையும், மார்ச் 25ஆம் திகதி மக்கள் வழங்கியும் அழைக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான கோப் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றதுடன், இதில் கோப் குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

## O/L சித்தியடையாத... (03 ஆம் பக்கத் தொடர்)

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் உள்வாங்கப்படுவர்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தகைமை பெறாத மாணவர்கள் பிரதேச செயலக மட்டத்தில் இனங்காணப்பட்டு அவர்களின் திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## உலகில் 41 கோடி... (03 ஆம் பக்கத் தொடர்)

உள்ளது. இதற்கு அடுத்தபடியாக இந்தியாவும் பிரேசிலும் உள்ளன.

இந்தியாவில் 42,586,544 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 507,981 பேர் பலியாகியுள்ளனர். பிரேசிலில் 27,434,286 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலி எண்ணிக்கை 638,346 ஆக உள்ளது.

## காலி கோட்டை... (03 ஆம் பக்கத் தொடர்)

கோட்டைக்கு வருகை தந்து குறித்த பீரங்கிகளின் மேல் ஏறி, புகைப்படங்கள் எடுக்க முற்பட்டதன் காரணமாக இந்த பீரங்கிகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சமுதித்தவின் வீட்டின்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக கடந்த காலங்களில் குற்றங்கள் இழைத்தவர்கள் இன்னும் சட்டத்தின்முன் நிறுத்தப்படாமல், சுதந்திரமாக உலாவருவதும் இப்படியான தாக்குதலுக்கு ஆசிர்வாதமாக அமைவதாக எமது சங்கம் கருதுகின்றது.

ஊடகவியலாளர் சமுதித சமரவிக்கிரவின் வீடுமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து, குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சமுதித சமரவிக்கிரமவின் ஊடகப் பணி தொடர்பில் ஏதேனும் தரப்பினருக்கு பிரச்சினை இருப்பின், அது தொடர்பில் நாட்டின் சட்டத்திற்கு அமைவாக உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். அதைவிடுத்து ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகைய கோழைத்தனமான தாக்குதல்லை எமது சங்கம் வன்மையாகக் கண்டிகின்றது. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க இலங்கையிலும் சர்வதேச அளவிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள எமது சங்கம் தயங்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவிடமிருந்து மேலும்...

கடன் சலுகையின் கீழ் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அதற்கான உடன்படிக்கை கைச்சாத்து இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டிற்குத் தேவையான உணவுப்பொருட்கள், மருந்துப்பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவிலிருந்து பெறப்படும் மேற்படி நிதி செலவிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயம் வெற்றியளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர், அதன்போது 2.4 பில்லியன் அமெரிக்கன் டொலரை கடனுதவியாக பெற்றுக்கொள்வதற்கு முடிந்துள்ளது எனவும் அதன் முதற்கட்டமாகவே இந்த ஒரு பில்லியன் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்து இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இந்தியா பல்வேறு வகையில் உதவி ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது. நான் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது அது உறுதிப்பட்டது. இந்தியா 2.4 பில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கவுள்ளது. அதுமட்டுமன்றி நாடு எதிர்கொள்ளும் அனைத்து நெருக்கடி நிலைமையின் போதும் இந்தியா எமக்கு நிதி மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கிவந்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி நிலையின்போது முதற்தடவையாக ஐந்து இலட்சம் தடுப்பூசிகளை எமக்கு பெற்றுத் தந்ததும் இந்தியாவே. அதேபோன்று பேர்ல் எக்ஸ்பிரஸ் கப்பல் தீ அனர்த்தத்தின் போது ஏற்பட்ட பாதிப்புகளை குறைப்பதற்காக இந்தியா மிக விரைவாக எமக்கு உதவியது. இந்தியா மட்டுமன்றி சீனா, பங்களாதேஷ், குவைட் நிதியம், சவுதி நிதியம் போன்ற நாடுகள் மற்றும் நிதியங்கள் எமக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. இது இயல்பாக இடம்பெறக்கூடிய ஒன்றல்ல. இலங்கையின் சிறந்த வெளிநாட்டு கொள்கை காரணமாகவே இந்த உதவிகளும் ஒத்துழைப்புகளும் நாட்டுக்கு கிடைத்துள்ளன.

அதேபோன்று எமது நாட்டுக்கு வருகைதரும் உல்லாச பிரயாணிகளில் 1/3 பகுதியினர் இந்தியாவிலிருந்தே வருகை தருகின்றனர். அதேபோன்று உல்லாசபிரயாண ஹோட்டல் துறையில் முதலீடுகளை மேற்கொள்ளவும் இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதி பொருட்களுக்கான இரண்டாவது பாரிய சந்தையாகவும் இந்தியா காணப்படுகின்றது. இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி அவரது தனிப்பட்ட திட்டமாக ஆரம்பித்துள்ள கருத்திட்டத்திற்கென 15 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை உபயோகித்து தனியான நிதியத்தை உருவாக்கியுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## வன்முறையற்ற உலகுக்கான...

'உலக அமைதி மாநாடு 2022' இல் கலந்துகொண்டு பிரதமரின் பாரியார் இவ்வாறு வலியுறுத்தினார்.

மூன்று தினங்கள் நடைபெறும் இம்மாநாடு கடந்த 11ஆம் திகதி ஆரம்பமானதுடன், 150இற்கும் அதிகமான உலக நாடுகளை சேர்ந்த மதத் தலைவர்கள், இராஜதந்திரிகள், அமைதிக்கான ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வெளியுறவுக் கொள்கை ஆய்வாளர்கள் பலரும கலந்து கொண்டனர்.

மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றுகையில்,

“உலக அமைதி மிகுந்த ஆபத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் உலக அமைதி குறித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள என்னை அழைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகளாவிய அமைதி சம்மேளனம் போன்ற அமைப்புகள் ஸ்தாபிக்கப்பட்டதன் விளைவாக, மனிதகுலம் எதிர்கொள்ளும் அனைத்து சவால்களுக்கும் எதிராக போராடி, எதிர்காலத்தில் நாம் எதிர்பார்க்கும் முழு அமைதியை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உலகளாவிய அமைதி சம்மேளனம் என்பது அனைவரும் சுதந்திரமாக வாழக்கூடிய அமைதியான உலகத்தை உருவாக்க அர்ப்பணித்த தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் உலகளாவிய வலையமைப்பாகும். சகிப்புத்தன்மையின் ஊடாக ஏற்படும் ஒத்துழைப்பு நெறிமுறைகளின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதுடன் அது சுபீட்சத்திற்கு வழிவகுக்கிறது.

வெள;வேறு மதங்களைச் சேர்ந்தவர்களிடையே பாகுபாடு இல்லாமையானது நேர்மையான நீதி மற்றும் உலகளாவிய அமைதிக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய அணுகுமுறையை உருவாக்குகிறது.

உலக அமைதி என்பது வன்முறை இல்லாத உலகத்திற்கான அபிப்பிராயமாகும். அங்கு தேசங்கள் ஒன்றுக்கொன்று அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் பணியாற்ற முயல்கின்றன.

உலகளாவிய அமைதி சம்மேளனம் இதுவரை கொரிய தீபகற்பத்தில் அமைதியை மேம்படுத்த பல்வேறு வழிகளில் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மதம் மற்றும் கலாசாரத்தின் பங்கை மறுசீரமைத்தல் மற்றும் எதிர்கால தலைமுறை தலைவர்களின் வளர்ச்சி, அத்துடன் பெண் தலைமைத்துவத்தை ஆய்வுசெய்தல் மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவை உலக அமைதிக்கான மதிப்பைக் அதிகரித்துள்ளன.

உலக அமைதி என்பது வேறு வழியில் வெளிப்படுத்தப்படும் மகிழ்ச்சிக்கான கோட்பாடு மற்றும் அபிப்பிராயமாகும். அனைத்து தேசங்களும் இனங்களுக்கு இடையில் சுதந்திரம் மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் மோதல்கள் மற்றும் போரைக் குறைப்பதற்கும் பங்களித்துள்ளது.

உலக அமைதியின் இருப்பு நாடுகளுக்கும் இனங்களுக்கும் இடையிலான உள்ளக மோதல்களையும் குறைக்கிறது.

பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித மேம்பாட்டிற்காக நாம் முன்னெடுக்கும் அமைதிப் பயணம், உலக அமைதி மற்றும் சமூக செழுமை ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதில் தெளிவாகப் பங்களித்துள்ளது.

சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்படாவிட்டாலோ அல்லது சரியாக நிலைநாட்டப்படாவிட்டாலோ பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கலாசார வளர்ச்சி சாத்தியமாகாது என்பது எனது நம்பிக்கை எனவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார விதிமுறைகளுக்கமைய மாத்தளை தேர்த் திருவிழா

# இறுக்கமான சுகாதார நடைமுறையை பேண மாவட்ட அரச அதிபர் கூட்டத்தில் முடிவு

**உக்குவளை விஷேட நிருபர்**



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக தேர் திருவிழா அரசாங்கத்தின் சுகாதார கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர் தேஜானி திலகரத்ன தலைமையில் நேற்று முன்தினம் (13) மாத்தளை அரச அதிபரின் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் பல முடிகள் எட்டப்பட்டன. அதன்படி மேற்படி தேர் திருவிழாவிற்கு மாத்தளை நகருக்கு எவ்வித காரணங் கொண்டும் வெளி மாவட்டத்தினர் அனுமதிக்கபடமாட்டார்கள் எனவும் தேர்திருவிழா சம்பந்தமான சகல பூஜைகளும் 17ம் திகதி காலை தொடக்கம் மாலை வரை ஆலய வளாகத்துக்குள் மாத்திரம் இடம்பெறும் எனவும் ஆலயத்துக்கு வெளியே தேர் செல்லும் மாத்தளை பிரதான வீதி, இராஜ வீதிகளில் எந்தவித பூஜைகளும் இடம்பெறமாட்டாது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி தேர் திருவிழா இம்மாதம் 17ம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருக்கும் 5 தேர் ஊர்திகளும் 17ம் திகதி இரவு 9.00மணிக்கு ஆலயத்தை விட்டும் வெளியேறி மாத்தளை பிரதான வழியாக வலம் வந்து இராஜ வீதி வழியாக 18ம் திகதி காலை 5 மணிக்கு மீண்டும் ஆலயத்தை சென்றடைய வேண்டுமென இங்கு இறுக்கமான முடிவு எடுக்கப்பட்டது.

அம்மன் ஆலயத்திலிருந்து வீதி உலா வரும் முதல் 3 தேர் ஊர்திகளுக்கும் தேரை இலுத்துச் செல்ல தலா 100 பக்தர்கள் வீதம் 300 பேரும் அதை தொடர்ந்து வரும் 2 தேர்களுக்கு தலா 200 பக்தர்கள் வீதம் 400 பேர்களாக மொத்த 700 பேர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்ட 700 பேரும் கொவிட் தடுப்புக்கான மூன்று தடுப்பூசிகளை பெற்றிருக்க வேண்டுமென்பதும் அதற்கான சான்றிதழ்கள் தன்னகத்தே வைத்துக்கொள்ள வேண்டுமெனவும் மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய விடயங்களாகும்.

தேர்களின் வீதி உலாவின் போது வீதி ஓரங்களில் இருந்து பூஜை தட்டு வழங்குவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் பாதை இருமருங்களிலும் கூட்டம் கூட்டமாக நின்று சுகாதார வழிமுறைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் தேர் ஊர்திகளை தர்சிப்பதும் பார்வையிடுவதும் முற்றாக தடை செய்யபடவேண்டுமெனவும் இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட இன்னொரு முடிவாகும்.

தேர்திருவிழா இடம்பெறும் 17ம் திகதி மாலை தொடக்கம் 18ம் திகதி காலை 5 மணிவரை தேர்திருவிழா சம்பந்தமான ஒளிவாங்கிகள் மூலமாக எந்த விதமான பிரசார விடயங்களும் இடம்பெற கூடாது எனவும் கடந்த வருடங்களை போன்று இம்முறை தேர்திருவிழாவை முன்னிட்டு விசேட வீதி ஓர வர்த்தகங்கள் இடம்பெற கூடாது எனவும் கூட்டத்தில் முக்கியமாக முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி முடிவுகள் அனைத்தும் அரச அதிபர் தேஜானி திலகரத்ன தலைமையில் இடம்பெற்ற போது மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபை தலைவர் சேதுராமன் சர்வானந்தா உட்பட ஆலய உறுப்பினர்களும், மாத்தளை பாராளுமன்ற உறுப்பினர்களான நாலக்க கோட்டேகொட, ரோஹண குமார திசாநாயக்க, மாத்தளை மாவட்ட கொவிட் தடுப்பு சுகாதார விசேட வைத்திய நிபுணர் டாக்டர் வசந்த, மாத்தளை மாநகர முதல்வர் சந்தன பிரகாஸ், மாத்தளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அனுருத்த பண்டாரநாயக்க உட்பட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## Mercedes-Benz Service Excellence – பிராந்திய விருது வழங்கும் விழாவில் DIMO ஆதிக்கம்




சமீபத்தில் நடைபெற்ற Mercedes-Benz Service Excellence - பிராந்திய விருது வழங்கும் விழாவில், DIMO, பொது விநியோகஸ்தர் பிரிவில், பிராந்தியத்தில் உள்ள ஏனையவர்களை வெற்றி கொண்டு, Mercedes-Benz AG இன் மதிப்புமிக்க "General Distributor Award" விருதை மீண்டும் ஒருமுறை பெற்றுள்ளது. வாடிக்கையாளர்களின் உச்ச திருப்தி சுட்டெண் மற்றும் நிகர ஊக்குவிப்பாளர் புள்ளிகளைப் பெற்றுள்ளதன் மூலம், DIMO புதிய தரநிலைகளை உருவாக்கியுள்ளதுடன், பிராந்திய சேவையில் சிறந்து விளங்குகிறது. இதன் விளைவாக DIMO பிராந்தியத்தில் உள்ள பொது விநியோகஸ்தர்களுக்கு மத்தியில் சிறந்த சேவைக்கான விருதைப் பெற்றுள்ளது.

Mercedes-Benz Service Excellence - பிராந்திய விருது வழங்கும் விழாவானது, DIMO வின் Mercedes-Benz சேவை வழங்கலின் மூன்று உறுப்பினர்களான ஹிருண் கோரளகே, அமந்த யாப்பா, 'ஹிந்த வாசலதந்திரிகே ஆகியோரை கௌரவித்து, பிராந்தியத்திலுள்ள "Top Service Advisers of the Year" (ஆண்டின் சிறந்த சேவை ஆலோசகர்களாக) அங்கீகரித்துள்ளது. இவர்கள் பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் இவ்விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் சேவையில் சிறந்து விளங்கி, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதில் தங்களது உயர்ந்த தொழில்துறை ரீதியிலான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளதன் மூலம், இந்த இடத்தை அடைந்துள்ளனர்.

DIMO நிறுவனத் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே இது தொடர்பில் தெரிவிக்கையில், "இலங்கையில் Mercedes-Benz வாகனங்களுக்கு DIMO மட்டுமே நம்பகமான இடம் என்பதை எமது தொடர்ச்சியான வெற்றிகள் வெளிப்படுத்துகின்றன. நாம் சேவை செய்யும் பிரிவினரின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளுக்கு ஊக்கமளிக்கும் எமது நோக்கத்தின் அடிப்படையில், வாடிக்கையாளர்களின் உச்சபட்ச மகிழ்ச்சியை உறுதி செய்வதில் DIMO வின் ஆர்வத்தையும் இது காண்பிக்கிறது. அவர்களின் அன்பான மூன்று புள்ளிகள் கொண்ட நட்சத்திரத்திற்கு சிறந்த சேவையை வழங்குவதன் மூலம், எமது குழுவானது தொடர்ந்தும் எமது வாடிக்கையாளர்களுக்கு மன அமைதியை வழங்க முயற்சிக்கிறது." என்றார்.

Mercedes-Benz சான்றளிக்கப்பட்ட பயிற்சியாளர்களால் வழங்கப்படும் அறிவு மற்றும் தொடர்ச்சியான தொழில்நுட்பப் பயிற்சியானது வாடிக்கையாளருக்கு இனிமையான மற்றும் ஆடம்பரமான பயணத்தை வழங்குவதில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது என்று DIMO நம்புகிறது. Mercedes-Benz AG இனால் பரிந்துரைக்கப்படும் மென்பொருள், விசேட கருவிகள் மற்றும் உபகரணங்களில் DIMO மேற்கொண்டுள்ள முதலீடுகள், ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் சிறந்த தரமான சேவைக்கு உத்தரவாதமளிக்கின்றன.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனில் தயா அல்விஸ் காலமானார்



சிலுமின பத்திரிகையின் விசேட கட்டுரைகள் பிரிவின் முன்னாள் ஆசிரியரான பிரபல ஊடகவியலாளர் சுனில் தயா அல்விஸ் நேற்று காலமானார்.

இறக்கும் போது அவருக்கு வயது எழுபத்தைந்து ஆகும். அவர் தனது ஊடக வாழ்க்கையை அன்றைய டைம்ஸ் நிறுவனத்தின் லங்காதீப பத்திரிகை மூலம் ஆரம்பித்தார். அவர் திவயின பத்திரிகையிலும் பணிபுரிந்ததோடு ஓய்வு பெறும் வேளையில் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் சிலுமின பத்திரிகையின் விசேட கட்டுரைகள் பிரிவின் ஆசிரியராக பணி புரிந்தார். அவரது ஊடக தொழிலில் சுகாதாரத் துறை தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கு பெரும் அக்கறை செலுத்தியதோடு அல்விஸ் சுகாதார அமைச்சின் ஊடக செயலாளராகவும் சில காலம் பணிபுரிந்திருந்தார். வைத்திய சாலை மற்றும் வைத்திய சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளில் தான் அறிந்த அறியாத அனைவருக்கும் மிக விருப்பத்துடன் தாமாகவே முன்வந்து அர்ப்பணிப்புடன் உதவி செய்த வாஞ்சையான மனிதராக அல்விஸ் அனைவரினதும் மதிப்பைப் பெற்றிருந்தார்.

தற்போது தனியார் நிறுவனம் ஒன்றில் நிறைவேற்று நிர்வாக அதிகாரியாக பணிபுரியும் ரவிந்து அல்விஸ் மற்றும் ஆசிரியராக சேவையாற்றிய சுச்சினி அல்விஸின் தந்தையாரும் ஆவார். இவர் மூன்று வருடங்களுக்கு முன்னர் காலமான பிரபல ஊடகவியலாளர் கமனி அல்விஸின் கணவருமாவார். அல்விஸ் காலம் சென்ற பிரபல ஊடகவியலாளர் மற்றும் இலக்கியவாதியான தர்மசிறி கமகேயின் மைத்துனரும் ஆவார். சுனில் தயா அல்விஸின் இறுதிக் கிரியைகள் நேற்று (14) கொழும்பில் நடைபெற்றது.

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அறிவித்தல்

இந்த விண்ணப்பமானது பிரிவு XXXVIII B குடியியல் நடபடிமுறைக்கோவை (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) 2181, லோரல் வுட் ட்ரைவ், தவுசன்ட் ஓக்ஸ், வென்டுரா, CA91362, ஐக்கிய இராச்சியம் அமெரிக்கா எனும் இடத்தில் குடியிருந்து, காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் வெலன்டின் புள்ளே அல்லது கிறிஸ்தோப்பர் புள்ளே என்பவர் பொருட்டு, 2181, லோரல் வுட் ட்ரைவ், தவுசன்ட் ஓக்ஸ், வென்டுரா, கலிபோர்னியா எனும் இடத்தில் குடியிருக்கும் ஒஸ்டின் இக்னேஷியஸ் புள்ளே என்பவருக்கு கலிபோர்னியா உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இறுதி விருப்பாவணத்தினை மீள் முத்திரையிடுவதற்கான விண்ணப்பம் தொடர்பாக,

***(காலஞ்சென்றவர்)***

**வழக்கு இல : DTS/ 288 /2021**
**தன்மை : விருப்பாவணம்**
**நடைமுறை :**
**பெறுமதி : ரூ. 50, 858,984.65/-**

**டாக். ஒஸ்டின் இக்னேஷியஸ் புள்ளே** பின்வரும் அவரது அற்றோனி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்.

கிறிஸ்டின் சுவென்ரினி ஷெரில் செல்லமுத்து, இல. 01, ப்ளொக் சீ, அரச தொடர்மாடி, கொழும்பு 04.

***(மனுதாரர்)***

2181, லோரல் வுட் ட்ரைவ், தவுசன்ட் ஓக்ஸ், வென்டுரா, CA91362, ஐக்கிய இராச்சியம் அமெரிக்கா எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் வெலன்டின் புள்ளே அல்லது கிறிஸ்தோப்பர் புள்ளே என்பவரின் இறுதி விருப்பாவணம் தொடர்பாக வென்டுராவின் கலிபோர்னியா உயர் நீதிமன்றத்தினால் 2021 ஜூன் மாதம் 07 ஆம் திகதி வழங்கப்பட்ட வெளிநாட்டு ப்ரோபேட் ஆவணத்தினை முத்திரையிடுவதற்கான குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 554U, (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) குடியியல் நடபடி முறைக்கோவை வெளிநாட்டு உயில்கள் மீள் முத்திரையிடுகின்ற சட்டக் கோவையின் கீழ் மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்த 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பிரிவு XXXVIII B குடியியல் நடபடிமுறைக்கோவை (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி**

**கே. கணேஷயோகன்,**
**மனுதாரரின் சட்டத்தரணி,**
**இல. 24/1, சார்ள்மன்ட் றோட்,**
**கொழும்பு 06.**


திகதி 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4677
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,617,880.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 2 2 2 7 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 43,991,724.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2972
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,208,040.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 13 16 38 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,154,372.00

Mega POWER மெகா பவர் கோடி 15
சீட்டிழுப்பு இலக்கம் 1025 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,836,580.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 235,700,246.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து F சுப்பர் இலக்கம் 19 வெற்றி இலக்கங்கள் 23 67 70 74

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 707
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,269,760.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 02 29 36 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,191,730.80

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0018
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,219,100.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 01 25 41 42
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,759,838.24

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1211
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,835,920.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 3 2 4 3 3 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,166,393.20

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416



Repeat Your Ad For Better Offers


**கடற்றொழில் அமைச்சு**
அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
NAQDA

## REQUEST FOR PROPOSALS (RFP)

**மட்டக்களப்பு மாவட்ட முதலீட்டு வலயத்தில் மீன்வளர்ப்பு பூங்காவை அமைப்பதற்கான வடிவமைப்பு மற்றும் கட்டுமான மேற்பார்வை**
**ஒப்பந்த இல : 2022 / CONSL / IZ-02**

மட்டக்களப்பு மாவட்ட முதலீட்டு வலயத்தில் மீன்வளர்ப்பு பூங்காவை அமைப்பதற்கான வடிவமைப்பு மற்றும் கட்டுமான மேற்பார்வைக்காக **2022 மார்ச் 15** ஆம் திகதி வரை அங்கீகாரம் பெற்ற உள்ளக வடிவமைப்பு மற்றும் பொறியியல் நிறுவனங்களிடமிருந்து திட்டங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு **www.naqda.gov.lk** இற்கு பிரசேியுங்கள்

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

**கடற்றொழில் அமைச்சு**
அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
NAQDA

## பெறுகை அறிவித்தல் (RFP)

**மன்னார் மாவட்ட முதலீட்டு வலயத்தில் மீன்வளர்ப்பு பூங்காவை அமைப்பதற்கான வடிவமைப்பு மற்றும் கட்டுமான மேற்பார்வை**
**ஒப்பந்த இல : 2022 / CONSL / IZ-01**

மன்னார் மாவட்ட முதலீட்டு வலயத்தில் மீன்வளர்ப்பு பூங்காவை அமைப்பதற்கான வடிவமைப்பு மற்றும் கட்டுமான மேற்பார்வைக்காக **2022 மார்ச் 15** ஆம் திகதி வரை அங்கீகாரம் பெற்ற உள்ளக வடிவமைப்பு மற்றும் பொறியியல் நிறுவனங்களிடமிருந்து திட்டங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு **www.naqda.gov.lk** இற்கு பிரசேியுங்கள்

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

## மனுக்களை திறக்கும் கால நீடிப்பு அறிவித்தல்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்
**இலங்கை பொலிஸ்**

01. இலங்கை பொலிஸ் சார்பாக திணைக்கள வழங்கல் குழுவின் (DPC) தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்காக 2022.01.24 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிக்கை விளம்பரத்தின் உப ஆவண இல 09 மற்றும் 12 இற்கான மனுக்களை திறக்கும் திகதி மற்றும் மனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படி 2022.03.10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

| இல | பொருள் | அளவு | ஒப்பந்த இலக்கம் | முன் அருந்த திகதி | நீடிக்கப்பட்ட திகதி | மனுக்கட்டணம் | | பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் ஆம் / இல்லை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களுக்கு (ரூபா.) | பதிவு செய்யப்படாத வழங்குனர்களுக்கு (ரூபா.) | |
| 09. | சுவாச சோதனைக் குழாய்கள் (1 பெக்கெட்டில் 10 குழாய்கள் இருக்க வேண்டும்) | 18000 (பெக்கெட்) | LA/S1/19/2022 | 2022.02.17 | 2022.03.10 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 12. | Walki – Talki (Hand Held Transceiver) VHF /FM Analog / Digital 16 Channels & VHF Analog/ Digital Repeaters | 100<br>01 | LA/S1/COM/03/2022 | 2022.02.17 | 2022.03.10 | 3,500.00 | 4,000.00 | ஆம் |

02. இதற்காக 2022.01.24 ஆம் திகதி பிரசுரமான விளம்பரத்தின் மற்றைய அனைத்து நிபந்தனைகளிலும் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.
03. இதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் மற்றும் தொலைபேசி இலக்கங்களின் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர்,**
**வழங்கல் பிரிவு,**
**02 ஆம் மாடி, பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு 01.**

**மனுக்களுக்கான பிரிவு** : 0112-013116/3117
உ.பொ.க-விநியோகம் : 011-2324915
மாதிரிப் பொருட்கள் பிரிவு : 0112-013711/ 0112013124
பெக்ஸ் இலக்கம் : 0112-320729
மின்னஞ்சல் முகவரி : dir.supplies@police.lk
இணையத்தளம் : www.police.lk

**பொலிஸ் மா அதிபர்**




# கடும் மழை; நிலக்கடலை செய்கையில் பாதிப்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



முல்லைத்தீவில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட சுதந்திரபுரம் கிராமத்தில் 600 ஏக்கர் வரையான நிலக்கடலை செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

சுதந்திரபுரம் கிராமத்தில் 1500 ஏக்கர் வரையில் மேட்டுநில பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும் 1200 ஏக்கர் வரையில் நிலக்கடலை செய்கையினை மேற்கொண்டுள்ளனர். தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

நிலக்கடலை செய்கை, மிளகாய் செய்கை, பூசணிசெய்கை, வெங்காயசெய்கை போன்ற செய்கைகளை மேற்கொண்ட விவசாயிகளின் விளை பயிர்கள் மழை வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அதிகளவான விவசாயிகள் நிலக்கடலை செய்கையினை மேற்கொண்டுள்ளனர். எனினும் மழை வெள்ளத்தினால் அவை அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடன் பெற்று அடவு வைத்து நிலக்கடலை செய்கையினை மேற்கொண்டுள்ளனர்.

நிலக்கடலைக்கு நல்ல விலை காணப்படுகின்றது. ஒரு ஏக்கர் 22 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. நெல் அழிவினை சந்தித்த விவசாயிகள் மேட்டுநில பயிராக நிலக்கடலையினை மேற்கொண்டனர். இந்நிலையில் இயற்கை அனர்த்தத்தினால் நிலக்கடலை செய்கையிலும் தற்போது அழிவினை சந்தித்துள்ளார்கள். இந்த அழிவிற்கு அரசாங்கம் இழப்பீடு தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேசிய இளைஞர் சேவைகள் பணிமனை புதிய உதவிப் பணிப்பாளர் பதவியேற்பு



மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் பணிமனையின் புதிய உதவிப் பணிப்பாளராக ரி.பூலோகராஜா நேற்று (14) திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

1998 ஆண்டு தொடக்கம் மன்னார் இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரியாகவும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகவும் பணிபுரிந்த நிலையில் பதவி உயர்வு பெற்று நேற்று உதவிப் பணிப்பாளராக பொறுப்பேற்று கொண்டார்.

குறித்த பதவி பிரமாண நிகழ்வு நேற்று மதத்தலைவர்களின் நல்லாசியுடன் இளைஞர் சேவை அதிகாரிகள் இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச, மாவட்ட சம்மேளன பிரதிநிதிகள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

# கண்டாவளைக்கு புதிய பொறுப்பு வைத்திய அதிகாரி நியமனம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரியாக கரைச்சி பிரதேச வைத்திய அதிகாரி மருத்துவர் கஜேந்திரா நியமிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது.

கண்டாவளை பிரதேசத்தின் மருத்துவ சேவைகளை இலகுப்படுத்தும் வகையிலும், நிர்வாக செயற்பாடுகள் இலகுவாக முன்னெடுக்கும் வகையிலும் இந் நியமனத்தை மேற்கொண்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கண்டாவளை பிரதேசத்தின் மேலதிக பொறுப்பு வைத்திய அதிகாரியாக மருத்துவர் பிரியந்தினி கமலசிங்கம் கடமையாற்றி வரும் நிலையில் நேற்றைய (14) தினம் மருத்துவர் கஜேந்திரா கரைச்சிக்கு மேலதிகமாக கண்டாவளைக்கும் நியமிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அறிவித்துள்ளது.




ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் பு.சத்தியமூர்த்தியின் 13ஆம் ஆண்டு நினைவுதினம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற நினைவுதின நிகழ்வில் அவரின் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்ததுடன் சத்தியமூர்த்தி அவர்களுடனான அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஊடகத்துறையில் 1990களில் இருந்து ஈடுபடத் தொடங்கிய இவர், 2009 பெப்ரவரி 12ஆம் திகதி இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் சிக்கி படுகாயமுற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்.விசேட நிருபர்

# ஏ.ரி.எம் இயந்திர வசதியின்மையால் அவதியுறும் பல்கலைக்கழக மாணவர்கள்

ஓமந்தை விஷேட நிருபர்




வவுனியா பல்கலைக்கழத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் ஏ.ரி.எம் இயந்திரம் பழுதடைந்து காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் உட்பட உத்தியோகத்தர்கள் தமது பணத் தேவைகளை நிறைவேற்றி கொள்வதற்கு அவதியுறுவதாக தெரிவிக்கின்றனர் .

பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட பணம் பெற்றுக்கொள்ளும் ஏ.ரி.எம்.இயந்திரம் கடந்த சில தினங்களாக பழுதடைந்துள்ளதால் பூவரசன்குளத்தில் அமைந்துள்ள பணம் பெற்றுக்கொள்ளும் ஏ.ரி.எம் நிலையத்திற்கு சென்று பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனை உடனடியாக திருத்தி அமைத்துத்தருமாறு மாணவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா

கரவெட்டி தினகரன் நிருபர்



சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பிலவ வருட தேர்த்திருவிழா இன்று 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. சமுத்திர தீர்த்தத் திருவிழா நாளை 16ஆம் திகதி மாசி மகத்தன்று பிற்பகல் 4 மணிக்கு கற்கோவளம் பகுதியிலுள்ள வங்கக்கடலில் இடம்பெறவுள்ளது. கடந்த 1ஆம் திகதி வருடாந்த பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

# அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி சட்டவிரோத கனிய மணல் அகழ்வு

## மணல் அகழ்வுகள் தொடருமாகவிருந்தால் மன்னார் மாவட்டம் கடலுக்குள் மூழ்கும் அபாயம்



(மன்னார் குறூப் நிருபர்)

உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து உரிமங்களை பெற்று அவுஸ்திரேலிய கம்பனியொன்று கனிய மணல் அகழ்வை தொடர்வதாகவும் இதனால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்தவித நன்மைகளும் இல்லை என 'மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்' அமைப்பினர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

நேற்று (14) திங்கட்கிழமை காலை மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் ஆய்வுகள் மிகவும் இரகசியமான முறையில் அவுஸ்திரேலிய நிறுவனத்தினால் நடைபெற்று வருகின்றது.

மன்னாரிலுள்ள சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பு பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் மதத் தலைவர்கள் பிரஜைகள் குழு, பொதுமக்கள் என பலரும் இணைந்து எமது எதிர்ப்பை வெளியிட்டு ஜனாதிபதி வரை தெரிவித்திருக்கிறோம். அண்மையில் எங்களோடு கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் எங்களுடைய ஆதங்கங்களை கேட்டு இந்த மாதத்தின் இறுதியில் அவுஸ்திரேலிய தூதருடன் மன்னாரிலுள்ள எமது குழுக்களையும் இணைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

### மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பினர் குற்றச்சாட்டு

மன்னார் மாவட்டத்திலுள்ள சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மன்னார் தீவுக்குள் வசிக்கின்றனர். இரண்டு கிலோ மீற்றர் அகலமும் 30 கிலோ மீற்றர் நீளமும் கொண்ட ஒரு குறுகிய தீவு பகுதி முற்று முழுதாக குறுகிய காலத்தில் கடலில் மூழ்கும் நிலை ஏற்படும்.

1980 ஆம் ஆண்டுகளில் மன்னார் நகர செயற்பாடுகளை உயிலங்குளத்தில் அமைப்பது தொடர்பாக ஒரு திட்டம் அரசிடம் இருந்தது. ஒரு சில அரசியல் காரணங்களால் அவை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த மன்னார் தீவுக்குள் மாவட்ட செயலகம், பொது வைத்தியசாலை, வங்கிகள் நான்கு தேசிய பாடசாலைகள் என முக்கியமான அனைத்து செயற்பாடுகளும் இருக்கிறது. மணல் அகழ்வுகள் தொடருமாக இருந்தால் கடலுக்குள் மூழ்கி மன்னார் மாவட்டம் செயலிழந்து சூனியப் பிரதேசமாக மாறிவிடும்.

எது எப்படி இருந்தாலும் உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து தான் இந்த உரிமங்களை பெற்று கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம். இந்த மணல் அகழ்வினால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு நன்மைகளும் இல்லை. இதனால் ஆதாயம் பெற போவது அந்நிய நாடுகளும் அவர்களோடு சேர்ந்து இயங்குகின்ற சில முகவர்களும் தான் என்றனர்.



இலங்கை முதலுதவிச்சங்கம், இந்து சமயத் தொண்டர் சபை ஆகியவை இணைந்து நடாத்தும் பொங்கல் விழாவும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் க.தெய்வராசா தலைமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் வெற்றி பெற்று தங்கப்பதக்கம் வென்ற செல்வி கணேஷ் இந்துகாதேவிக்கு "தேசத்தின் வீர மங்கை" என்ற விருதினை வழங்கி இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர்சபை கௌரவித்திருந்தது. இந்நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ், தொண்டர் சபையின் தேசிய கண்காணிப்பாளர் வை.ஜெகதாஸ், மகளிர் பிரிவு பொறுப்பாசிரியர் ச.கேதீஸ்வரி உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

படம் சாவகச்சேரி விசேட நிருபர்

# வவுனியாவில் காணி அமைச்சின் நடமாடும் சேவை

வவுனியா விசேட நிருபர்

வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவருமான கே.காதர் மஸ்தானின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான், வன்னியின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட காணி தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், அவற்றுக்கு விரைவான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதன் அடிப்படையில் ஜனாதிபதி காணி அமைச்சருக்கு வழங்கிய ஆலோசனைக்கு அமைபவாக, பாராளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானுடன் கலந்துரையாடிய அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய நடமாடும் சேவை ஒன்றினை வவுனியாவில் இம்மாதம் 27 ஆம் திகதி நடாத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு பணித்துள்ளார்.

இதன்போது வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களங்கள் என்பவற்றின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே வன்னி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு இதன்போது தீர்வு காணப்படும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# பொது போக்குவரத்தில் ஈடுபடுவோர் தடுப்பூசி அட்டை வைத்திருக்க வேண்டும்

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

ஒலுவில் விசேட நிருபர்

கிழக்கு மாகாணத்தில் பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்பவர்கள் கொவிட்19 தடுப்பூசி பெற்றுக் கொண்ட அட்டையை தன்வசம் வைத்திருக்குமாறு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாகாணங்களில் தடுப்பூசி அட்டைகள் பொது இடங்களிலும், பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் பயணிகளிடமும், இராணுவம் மற்றும் சுகாதார பகுதியினரால் பரிசோதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தற்போது கிரமமான முறையில் இராணுவத்தினரால் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும், இது வரை பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக தங்களுக்கான தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.



சந்தைத் தொகுதிகளில் மற்றும் சன நெருக்கமான பொது இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தன் வசம் கொவிட் 19 தடுப்பூசி அட்டை உள்ளதா என சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகள் தோறும் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இரண்டாவது தடுப்பூசி பெற்று 03 மாதங்கள் பூர்த்தியானவர்கள் இது வரை மூன்றாவது தடுப்பூசியை பெற்று கொள்ளாத 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள், இரண்டாவது தடுப்பூசி இதுவரை பெறாதவர்கள் தத்தமது சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்குச் சென்று தங்களுக்கான இரண்டாவது தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

தற்போது மக்கள் கணிசமாக ஒன்று கூடுவதாகவும், முகக்கவசம் அணியாமலும், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமலும் கவனயீனமாக நடந்து கொள்வதை காணக் கூடியதாகவுள்ளது. இவற்றை கருத்திற் கொண்டு மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

## அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி தொகை வழங்கும் நிகழ்வு



தோப்பூர் குறூப் நிருபர்

சுபிட்சத்தின் நோக்கத்திற்கு அமைய சமுர்த்தி பயனாளிகளுக்காக அரசினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத் தொகையினை உத்தியோக பூர்வமாக வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (14) நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது.

அந்த வகையில் திருகோணமலை தோப்பூர் சமூர்த்தி வங்கி கிளையின் கீழுள்ள 16 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது பயன்தரும் தென்னை மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தோப்பூர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் டீ.இமாம் அதிதியாக கலந்து கொண்டதோடு, சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. மாவட்ட குளங்களில் நீர்மட்டம் உயர்வு



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பெரும்போக வேளாண்மை அறுவடையிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மாவட்டத்தின் சிறிய மற்றும் பெரிய குளங்களின் நீர் மட்டங்களும் அதிகரிகத்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் 32அடி 10அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 14அடி 11அங்குலம், வாகனேரிக்குளத்தின் நீர்மட்டம் 18 அடி 9 அங்குலம், கட்டுமுறிவுக்குளத்தின் நீர்மட்டம் 11 அடி 8 அங்குலம், அக்குளத்தில் 2 அங்குல மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றது. கித்துள்வெவ குளத்தின் நீர்மட்டம் 8 அடி 5 அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 15 அடி 5 அங்குலம், புணாணை அணைக்கட்டு 7 அடி 9 அங்குலமாக நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மட்டு. சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

கல்லடி குறூப் ,மட்டக்களப்பு குறூப்,மட்டக்களப்பு விசேட நிருபர்கள்



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம் கிரமமாக இடம்பெற்று வருகின்றது. நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் அதிகரித்துக் காணப்படும் நிலையில், டெங்கு பரவலும் அதிகரித்து வருவதாக சுகாதார பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாவட்டத்திலிருந்து கொரோனா மற்றும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுவதற்கும், விசேட வழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் படையினருடன் இணைந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

அதற்கமைவாக பொது இடங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்ற இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணனின் தலைமையில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளாகம், சனிக்கிழமை (12) சிரமதான நடவடிக்கை மூலம் சுத்தம் செய்யப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், இச் சிரமதான நடவடிக்கையில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு அலுவலக வளாகத்தினையும் அலுவலக சுற்றுச்சூழலையும் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றி நடப்பதுடன், டெங்கு நுளம்பு பரவலில் இருந்தும் அவதானமாக இருக்க வேண்டுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணனால் வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு கட்டில்கள் கையளிப்பு



மாளிகைக்காடு குறூப் நிருபர்

சியபத பினான்ஸ் பீ.எல்.சி நிறுவனத்தால் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு சுமார் 3 மில்லியன் பெறுமதியான HDU கட்டில்கள் கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சியபத பினான்ஸ் பீ. எல்.சி நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் மற்றும் அவரது குழுவினரால் நிறுவனத்தின் CSR திட்டத்தின் கீழ் இவை வழங்கி வைக்கப்பட்டன.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், சியபத பினான்ஸ் பீ.எல்.சி நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.எச்.எம்.பிரிம்சாத் உள்ளிட்ட குழுவினர், வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

கொவிட் 19 தொற்று உக்கிரமடைந்து இருந்த காலகட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றியிருந்த டாக்டர் ஜீ.சுகுணன் இதற்கான முன்மொழிவை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்துடன் இணைந்து பயணிப்பதே பாதுகாப்பானது

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

மொட்டு அரசாங்கமாக இருந்தாலும் சரி, யானை அரசாங்கமாக இருந்தாலும் சரி, முஸ்லிங்கள் அரசாங்கங்களுடன் இணைந்து சென்றே நன்மைகளை அடையவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் கடந்த பொதுத் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட்ட அஸ்பர் உதுமா லெப்பை தெரிவித்தார்.

நீண்டகாலமாக குண்டும் குழியுமாக இருந்த சம்மாந்துறை கஸ்ஸாலி வித்தியாலய வீதியை அபிவிருத்தி செய்து, அவ்வீதியினை மக்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது, பிரதம அதிதியாக கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், விவசாயிகளுக்கு பசளையை இலவசமாக வழங்கி, நாட்டை அபிவிருத்தி செய்து இலங்கையில் முன்மாதிரியான ஆட்சியை கொண்டு நடத்திய மஹிந்தவின் சகல நன்மைகளையும் அனுபவித்துவிட்டு எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்து பழகிய முஸ்லிம் சமூகம் இன்று பல இக்கட்டான நிலைகளை சந்தித்து வருகிறது.

## குமாரபுரம் படுகொலையின் 27வது நினைவேந்தல் நிகழ்வு

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட குமாரபுரம் படுகொலையின் 27வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை (11) குமாரபுரத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வினை குமாரபுரம் படுகொலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பிரதேச மக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது முதலில் குமாரபுரம் படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மா சாந்தி வேண்டி குமாரபுரம் சித்தி விநாயகர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

## ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் சுதந்திர தின நிகழ்வுகள்



இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சியான ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் சுதந்திர தின நிகழ்வுகள் கல்குடா மற்றும் காத்தான்குடியில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அதிதியாக பொலிஸ் பொதுமக்கள் நலம்புரி இணைப்பாளர் நளீர் மற்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் இணைப்பாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

காத்தான்குடியில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் காத்தான்குடி கிளை காரியாலயத்தில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீதின் வழிகாட்டலுக்கிணங்க ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் காத்தான்குடி அமைப்பாளர் ஐ. எல். அன்வர் தலைமையில் காத்தான்குடி செயற்குழு உறுப்பினர்களின் வருகையுடன் இவ்வைபவம் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல தலைமையில்

## S/L சேருவில தேர்தல் தொகுதி மகளிர் அணி சம்மேளன பொது கூட்டம்



கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில தேர்தல் தொகுதியின் மகளிர் அணி சம்மேளன பொதுக் கூட்டம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல தலைமையில், கந்தளாய் நகர மண்டப கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்றது.

எதிர்வருகின்ற தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பு, அரசாங்கத்தின் சௌபாக்கிய வேலைத்திட்டங்களில் பெண்களுக்கான சுயதொழில் ஏற்பாடுகள், கிராம வீதி அபிவிருத்திகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களில் பங்கு போன்ற தலைப்புகளில் சம்மேளனக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இந் நிகழ்வில், பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அமரகீர்த்தி அத்துகோரல, கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பதி, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிலாந்த விஜேசிங்க, கந்தளாய், கோமரங்கடவெல, மொறவெவ மற்றும் சேருவில போன்ற பிரதேச சபைகளின் தவிசாளர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெண்களுக்கான சேருவில தேர்தல் தொகுதி தலைவி திருமதி யோகேஸ்வரி மற்றும் திருமதி துஷாந்தி குணரத்ன உட்பட பெருந்திரளான பெண்கள் கலந்து சிறப்பித்தனர்.

## எம்.எல்.வை.எப் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஒன்று கூடல் நிகழ்வு



பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

எம்.எல்.வை.எப் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 2022ஆம் ஆண்டிற்கான ஒன்று கூடல் நிகழ்வு, மாவட்ட சம்மேளனத்தின் புதிய தலைவர் நியமனமும் சத்தியப் பிரமாண மற்றும் கௌரவிப்பு நிகழ்வு என்பன அக்கரைப்பற்று மாவட்ட அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

எம்.எல்.வை.எப் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.அஜ்வத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நிந்தவூர் ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் டொக்டர் ஏ.சி.டில்சாத் பிரதம அதிதியாகவும், சம்மேளனத்தின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ.உதுமாலெவ்வை கௌரவ அதிதியாகவும், சம்மேளனத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் மற்றும் சம்மேளனத்தின் ஆலோசகர்கள், முன்னாள் மாவட்ட தலைவர்கள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது 2022ஆம் ஆண்டுக்கான சம்மேளனத்தின் புதிய மாவட்ட தலைவராக எம்.ஐ.எம். றியாஸ் அதிபர் நியமிக்கப்பட்டதோடு, பிரதம அதிதி டொக்டர் ஏ.சி.டில்சாத் மாவட்ட சம்மேளனத்தின் ஆலோசகர்களினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன்.

சம்மேளனத்தின் புதிய ஆண்டுக்கான உறுப்பினர்கள் சத்தியபிரமாண நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கந்தளாயில் குடிநீர் குழாயில் வெடிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர் வழங்கல் பாவனையாளர் அலுவல்கள் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பிரதான வீதியில் குடிநீர் குழாய் வெடித்து ஒரு கிழமையாக நீர் ஒடிக்கொண்டிருப்பதாக அப்பகுதியில் வசிப்போர் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் நகரின் பௌத்த விகாரைக்கு முன்னால் உள்ள பிரதான வீதியினூடாக செல்லும் பிரதான குழாய் நீர் வெடித்ததால் குடிநீர் வீண் விரையமாகி வருகின்றது.

குடிநீர் வடிகாண்களில் வடிந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. இவை தொடர்பாக கந்தளாய் பாவனை அலுவல்கள் பகுதிக்கு அறிவித்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என தெரிவிக்கின்றனர்.

எனவே அதிகாரிகள் கூடிய விரைவில் நீர் வீணாகுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




மஸ்கெலியா காட்மோர் பிரதேசத்தில்

# மண் மேடு சரிந்து விழுந்ததில் மூவர் காயம்; வீடு முற்றாக சேதம்

**நோட்டன் பிரிட்ஜ், மஸ்கெலியா தினகரன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

மஸ்கெலியா பகுதியில் நேற்று முன்தினம் (13) மாலை வேளையில் பெய்த கடும் மழை காரணமாக பாரிய மண்திட்டு சரிந்து வீழ்ந்து வீடு ஒன்று முற்றாக சேதமடைந்ததால், அதில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா காட்மோர் கிங்கோரோ பிரிவில் நேற்று முன்தினம்(13) மாலை 6.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டின் பின்புறமாக இருந்த மண்திட்டே இவ்வாறு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் குடியிருப்பு முற்றாக சேதமடைந்துள்ளதுடன் குடியிருப்பிலிருந்த 60 வயதுடைய முதியவர், அவருடைய மகள், மகளின் இரண்டு வயது பிள்ளை என மூவர் காயமுற்ற நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.





சம்பவத்தில் காயமடைந்து மூவரில் தாயும் மகளும் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு பின்னர் அனுப்பி வைக்கப்பட்டதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர். சம்பவத்தில் வீட்டில் இருந்த உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன.

பாதுகாப்பு மதில் இடிந்து வீழ்ந்துள்ளதையடுத்து அதற்கு மேல் அமைந்துள்ள குடியிருப்பும் சரிந்து விழும் ஆபத்தான நிலை உள்ளதாக குடியிருப்பாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சுகாதார ஊழியர் வேலைநிறுத்தம்

# கொவிட் காலத்தை பயன்படுத்தி சிலர் தங்களை வலுப்படுத்த முயற்சி

**(எம்.ஏ. அமீனுல்லா)**



வேலைநிறுத்தம் உண்மையில் சுகாதார தரப்பின் பிரச்சினையா அல்லது அரசியல் பிரச்சினையா என்பதை கண்டறிய வேண்டும் என தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும் முன்னாள் ஆளுநருமான சரத் ஏக்கநாயக்க, இந்த கொவிட் காலத்தை பயன்படுத்தி சிலர் தங்கள் நிலையை வலுப்படுத்த முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கண்டி, பாததும்பர தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற கட்சி மறுசீரமைப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,

சில தொழிற்சங்கங்கள் உண்மையான அவர்களின் தொழிற்சங்க பிரச்சினைகளுக்காக போராடுகின்றனரா, அல்லது அரசியல் நோக்கங்களுக்காக போராடுகிறார்களா என்ற கேள்வி எழுகின்றது. உண்மையான தேசபக்தர்களால் நாட்டின் வளங்களை அழிக்க முடியாவிட்டாலும், தேசபக்தர்கள் என்றழைக்கப்படும் குறிப்பிட்ட சிலர் நம் நாட்டில் பஸ் வண்டிகள் உள்ளிட்ட பொதுச் சொத்துக்களுக்கு தீயிட்டு நாசம் செய்ததை மக்கள் மறக்கவில்லை.

நாட்டைப்பற்றி சிந்திகாதவர்களால்தான ஜனாதிபதிக்கு தனது இலக்குகளை அடைய தாமதம் ஏற்படுகிறது. உரம் இல்லை என்று விவசாயிகள் வீதியில் இறங்குவதற்கும் சுகாதார ஊழியர்கள் வீதியில் இறங்குவதற்கும் வித்தியாசம் உள்ளது. சுகாதார ஊழியர்களின் போராட்டத்தால் மக்கள் அனைவரும் அவதிப்படுகின்றனர். வேலைநிறுத்தம் உண்மையில் சுகாதாரப் பிரச்சினையா அல்லது அரசியல் பிரச்சினையா என்பதை கண்டறிய வேண்டும்.

இன்று நாட்டின் உள்ளூர் உற்பத்திகளைப் பற்றிப் பேசும் போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தை நினைவுபடுத்துகிறோம். சிறிமாவோவின் அரசாங்கத்தை தோற்கடித்த சாபத்தை மக்கள் 17 வருடங்களாக அனுபவிக்க நேரிட்டது.

சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் அன்று ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று உள்ளூர் உற்பத்திகள் பற்றி பேச வேண்டிய அவசியமே இருக்காது.

கொவிட் தொற்றுநோயை எதிர்கொண்டு நாட்டை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு கொண்டு வர அரசாங்கம் முயற்சிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, சிலர் இந்த கொவிட் காலத்தை பயன்படுத்தி தங்கள் நிலையை வலுப்படுத்த முயற்சிக்கின்றனர் என்றார்.

தென்மாகாண தமிழ் பாடசாலைகளில்

# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

**தெனியாய தினகரன் நிருபர்**

தென் மாகாணத்திலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவி வருகின்ற ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்தோரை ஆட்சேர்ப்புக்காக நேர்முகப்பரீட்சை நடாத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக தென்மாகாண கல்விச் செயலாளர் ரஞ்சித் யாப்பா தெரிவித்துள்ளார். தென்மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் 25 பாடங்கள் தொடர்பாக ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

இதற்கான தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சை தென்மாகாண கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

இம் மாதம் 19ஆம் திகதி முதல் 26ம் திகதி வரை நடைபெறவிருக்கின்ற இந்த நேர்முகப் பரீட்சைக்கு 6605 பேர் தோற்றவுள்ளனர்.

# லிந்துலை உணவகத்தில் தீ; முதியவர் உடல்கருகி பலி

**லிந்துலை நிருபர்**

லிந்துலை நகரில் உள்ள உணவகம் ஒன்றில் சமையலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 72 வயதுடைய முதியவர் ஒருவர் திடீரென ஏற்பட்ட தீ பரவல் காரணமாக உடல் கருகி ஸ்தலத்திலேயே பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை 8.30 மணியளவில் இடம் பெற்ற இத்தீவிபத்தில் பலியானவர் லெம்லியர் தோட்டத்தை சேர்ந்தவர் ஆவார். உணவகத்தில் சமையலில் ஈடுபட்டிருந்த போது உடையில் தீ பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வரும் நிலையில் பிரேத பரிசோதனைகளுக்காக சடலமானது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்தனர்.

# பொருளாதார நெருக்கடி நிலையிலும் சமுர்த்தி கொடுப்பனவு அதிகரிப்பு

மக்கள் உணர்ந்து செயலாற்றுவது அவசியம்

## லிந்துலை சமுர்த்தி உதவி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் ரமேஸ்வரன் எம்.பி

**ஹட்டன் விசேட, தலவாக்கலை குறூப் நிருபர்கள்**



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொரோனா பாதிப்புக்கு மத்தியில் சமுர்த்தி பயனாளிகளுக்கு ஆயிரம் ரூபா அதிகரித்துள்ளார். நாட்டில் உள்ள இலட்சக்கணக்கான பேருக்கு பல மில்லியன் ரூபாய்கள் இந்த சமுர்த்தி கொடுப்பனவுக்காக பெற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆனால் கடந்த ஆட்சியின் போது நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் சமுர்த்தி பெறுவதற்கு உரித்துடைய சுமார் 23,000 பேருக்கு சமுர்த்தி நிறுத்தப்பட்டதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்ஸின் நிதிச் செயலாளருமான எம். ரமேஸ்வரன் தெரிவித்தார்.

தலவாக்கலை லிந்துலை நகரசபைக்குட்பட்ட பகுதியில் சமுர்த்தி உதவி பெறும் 100 குடும்பங்களுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி உதவி கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்று சமுர்த்தி பெரும் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு பெற்றுக்கொடுக்கப்படுகிறது. நாட்டில் தற்போதைய பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் ஜனாதிபதியும் நிதி அமைச்சரும் மக்களை என்றுமே கைவிடவில்லை. கொரோனா நம்முடைய நாட்டில் மட்டுமன்றி முழு உலக நாட்டிலும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியது. இந்நிலையிலும் பல இலட்சக்கணக்கான சமுர்த்தி பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய்களை அரசாங்கம் செலவிடுகிறது.

ஆனால் இன்று மக்களை அரசாங்கம் கைவிட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் கூக்குரல் இடுகின்றனர். மக்களை அரசாங்கம் கைவிட்டிருந்தால் இவ்வாறு சமுர்த்தி கொடுப்பனவை அதிகரித்திருக்குமா? கடந்த அரசாங்கத்தில் நுவரெலியா மாவட்டத்தில் சமுர்த்தி பெறவேண்டிய 23000 பேருக்கு கொடுப்பனவு நிறுத்தப்பட்டது. அதனை அவர்கள் கட்சி பார்த்து தான் கொடுத்தார்கள். ஆனால் இன்று ஜனாதிபதியோ நிதி அமைச்சரோ அரசியல் பார்க்கவில்லை. இது மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்றே நினைத்தார்கள்.

பொருளாதார பிரச்சினை காணப்பட்டாலும் நாட்டின் அபிவிருத்தி திட்டங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. நாட்டில் இன்று என்ன பிரச்சினை காணப்பட்டாலும் எஞ்சிய மூன்று வருடங்களில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆகவே ஊடகங்களில் வர வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை பாராது அரசாங்கத்தின் சேவைகளை உணர்ந்து அரசாங்கத்தின் பக்கம் மக்கள் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கம்பளை ரயில் நிலையத்தில்

# ஆசன முன்பதிவு செயலிழப்பால் பயணிகள் அசௌகரியம்

அறிவித்தலில் தமிழ் மொழி புறக்கணிப்பு

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**




கம்பளை புகையிரத நிலையத்தில் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக ஆசன முன் பதிவு கணனி செயலிழந்து போயுள்ளமையினால் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். அண்மையில் பயணி ஒருவர் கொழும்பு செல்வதற்கு கம்பளையில் ஆசன பதிவு செய்வதற்கு சென்றபோது அங்கு பதிவு செய்யமுடியாததினால் கண்டி புகையிரத நிலையத்திற்கு சென்று ஆசன பதிவை செய்து மீண்டும் அடுத்த நாள் கம்பளையிலிருந்து கொழும்பிற்கு போக வேண்டி ய நிலை ஏற்பட்டது.

மேற்படி புகையிரத நிலையத்தில் தினமும் அதிகமான பயணிகள் ஆசன பதிவிற்காக வந்து ஏமாற்றத்துடன் திரும்பி செல்வதை காணக்கூடியதாக உள்ளது. இது தொடர்பாக புகையிரத அதிகாரியிடம் கேட்ட போது இது குறித்து சம்பந்தப்பட்ட பிரிவிற்கு அறிவித்துள்ளதாக தெரிவித்தார். எனினும் இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படாமையால் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக செயல்பட்டு பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களை தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆசன முன் பதிவு கணனி செயலிழந்து போயுள்ளதாக அங்கு அறிவித்தல் ஒட்டபட்டிருந்த போதிலும் அதில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கம்பளையில் ஆங்கிலம் பேசுபவர்களை விட தமிழ் மொழிபேசுபவர்களே அதிகமாக இருக்கிறார்கள் என்பதை அதிகாரிகள் தெரிந்துகொள்ளவதுடன் ஆங்கிலத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை தமிழ் மொழிக்கும் கொடுக்கும்படி தமிழ்பேசும் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தின் ஏற்பாட்டில் கினிகதென மகா வித்தியாலயத்தில் தரம் 8ல் கல்வி பயின்று வரும் மாற்றுத்திறனாளி மாணவியின் கல்வி நடவடிக்கைகளுக்காக மடிக்கணினி மற்றும் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆளுநர் லலித் யு கமகே இவற்றை மாணவியிடம் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.
(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# உக்குவளையில் சிறுவர் பூங்கா

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை உக்குவளை பிரதேச சபையின் ஏற்பாட்டில் தவளங்கோயா என்னுமிடத்தில் 70 பேர்ச்சஸ் காணியில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

உக்குவளை பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா நிதி மூலம் அமைக்கப்பட்டு வரும் சிறுவர் பூங்காவில் தற்போது சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சிறுவர் பூங்காவை வெகுவிரைவில் திறந்துவைக்கப்படவுள்ளதாக மேற்படி பிரதேச சபையின் உதவி தலைவர் நிசார் ராஜா தெரிவித்தார்.

# உல்லாச பிரயாணி மீது பாலியல் வல்லுறவு முயற்சி; ஆட்டோ ஓட்டுனர் கைது

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

வெளிநாட்டு உல்லாச பிரயாணியான 40 வயது பெண்ணை பாலியல் வல்லுறவிற்குட்படுத்த முயன்ற ஆட்டோ ஓட்டுனரை, எல்ல பொலிசார் நேற்று கைது செய்தனர்.

எல்ல நகரிலிருந்து கரந்தகொல்லை உல்லாச விடுதிக்கு செல்வதற்கு அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர், ஆட்டோவொன்றில் சென்றபோதே, ஆட்டோ ஓட்டுனர் மனித சந்தடி இல்லாத இடத்தில் ஆட்டோவை நிறுத்திவிட்டு, இப்பெண்ணை பாலியல் வல்லுறவிற்குட்படுத்த முயன்றுள்ளார்.

ஆட்டோ ஓட்டுனரின் பிடியிலிருந்து தப்பி ஓடிய அப்பெண் எல்ல பொலிஸ் நிலையத்திற்குச் சென்று, தனக்கேற்பட்ட நிலை குறித்து புகார் செய்துள்ளார். இப்புகாரையடுத்து, எல்லபொலிசார் விரைந்து, குறிப்பிட்ட ஆட்டோ ஓட்டுனரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஆட்டோ ஓட்டுனர் விசாரணையின் பின் பண்டாரவலை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்று, எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபேந்திரவாசனா அபேகுணவர்தன தெரிவித்தார்.

# கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசியை ஆயுதமாக பயன்படுத்திய அக்குறணை பிரதேச சபை



- **தவிசாளர் இஸ்திஹார் இமாமூதின் முயற்சியில் 80 வீதமானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள்**
- **2020 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான போட்டியில் தேசிய மட்டத்தில் அக்குறணை பிரதேச சபை 2ஆம் இடம்**

கொரோனா தொற்று இன்னும் உலகை விட்டு அகலாத நிலையில் தடுப்பூசிகளே மக்களை காப்பாற்றும் ஆயுதங்காளாகின.அந்த வகையில் இலங்கையில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தை அரசு வெற்றிகரமாக நடத்தி வருகிறது. அத்தோடு பூஸ்டர் டோஸூம் வழங்கப்பட்டு வருகிறது.அந்த வகையில் கண்டி மாவட்டத்தில் அக்குறணை பிரதேச சபையில் அதன் தவிசாளர் இஸ்திஹார் இமாமூதின் தலைமையில் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி செலுத்துதல் முதல் அனைத்து நடவடிக்கைகளும் கிரமமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அச் செயற்பாடுகளுக்காக 2020 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான போட்டியில் தேசிய மட்டத்தில் அக்குறணை பிரதேச சபை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

அக்குறணையில் கொரோனா தடுப்பூசி வழங்கலின் ஒரு வருட பூர்த்தியினை கொண்டாடும் நிகழ்வு ஜனாதிபதியின் செயற்றிட்டத்தின் கீழ் 'ஐக்கியமாக ஒரே மனதுடன் வலுவானதாக பெருந்தொற்றுக்கு சவால்விடுத்த மனித நேயத்திற்கு செய்யும் மரியாதை' எனும் தொனிப்பொருளில் அக்குறணை சுகாதார வைத்திய பணிமனையின் ஏற்பாட்டில் அக்குறணை பிரதேச சபை கேட்போர் கூடத்தில், அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமூதின் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியின் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் அமைப்பாளருமான திலக் ராஜபக்ஷ கலந்து கொண்டு சிறப்பித்தார்.

திலக் ராஜபக்ஷ எம்.பி உரையாற்றும் போது,...

யார் என்ன சொன்னாலும் ஜனாதிபதி பல கோடி ரூபா செலவுகள் செய்து கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.உள்நாட்டு போரை வெற்றி கொள்வதற்கு தலைமைத்துவம் வழங்கியது போன்று கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கும் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கினார். உலக நாடுகளுள் கொரோனாவை கட்டுப்படுத்தும் விடயத்தில் எமது நாடும் மூன்றாவது நிலைக்கு வர முடிந்தது. அதற்கு நாங்கள் பெருமைப்பட வேண்டும். நிறையப் பேர் இது பற்றி கதைப்பதில்லை.

ஒழுங்கான முறையில் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளாத நாடுகளும் உள்ளன. ஆனால் எமது நாட்டில் இரவு பகல் பாராமல் சுகாதாரப் பிரிவினர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட அதன் அலுவலக உத்தியோகஸ்தர்கள் ஆற்றிய பங்களிப்பை நாங்கள் மறக்க முடியாது. நாங்கள் அனைவரும் அவர்களை கண்ணியப்படுத்துவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பிரதேச சபை, பிரதேச செயலகம், பொலிஸார், இராணுவத்தினர், சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து இந்தப் பிரதேசத்தில் கோரோனாவை கட்டுப்படுத்த எடுத்த முயற்சியினை நாம் அறிவோம். இந்த சந்தர்ப்பத்தில் முடக்கப்பட்ட மக்களுக்கு உணவுகள், மருந்து வகைகள், வாகனங்கள், இதர பல்வேறு வகையிலான உதவிகளும் மேற்கொள்ளப்பட்டன. நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரே சக்தியாக இருந்து செயற்பட்டோம் என்று அவர் தெரிவித்தார்.

அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமூதின் உரையாற்றும் போது



எமது பிரதேசத்தில் தம் உயிர்களை துச்சமாக மதித்து கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பணியாற்றிய அனைவருக்கும் எனது உள்ளார்ந்த நன்றிகளை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது வரை நாம் கண்டிராத பயங்கர நிலையை நாம் எதிர்நோக்கியுள்ளோம். அதுதான் முடிவில்லாமல் தொடரும் கொரோனா தொற்றாகும். தொற்றின் ஆரம்பத்தில் எங்களுக்கு வழிகாட்டியாக ஆலோசனை வழங்கிய பௌத்த சமய பெரியார்கள், மௌலவிமார்களது பங்களிப்பை ஒரு போதும் மறக்க முடியாது.

அரச நிறுவனம் என்ற வகையில் பிரதேச சபை, பிரதேச செயலாளர் அலுவலகம், சுகாதார வைத்தியர் அலுவலகம், பொலிஸார் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் சென்றோம். இதற்கு வழிகாட்டியாக ஆலோசனை வழங்குபவர்களாக எமது சமயப் பெரியார்கள் இருந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலும் சில ஊடகங்கள் இனவாத செயற்பாடு முயற்சிகளிலும் ஈடுபட்டன. இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு விடயத்தை ஞாபகமூட்ட வேண்டும். எங்கள் பிரதேசத்திலுள்ள ஊடவியலாளர்கள் உண்மையான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கி உண்மை நிலையை வெளிக் கொணரச் செய்த ஊடகவியலாளர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதனை நாங்கள் முன்னெடுக்கும் போது விசேடமாக சமூகங்களுக்கிடையே சமாதானத்தையும் பொது மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தையும் வழங்கிய அலவத்துக்கொட முன்னாள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுசந்த ஏக்கநாயக மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு நன்றி கூற வேண்டும்.

அத்தோடு கொரோனா தொற்றுக் கால கட்டத்தில் இங்குள்ள அரச நிறுவனங்கள், சமயஸ்தலங்களின் சமயத் தலைவர்கள், அதன் நிர்வாகிகள், சிவில் அமைப்புக்கள் சகலரும் தங்களுடைய கடமைகளை மிகுந்த பொறுப்புடன் செய்தனர்.

விசேடமாக எமது பிரதேச செயலாளர் இந்திக குமாரி மறக்க முடியாதவர். அவர் ஒரு பெண்மணி, இரவு பகல் என்று பாராமல் எங்களோடு இணைந்து சோர்வின்றி சேவையாற்றினார். இப்பிராந்தியத்தில் கடமையாற்றி வரும் சுகாதார வைத்தி அதிகாரி சஞ்ஜீவவின் பணி மகோன்னதுமானது. எல்லாயின மக்களுக்கும் ஒரு சமநிலையான சேவையை அவரது அலுவலகத்தின் ஊடாக வழங்கினர். அவருக்கும் நன்றியை சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

அத்தோடு அவருடன் சேர்ந்து பணியாற்றி பொது சுகாதார அதிகாரிகளின் பங்களிப்பு அளப்பரியது. ஒரு சீருடையினை மாற்றாமல் மூன்று நான்கு நாட்கள் கடமையாற்றினார்கள். குளிக்க நேரமில்லை. சில வேளை சாப்பிட கூட நேரமிருக்காது. மிகுந்த அவதானத்தோடு தம்மை முழுமையான முறையில் அர்ப்பணம் செய்து தியாகம் உணர்வோடு சேவையாற்றினார்கள்.அவர்களின் சேவைக்கு நன்றி சொல்ல வார்த்தையில்லை.

எமது பிரதேச சபை தற்போது பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள தருணத்தில் ஜனாதிபதி, தடுப்பூசிகளை அனைத்து பிரதேசசபைகளுடைய நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அதற்கிணங்க அக்குறணை பிரதேச சபையின் உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமின்றி செலவுகளை பொருட்படுத்தாமல் தடுப்பூசிகள் ஏற்றும் வேலைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அனைவரும் ஏகமனதாக ஆதரவு வழங்கினார்கள். எங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென வைத்திருந்த பணத்தை ஒதுக்கி கொரோனா தடுப்பூசிகள் ஏற்றும் திட்டத்திற்காக பயன்படுத்தினோம்.

அது மட்டுமல்ல மிகவும் பின்தங்கிய கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளில் சதொச ஊடாக எங்களது பிரதேச சபை உறுப்பினர்கள் உலருணவுப் பொதிகள் வழங்கி வைத்தார்கள். தனிப்பட்ட வாகனங்களில் சென்றும் வழங்கி வைத்தனர்.

பிரதேச சபை உறுப்பினர்கள் தத்தம் வட்டாரங்களில் பாரிய பங்களிப்பை வழங்கினார்கள். அதேவேளையில் கொனகல மாநாயக தேரரை ஞாபகப்படுத்த வேண்டிய தேவை அதிகம் இருக்கிறது. அவரது பங்களிப்பு தொடர்ச்சியாக இருந்து வந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை ஞாபக மூட்டுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

முதலாவது, இராண்டாவது கொரோனா தொற்று தடுப்பூசியை பலவதமாகத்தான் ஏற்ற வேண்டியிருந்தது. அவ்வகையில் கண்டி மாவட்டத்தில் நாங்களே முதன் முதலில் கொரோனா தொற்று தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டோம்.

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றுவதில் மத்திய மகாணம் இலங்கையில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட மட்டத்தை எடுத்துக் கொண்டால் 58 வீதம் என்ற அடிப்படையில் மாத்தளை மாவட்டம் முதலாம் இடத்தையும் கண்டி மாவட்ட 52 வீதம் என்ற அடிப்படையில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. முதலாவது இரண்டாவது தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் நாங்கள் 80 வீதம் என்ற அடிப்படையில் முன்னணி வகிக்கின்றோம்.

அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே தலைமையில் விசேட கூட்டம் நடைபெற்றது. இதில் மத்திய மாகாணத்திலுள்ள பிரதேச சபைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். கொரோனா தொற்றுத் தடுப்பூசிகள் ஏற்றுவதற்காக பணியாற்றிய பிரதேச சபையின் அனைத்து தலைவர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விடுக்கப்பட்ட நன்றி தெரிவிப்பினை ஆளுநர் லலித் யூ கமமே தெரிவித்தார். கொரோனா தடுப்பூசிகளை ஏற்றுவதற்காக பெருமளவு செலவுகள் செய்து எங்கள் பிரதேச சபைக்கு உட்பட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகஸ்தர்கள் எனக்கு பேருதவியாக இருந்தனர்.அதன் காரணமாகத்தான் 2020 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கு என்னுடைய பிரதேச சபை உறுப்பினர்களோ அலுவலக உத்தியோகஸ்தர்களோ இல்லாமல் இந்த வெற்றி இலக்கை அடைய முடிந்திருக்காது என்றார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ஷ மற்றும் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் ஆகியோரால் அக்குறணைப் பிரதேசத்தில் கொரோனாக் காலத்தில் சேவையாற்றிய அரச நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள் போன்றோருக்கு சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அக்குறணை பிரதேச சபைக்கான சான்றிதழ்களை அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் குழுமதத்தினர் பெற்றுக் கொண்டனர். வைத்திய அதிகார உத்தியோகஸ்தர் அலுவலகத்தின் சான்றிதழ்களை வைத்திய அதிகாரி சஞ்சீவ மற்றும் அவர்களது அலுவலக உத்தியோகஸ்தர்கள் பெற்றுக் கொண்டனர்.

அக்குறணை பிரதேச செயலாளர் இந்திகா குமாரி மற்றும் அலுவலக உத்தியோகஸ்தர்கள் குழுவினர்களும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். அலவத்துக்கொடை பொலிஸ் நிலையத்திற்கான சான்றிதழை பொறுப்பதிகாரி பெற்றுக் கொண்டார்.

மற்றும் அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் சான்றிதழை தலைவர் மௌலவி ஏ. எம். சியாம் பெற்றுக் கொண்டார். அக்குறனணை பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி அஸ்மி பாரூக் பெற்றுக் கொண்டார். ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப செயலாளரும் கசாவத்தையைச் சேர்ந்தருமான மௌலவி சியாம், இன்னும் உள்ளிட்ட பல நிறுவனங்களின் முக்கியஸ்தர்களுக்கான சான்றிதழ்கள், விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மாவத்தகம தினகரன் நிருபர்**













# நாட்டின் சுதந்திரம், கல்வி, பௌத்த சமயத்திற்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவர் சேர்.டி.பி. ஜயதிலக்க







**தெஹிவளை, கல்கிஸ்ஸை விசேட நிருபர்**

சேர்.டி.பி.ஜயதிலக்கவின் 154 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று (14) கொழும்பு 7ல் உள்ள பொது நம்பிக்கை பொறுப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ் அலுவலகத்தின் காணியில் அமைந்துள்ள சேர் ஜயதிலக்கவின் உருவச் சிலைக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, கல்வியமைச்சர் தினேஸ் குணவர்த்தன, இந்திய உயர்ஸ்தானிகர், தொல்பொருள், கலாசார இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் ஜயதிலக்கவின் உறவினர்களும் கலந்து கொண்டு மலர் வலையங்களை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன உரையாற்றுகையில்,..

சேர் ஜயதிலக்க இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகவும் கல்விக்காகவும் பௌத்த மதத்திற்காகவும் பௌத்த இளம் பரம்பரையினரை இணைத்து இளம் பௌத்த வாலிபர்கள் சங்கத்தை நிறுவி நாடளாவிய ரீதியில் நாட்டுக்கு அரும் பெரும் சேவையை செய்தவர்.

அவர் இலங்கையின் சுதந்திரத்திற்கும் தன்னையே அர்ப்பணித்த வீரபுருஷர். அவர் வாழ்ந்த கொழும்பிலுள்ள வீடு தான் இந்த அலுவலகமாகும். தனது சொத்துக்களை அரசுக்கு அன்பளிப்புச் செய்து பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினை உருவாக்கினார் சேர் ஜயதிலக்கவை தற்போதைய இளம் பரம்பரையினர் கட்டாயம் அறிந்திருத்தல் அவசியமாகும். இவ்வாறு அவரது நினைவு தின நிகழ்வுகளை வருடா வருடம் நடத்துவது சிறந்த அம்சமாகும். அவர் இந்த நாட்டின் பெரும் சொத்தாகும். பௌத்த அறநெறி பாடசாலைகள் விஹாரைகளை உருவாக்கியவர். அவர் வெளிநாடுகளில் கல்விகற்றாலும் தனது நாடு, மக்கள், கல்வி மேம்பாட்டுக்காக சாதாரண மனிதராக சிறந்த சிங்களவராக செயற்பட்டவர். 1943 ஆம் ஆண்டு பிரித்தானியர் இவருக்கு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தனர் என்று சபாநாயகர் தனது நினைவுரையில் கூறினார்.

நினைவு தின நிகழ்வில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருக்கும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்கள பணிப்பாளர்களுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இதில் இளையோர்களை கொண்ட தொல்பொருட்களைப் பாதுகாக்கும் சங்கமொன்றும் நிறுவுவதற்கும் சேர் ஜயதிலக்க வாழ்க்கை வரலாறு பற்றி ஒளி,ஒலி நூலகம் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

154 பிறந்த தினத்தை ஆரம்பமாக கொண்டு அடுத்த ஆண்டு பெப்ரவரி 13 வரை ஒரு வருட காலத்திற்குள் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப் போவதாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்தார்.

**பேலியகொட வித்தியோதய பௌத்த பீடத்தின் பிரதி பீடாதிபதி**

இளம் பரம்பரையினர் சேர் ஜயதிலக்க பற்றி தேடித் தெரிந்து கொள்வதற்கு நவீன முறையிலான தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அவர் பற்றி பாடசாலை கல்வி மட்டத்தில் கற்பதற்கும் பாடவிதானங்களை ஏற்படுத்தல் வேண்டும். அவர் இலங்கை நாட்டின் ஒரு பாரம்பரிய அருச் சொத்தாகும்.

அவர் செய்த சேவை போன்று வேறு எந்த தலைவரும் இந்த நாட்டுக்கு செய்யவில்லை எனக் கூறினார். நிகழ்வில் சேர் ஜயதிலக்கவின் உறவினரான முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ரத்னாயக்க, லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டப்ளிவ் தயாரத்ன, லேக்ஹவுஸ் சட்டம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ரகித்த அபேகுணவர்த்தன மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

154ஆவது நினைவுதின நிகழ்வில் சபாநாயகர்





### மிகை வரி சட்டமூலம்

# அரசாங்கம் மீளப்பெறாவிட்டால் தொழிற்சங்க போராட்டம் வெடிக்கும்

## அ.இ.தோ. தொழிலாளர் சங்க தலைவர் எச்சரிக்கை

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

"உழைக்கும் வர்க்கத்தினருக்கு பெரும் பாதிப்பாக அமையவுள்ள மிகைவரி சட்டமூலத்தை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும் " என அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஹற்றனில் நேற்று (14) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,



"வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை அதிகரித்ததால், அதனை நிவர்த்தி செய்வதற்கு புதிய வழி முறையொன்று கையாளப்படும் என நிதி அமைச்சு அறிவித்திருந்தது. அதற்காக தற்போது மிகைவரி சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தனக்கு தேவையான நிதியை திரட்டிக்கொள்வதற்காக அறிமுகப்படுத்தியுள்ள இந்த கொள்ளைக்கார, மோசடி வரித்திட்டத்தால் உழைக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் தற்போது ஊழியர் சேமபாலா நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் கைவைக்க முற்படுகின்றது. அரசின் இந்த திட்டம் குறித்து தொழிற்சங்கங்கள் விழித்துக்கொண்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாம் தெளிவுபடுத்திவருகின்றோம்.

உழைக்கும் வர்க்கத்தின் பணத்தை சூறையாடும் குறித்த மிகை வரி சட்டமூலத்தை அரசு மீளப்பெற வேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்க போராட்டங்கள் வெடிக்கும்." என்றார்.

# இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய சைக்கிளோட்டம்



நாட்டின் 74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் தனிநபராக 1407 கிலோமீட்டர் சைக்கிள் சவாரியை பொத்துவிலை சேர்ந்த சுல்பிகார், கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து ஆரம்பிக்கும் நிகழ்வு சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமானது.

இந்த சைக்கிள் சவாரி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, பொத்துவில், ஹம்பாந்தோட்டை ஊடாக கொழும்பை வந்தடையும்.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஜே.ஜே.பௌண்டேசன் தலைவர் எம்.வை.எம். அனீப் கலந்து சிறப்பித்தார். சிறப்பதிதிகளாக ஸ்ரீ லங்கா உலமா கவுன்சில் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத், கவிஞர் பொத்துவில் அஸ்மின், வசந்தம் தொலைக்காட்சி சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம் இர்பான், பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் அப்துல் மஜீத், உல்லாச பயணத்துறை தலைவர் ஏ.எம் ஜஃபர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# இரு ஆட்டோக்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

## ஒருவர் காயம்; புத்தளம் தில்லையடியில் சம்பவம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் தில்லையடி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (13) இரவு இரு முச்சக்கர வண்டிகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயங்களுக்குள்ளாகினார்.

புத்தளத்திலிருந்து ரத்மல்யாய பகுதியை நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி பஸ் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்த்திசையில் வந்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது முச்சக்கர வண்டிகள் இரண்டும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியதோடு அதில் பயணித்தவர்கள் அதிஷ்டவசமாக உயிர்த்தப்பியுள்ளனர். முச்சக்கர வண்டியின் சாரதி ஒருவர் சிறிய காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.



### நீர்கொழும்பு


# மஹவீதிய கலப்பு நீர்நிலைக்கு குப்பை கூளங்களால் பாதிப்பு

**(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**

நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, மஹவீதிய கலப்பு நீர்நிலை குப்பை கூளங்களினால் நிரம்பி வருவதாக பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

பிளாஸ்டிக் போத்தல்கள், வெற்று பிளாஸ்டிக் கேன்கள் மற்றும் அருகிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில் ஒன்றுசேருகின்ற கழிவுகளை சேகரித்த பொலித்தீன் பைகள் குறித்த கலப்பு பிரதேசத்தின் மணல் படுகையில் மிகவும் சூட்சுமமான முறையில் களவாக வீசப்பட்டு வருவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால் கலப்பு நீர்நிலையில் இறால், நண்டு மற்றும் சிறிய மீன்களை பிடிப்பதில் மீனவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.






இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு முகத்துவாரம் மிஸ்பா ஜெபமிஷனரி ஆலயத்தில் அதன் பிரதான போதகர் வண.ஜே.ஜே.சாரங்கபாணி தலைமையில் விசேட பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது. நாட்டின் நிரந்தர அமைதிக்கும், ஐக்கியத்துக்கும் ஆசி வேண்டி அங்கு பிரார்த்தனை நடத்தப்பட்டது. மேற்படி நிகழ்வில் மதவிவகார, கலாசார அமைச்சின் ஊடக செயலாளர் ஜெயரஞ்சன் யோகராஜ் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். இப்பிரார்த்தனை வைபவத்துக்கு ஊடக முக்கியத்துவம் அளித்தமைக்காக தினகரன் பத்திரிகைக்கு அங்கு விசேடமாக நன்றி தெரிவிக்கப்பட்டதுடன், தினகரனின் வெற்றிப் பயணத்துக்கு இறையாசி வேண்டி பிரார்த்தனையும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்ற மூத்த போதகர் குழுவையும், கலந்து கொண்ட ஆலய பக்தர்களையும் படத்தில் காணலாம்.

# அனுராதபுரம் மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரிப்பு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

அனுராதபுரம் மாவட்டத்தில் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் கொரோனா தொற்றாளர்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாக அனுராதபுரம் மாவட்ட தொற்று நோய்ப்பிரிவு விசேட வைத்திய நிபுணர் ஆர்.எம்.எச்.பீ. ரத்நாயக்க தெரிவித்தார்.

கிராமிய வைத்தியசாலைகள்,மாவட்ட வைத்தியசாலைகள்,பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் ஒவ்வொரு நாளும் கிடைக்கப்பெறும் தகவல்களின் படி நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவித்த அவர், கடந்த வாரம் முதல் சுகாதார ஊழியர்கள் மேற்கொண்டு வரும் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக பீ.சீ.ஆர்.மற்றும் என்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

கொரோனா தொற்று அறிகுறி காணப்படுபவர்கள் சுகாதார திணைக்களத்தின் அனுமதி பெற்ற தனியார் வைத்திய பரிசோதனை கூடங்களில் வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை வங்கி

## கொள்வனவு செய்ய வெற்றுக்காணி/கட்டிடத்துடன் காணி தேவைப்படுகின்றது

பின்வரும் இலங்கை வங்கி கிளைகளுக்காக முக்கிய வர்த்தகப் பிரதேசங்களுள் ஆகக் குறைந்தது 75 அடிகள் பாதையை முன்னோக்கியதாக 51 பேர்ச்சசுகள் விஸ்தீரணமுடைய காணிகள் / கட்டிடங்களுடன் காணிகள் தேவைப்படுகின்றன :

**பிலியந்தல மீரிகம**

காணி உரிமையாளர்கள் மாத்திரம் காணியின் விவரணம், மூல உறுதியின் நகல், அங்கீகரித்த அளவை வரைபடம் உள்ளூர் அதிகாரப் பத்திரங்கள் (வீதி ரேகை சான்றிதழ், கையகப்படுத்தாமை சான்றிதழ், உரிமை சான்றிதழ்) மற்றும் எதிர்பார்க்கப்படும் விலை ஆகியவற்றுடன் ஏலவிலை கூறல்களை தொலைபேசி இலக்கத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்

ஏலவிலை கூற ஆர்வமுடையவர்கள் மேலே கேட்கப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிப்பதுடன் எதிர்பார்க்கப்படும் மிகக் குறைந்த விலையையும் குறிப்பிட்டு முத்திரையிட்டு தபால் உறையில் இட்டு பதிவுத் தபால் மூலம் கீழ்க் கண்ட முகவரிக்கு 2022.03.08 திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல. 01,
இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி இல. 011-2544310, 011-2434786
தொலைநகல் 011-2449629

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## வ/ப தம்பதெனிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தம்பதெனிய

### மீட்கப்படாத அடகுத் தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

வ/ப தம்பதெனிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், தம்பதெனிய, பின்னபொல, நாரம்மல, மெடியகனே, கடஹபொல, குடகம்மன, ரங்கல்லேபொல, தம்பேலெஸ்ஸ, புஸ்கொலதெனிய, பெம்முல்லேகெதர, முத்துகல, பொல்கஹயாய, மரந்தகொல்ல எனும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2020-12-31ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2022-03-04ஆம் திகதி வரை மீட்கப்படாத அடகுத் தங்க ஆபரணங்களை 2022-03-05 மற்றும் 2022-03-06ஆம் திகதிகளில் மு.ப. 9.00 மணி முதல் வ/ப தம்பதெனிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கூட்டுறவாளர்**

**பொது முகாமையாளர்,**
**வ/ப தம்பதெனிய ப.நோ.கூ. சங்கம்,**
**தம்பதெனிய.**
**தொலைபேசி இல.: 037-2266031, தொலைநகல் இல.: 037-2266103**

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2021 ஆகஸ்ட் 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2022 பெப்ரவரி 25ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புள்ளை | 2021 ஆகஸ்ட் 31ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, நீர்க்கொழும்பு வீதி, குருணாகலை |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல. 46/12, சயுறு செவன,
நவம் மாவத்தை, கொழும்பு-02.

உள்ளக பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு டோனர் காட்ரிஜ்களை (Toner Cartridge) வழங்குதல்

### ஒப்பந்த இல.: DIE/PRO/01/2022/01

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் பின்வருமாறு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாயா" கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்காக ரோனர் காட்ரிஜ்களை (Toner Cartridge) வழங்குவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
3. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளரிமிருந்து (கொள்முதல்) பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், விலைமனு ஆவணங்களை அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை பரீட்சிக்க முடியும்.

   தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011-5329530/011-5329535 தொலைநகல்: 011 - 2879091
4. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு மீளளிக்கப்படாத ரூபா நாளாயிரம் (ரூ.4000.00) கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2022.02.17 ஆம் திகதி முதல் 2022.03.09 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.
5. அனைத்து விலைமனுக்களையும் தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், "சுஹுருபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு 2022.03.10 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவோ முடியும். விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் சமுகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
6. விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனு, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும், விலைகூறல் ஆவணத்தில் பகுதி III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைமனு பிணையமொன்றுடன் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு (முகவரிக்கு) அனுப்பப்படல் வேண்டும். அத்தோடு, விலைமனுப் பிணையமானது ரூ. 200,000.00 பெறுமதியைக் கொண்டதாகவும் 2022.06.23 ஆம் திகதி (77 + 28 நாட்கள்) வரை செல்லுபடியானதாகவும் விலைமனு தரவுப் பத்திரத்தின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவர் நிறுவனமொன்றினால் விநியோகிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
8. விலைமனு முன் சந்திப்பொன்று 2022.02.25 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாயா" கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின், 5 ஆம் மாடியில் நடைபெறும்.

**யூ.வீ. சரத் ரூப்பசிறி**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹுருபாயா", சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.**

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

தொழில்நுட்ப அமைச்சு

SAPP

## சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### SAPP அலுவலகத்திற்கான 20 எண்ணிக்கையான மடிக் கணனி, 03 எண்ணிக்கையான மேசைக் கணனிகள், 60 எண்ணிக்கையான TABS மற்றும் 05 எண்ணிக்கையான External Hard Disks என்பவற்றுக்கான பெறுகை

**ஒப்பந்த இலக்கம்: SAPP/PRO/GDS/2022/05**

1. பின்வரும் உருப்படிகளின் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் (SAPP) சார்பில் விவசாய அமைச்சின் பெறுகைக் குழு அழைக்கின்றது.

| உருப்படி இல. | உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி |
|---|---|---|---|
| 01 | Laptops Computers | 20 | ரூபா 40,000.00 |
| 02 | Desktop Computers | 03 | ரூபா 3,000.00 |
| 03 | TABs | 60 | ரூபா 54,000.00 |
| 04 | External Hard Disk Drive (HDD) | 05 | ரூபா 1,000.00 |

2. பெறுகைகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் 011-2448031 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது gamini@sapp.lk எனும் மின்னஞ்சல் ஊடாக சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் (SAPP) பெறுகை நிபுணரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்தில் 2022-02-15ஆம் திகதி முதல் 2022-02-28ஆம் திகதி வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,500.00 கட்டணத்தைச் செலுத்தி மற்றும் 2022-02-15ஆம் திகதி முதல் 2022-02-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் இட்டு 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2022-03-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதி நாள் முதல் 60 நாட்களுக்கு அல்லது கொள்வனவாளரால் நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு நீடிக்கப்பட்ட நாள் வரை செல்லுபடியாதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் (விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்) என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் 01ஆம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்டதும் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு (சிறியளவு),**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம்,**
**இல. 212/A, நாவல வீதி,**
**இராஜகிரிய.**

கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

# அறிவித்தல்

## திருப்பி அமைத்தல் விலை கோரும் திட்ட அளவுகளையும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை (ஐ.சீ.டபிள்யு) (Gov/CIDA/Directive/101/2022)

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (சீடா) அதிகாரம் பெற்றதின் மூலம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி (சீ ஐ ட) சட்டம் 33 படி 2014 இத்தால் அறிவிப்பது வேலை வழங்குனர் / வாடிக்கையாளர் / ஒப்பந்தகாரர் / பங்குதார நிறுவனங்கள / பட்டம் பெற்றவர்கள் வேறு பங்குதாரர் நிர்மாணத்துறை சார்ந்தவர்கள் வெகு விரைவில் முக்கியமானவை திருத்தி அமைக்கப்படும். சீடா திட்ட அளவுகள் விலை கோரும் படிவங்கள் LCW பாதுகாப்பதற்கு பங்குதாரர்களின் உரிமைகளும் கடமைகளும், அனைத்து பங்குதாரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கட்டுமானத்துறையின் நன்மைக்காக.

ICW s, செயல்படுத்துவதில் பின்வரும் முன்மொழிவுகள் செயற்படுத்தப்படும்.2014 இன் 33 CID சட்டத்தின் பிரிவு 46 இன் விதிகளின் கீழ் தற்போதைய அறிவிப்பு முன்னர் வெளியிட்ட அறிவிப்புக்கு மேலும் வலுவூட்டுவதாக உள்ளது. ஆதார் எண்களைக்கொண்டது. **Gov/CIDA/Directive/106/2021**,**107/ 2021** , **108/2021** மற்றும் **109/2021** சிடாவின் இணையத்தளத்திலிருந்து **www.cida.gov.lk** பதிவிறக்கம் செய்யலாம்.

1. 2014 ஆம் ஆண்டின் CID சட்டம் 33 ஆல் விதிக்கப்பட்டது. சீடா SBD ன் பொதுவான நிபந்தனை திட்ட அடிப்படையில் வழங்கப்படும். மென்மையான டிஜிரல் வடிவில் ICW ஐ மேற்கொள்ளும் போது SBD க்கு சட்டவிரோதமான மாற்றத்தின் சிக்கலைத் தீர்க்கும் நோக்கத்துடன் ஒரு பிரத்தியேக மின்னணு மற்றும் அனலாக் அடையாள அமைப்பைப் பயன்படுத்துதல்.

2. இதன்படி, மாற்றங்கள் குறிப்பிட்ட SBD அமைவாக ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட வேலைத்திட்டம் மாத்திரமே அமையும்.

3. சரியான தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு ICW வேலை வழங்குனர் / வாடிக்கையாளர் / நிறுவனங்கள / ஸ்தாபனங்கள் அங்கீகரிக்கப்பட்ட பதிவுகளின் பிரதிகளின் SBD குறிப்பிட்ட ICW பாவனைக்காக வழங்கப்படும். ஒவ்வொரு பதிவுகளும் வருடா வருடம் புதுப்பிக்கவேண்டும். பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் SBD தளத்தில் **www.cida.gov.lk** பார்வையிடலாம்.

நிர்மாண கைத்தொழில் திட்டப்படி அடையாளப்படுத்தப்பட்ட நிர்மாண வேலை (ICW) ஆவது பொது வேலைத்திட்டத்துக்கு **ரூ. 10,000,000.00** பத்து மில்லியனுக்கு அல்லது அதற்கு மேலானது நேரத்துக்கு நேரம் மந்திரி சபையின் அறிவுறுத்தலின்படி.

எல்லா வழமையான நிறுவனங்கள் (வேலை வழங்குனர்/ அபிவிருத்தி செய்வோர்) தகுதி உள்ளவர்கள் / ஒப்பந்தகாரரும் CID கட்டளை இல 33 ன் 2014 சட்டபடியான நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும். ஏதாவது இந்தச் சட்டத்திற்கு முரணாக நடந்தால் தண்டனைக்கு உரிய குற்றமாகும். தண்டனையாக **ரூ.100,000.00** அல்லது 2 வருட சிறை தண்டனையாகும். அல்லது சிறைத்தண்டனையும் தண்டப்பணமும் ஆகும்.

உடன்படிக்கை அமைவாக பிரிவு 1 (2) ன் CID படி, சீடா பங்குதாரர்களையும் நிர்மாணக் கைத்தொழிலிடமிருந்து விசாரித்து அறிந்து கொள்ளவும்.

எந்திரி. (பேராசிரியர்) என். ரீ சோகான் விஜயசேகரா

தலைவர்,

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (சீடா)**

15.02.2022

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹவெல, கொஸ்வெடிய, இல 180 எனும் முகவரியில் வசிக்கும் ஹபன் பெடிகே ப்ரியா கமனி வீரசிங்க (தேசிய அ.அ.இ 647112102V) ஆகிய நான் சிலாபம், வில்பத, இல 322 எனும் முகவரியில் வசிக்கும் ஜயலத் ராலலாகே ரன்ஜித் குமார (தேசிய அ.அ.இ 650680979V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு திரு டப்லிவ், ஜே. ருவன் ஷமிந்த ப்ரனாந்து என்பவரால் 2016.07.30 ஆந் திகதி எழுதி அத்தாட்சிபடுத்தப்பட்டு வழங்கப்பட்ட 341 இலக்கமுடைய அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச்செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி அற்றோணித்தத்துவத்தின் மீது அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து எனது சார்பாக அவர் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புதாரியாக இருக்கப்போவதில்லையென இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும், அதன் அனைத்து பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
+94 112429341
Hotline 1949

## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு

320

### வெற்றிடங்கள்

**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொலன்னாவ பேக்கரி ஒன்றிற்கு சோட்ஈட்ஸ் செய்பவர்கள், விற்பனை உதவி செய்வோர், உதவியாளர்கள் பெண்கள் மற்றும் ஆண்கள் தேவை. 0750333249, 0775333249. 011843

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

### பொதுமக்களுக்கான அறிவித்தல்

1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதிப் பெயர்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை நிர்மாணித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேசத்திலுள்ள வீதிகளுக்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெயரிட சபை தீர்மானித்துள்ளது. பெயரிடுவதல் முன்மொழிவுகளுக்கு எதிரான ஏதேனும் ஆட்சேபனைகள் காணப்படின், அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் நகராட்சி ஆணையாளரிடம் ஆட்சேபனைகளை எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்க வேண்டும்.

| தொடர் இலக்கம் | தற்போதைய பெயர் | முன்மொழியப்பட்ட பெயர் |
|---|---|---|
| 01. | இராஜகிரிய வீதி, மதிப்பீட்டு இலக்கம் 95/9 அமைந்துள்ள அருணோதய மாவத்தை ஆரம்பம் வரையான பாதை. | "பட்டிதான விஹாரை மாவத்தை" |
| 02. | மிஷன் ஒழுங்கையில் மதிப்பீட்டு இலக்கம் 15/4 முதல் மதிப்பீட்டு இலக்கம் 15/7 வரையான வீதி. | "8 ஆவது மிஷன் ஒழுங்கை" |
| 03. | மிஷன் ஒழுங்கையில் மதிப்பீட்டு இலக்கம் 18/26 முதல் மதிப்பீட்டு இலக்கம் 27/18 வரையான வீதி. | "6 ஆவது மிஷன் ஒழுங்கை" |
| 04. | மிஷன் ஒழுங்கை மதிப்பீட்டு இலக்கம் 18 முதல் மதிப்பீட்டு இலக்கம் 18/4 வரையான வீதி. | "5 ஆவது மிஷன் ஒழுங்கை" |
| 05. | மிஷன் ஒழுங்கை மதிப்பீட்டு இலக்கம் 22/2 முதல் 22/11 வரையான வீதி. | "7 ஆவது மிஷன் ஒழுங்கை" |
| 06. | கங்கொடவில சோமாதலகல மாவத்தை (பெங்கிரிவத்த வீதி, முதலாம் ஒழுங்கை) இலக்கம் 14 ஆம் வீட்டுக்கருகாமையிலிருந்து இலக்கம் 14/5 வரை காணப்படும் வீதி | "சுஹத மாவத்தை" |
| 07. | இராஜகிரிய, நாவல வீதி, குருந்துவத்த வீதி. | "குருந்துவத்த பள்ளிவாசல் வீதி" |
| 08. | கங்கொடவில தெற்கு மதிப்பீட்டு இலக்கம் 96/2 முதல் 100 வரை. | "ஹரித்த மாவத்தை" |
| 09. | பெத்தகான நலன்புரி வீதியில் வலது பக்க மாவத்தை. | "தெற்கு 1ஆவது ஒழுங்கை" |

2022.02.13
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை
மாநகர சபை அலுவலகத்தில்

ஆர், ஏ, ஷாலிக்கா எஸ் இரணவீர,
நகராட்சித் தலைவர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே மாநகர சபை

## பெறுகை அறிவித்தல்

### மாவத்தகம பிரதேச சபை

மாவத்தகம பிரதேச சபையின் பொது பஸ் தரிப்பிடக் கட்டிடத்தின் முதலாம் மாடியிலுள்ள கடை அறைகளை நீண்டகால குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. 2022 பெப்ரவரி 28 அன்று பி.ப. 3.00 வரை பிரதேச சபை அலுவலகத்தில் அதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், 2022 மார்ச் 01 அன்று மு.ப. 10.30 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் மு.ப. 11.00 இற்கு விலைமனுத்திறக்கப்படும்.

03. உங்கள் விலைமனுக்களை, 'தலைவர், மாவத்தகம பிரதேச சபை' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதன் மூலம் சமர்ப்பிக்கலாம். கேள்விகளை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், 'விண்ணப்பிக்கும் கடை அறையின் இலக்கம்' மற்றும் 'பொது பஸ் நிலைய கடை அறை' எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்திச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை**

| கடை அறை இலக்கம் | கடை அறையொன்றின் விஸ்தீரணம் | கடை அறையொன்றின் ஆகக்குறைந்த கேள்வி ரூபா |
|---|---|---|
| UA-2, UA-3, UA-4, UA-6, UA-8, UA-9, UB-2, UB-3, UB-4, | 214 | 2,225,000.00 |
| UA-15 | 389 | 4,040,000.00 |
| UA-20 | 353 | 3,665,000.00 |
| UA-21 | 357 | 3,710,000.00 |
| UB-11 | 229 | 2,380,000.00 |
| UB-12 | 241 | 2,505,000.00 |

05. இவ் அலுவலகத்தில் ரூபா 5000/- இற்கான மீளளிக்கப்படாத மற்றும் ரூபா 10,000/- இற்கான மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையமொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன், ஆகக்குறைந்த கேள்விக்கும் குறைவான கேள்விக்கான வைப்புத் தொகையானது மீளளிக்கப்பட மாட்டாது.

06. சித்திகரமான விலைமனுதாரருக்கு டெண்டர் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், ஏனைய விண்ணப்பதாரர்களின் வைப்புத் தொகையானது மீளளிக்கப்படும்.

07. உரிய தினம் மற்றும் நேரத்தில் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

08. சித்திகரமான விலைமனுதாரருக்கு அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள், குறித்த தொகையை ஒரே முறையில் அல்லது, பெறுமானத்தின் 50%ஐ முதலில் செலுத்துதல் வேண்டும். மிகுதி சமமான 03 தவணைகளில் 03 மாதங்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.

09. 10 வருடங்களுக்கு, நீண்டகாலக் குத்தகை அடிப்படையில், ஆதனங்கள் வழங்கப்படுவதுடன், வருடாந்த மதிப்பீட்டுத் தொகையை மாதாந்தம் செலுத்துதல் வேணடும்.

10. நீண்டகாலக் குத்தகைக்காலம் முடிவுற்றதும், ஆதனங்களைக் குத்தகைக்கு விடுவதற்காக மீண்டும் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் எட்டப்படல் வேண்டும்.

11. குத்தகைத் தொகை உரியவாறு செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், செலுத்தப்பட வேண்டிய முற்பணத்தின் தவணைக் கட்டணம் அல்லது வருடாந்த வாடகைத் தொகையைத் தாமதப்படுத்துதல் கொடுப்பனவைத் தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளினால், அவ் ஆதனமானது மீண்டும் சபைக்கு உரித்தாக்கப்படுமென்பதுடன், அதன் பிரகாரம் பொதுச் சபையினால் குத்தகை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

12. ஆதனங்களை இடைக்காலக் குத்தகைக்கு விடுதல், வேறு தரப்பினருக்கு விற்றல், அல்லது வேறு கருமமொன்றிற்காகப் பயன்படுத்துதல் கூடாது, அரசு, காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஒழுகுதல் வேண்டும்.

**எஸ்.கே. அநுர கமல் பெரேரா**
**தலைவர்,**
**பிரதேச சபை**
**மாவத்தகம.**

## திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

### தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### மருதானை, தொழில்நுட்பவியல் கல்லூரியின் ஐந்து மாடி கட்டிடத்திற்கு மின்னுயர்த்தியொன்றை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல்

**விலைமனு அடையாளம் காணல் இல.: DTET/09/01/38/R-31/2021/Lift**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரியின் ஐந்து மாடிக் கட்டிடத்திற்கு மின்னுயர்த்தியொன்றை **(Machine Roomless)** வழங்கல்,நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   இவ்வேலையானது நியமமாக்கப்பட்ட இயந்திர அறையில்லாத (machine roomless) வகையான பயணிகள் மின்தூக்கி ஆகக்குறைந்த கொள்ளளவாகிய 1000 கிலோ மற்றும் 12 பயணிகளுடன் நிமிடத்திற்கு 60எம் வேகத்துடன் 5 நிறுத்தங்கள் அத்துடன் இறங்கும் கதவுகளுடன் (தெளிவாக உள்ளே பார்க்கக்கூடிய பதமாக்கப்பட்ட கண்ணாடி கதவுகள்) மற்றும் அனைத்து துணைப்பாகங்களுடன் அமையப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

   இவ்வேலைத்தளமானது மருதானை தொழிற்நுட்பவியல் கல்லூரியில் அமைந்துள்ளது. ஒப்பந்தக் காலமானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 180 நாட்களாகவிருத்தல் வேண்டும்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   அ. மின்தூக்கிகள் மற்றும் தொடர்புடைய வகையான உபகரணங்களை வழங்குவதில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவு (அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)
   ஆ. விலைமனுதாரரானவர் புகழ் வாய்ந்த உள்ளூர் கம்பனியொன்றாகவும் ஆகக் குறைந்தது கடந்த பத்து (10) வருடங்களில் முன்வைக்கப்படும் அதே பெயர் வகை மற்றும் இன மின்தூக்கிகளை திட்டமிடல், பொறியியல், வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.
   இ. விலைமனுதாரரானவர் வழங்குவதற்கும் மற்றும் நிறுவவிருத்தலுக்குமாக முன்வைக்கப்படும் மின்தூக்கியின் உள்ளூர் முகவராகவும் விற்பனையின் பின்னராக சேவை வசதிகளையுமுடையவராகவிருத்தல் வேண்டும்.
   ஈ. மின்தூக்கி உற்பத்தியாளரானவர் உலகளாவியரீதியில் மின்தூக்கிகளை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகக் குறைந்தது பதினைந்து வருட அனுபவத்தையும் ஆகக் குறைந்தது 10 வருடங்களையும் இலங்கையில் கொண்டிருத்தல் வேண்டும்.
   உ. முன்வைக்கப்படும் மின்தூக்கியானது (உற்பத்திக்கான மூல நாடு ஐரோப்பா, அஜரா, ஜப்பான், தென் கொரியா) ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (05) வருடங்கள் அரசாங்க நிறுவனங்கள் அடங்கலாக திருப்திகரமான சேவைப்பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பிரிவு, பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதுடன் தொடர்பு இலக்கமானது 011-2348894 ஆகும்.

5. 2022.02.15 ஆம் திகதியிலிருந்து 2022.03.03 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,000 ரூபாவை கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், 2 ஆம் மாடியின் கணக்கிடல் பிரிவின் காசாளரிடம் செலுத்திய பின்னர், கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பிரிவு, பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. 2022.03.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், பெறுகைக் குழுத் தலைவரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுவின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயரானது குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்று சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

7. கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்கள பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் 2022.02.22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8. எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எந்தவொரு விலைமனுவையும் முழுமையாகவோ அல்லது பகுதியொன்றையோ ஏற்றுக் கொள்வதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

9. விலைமனுக்கள் எண்பதாயிரம் (80,000 இ. ரூபா) இற்கான தொகைக்கும் தொழிற்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். 2022.06.03 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் நிபந்தனையற்றதும் இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வங்கி உத்தரவாதத்துடன் விலைமனுப் பிணையானது இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்,**
**557, ஒல்கட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை புகையிரத சேவைகள்

### இலங்கை புகையிரத சேவைகளுக்கு 5,000 எண்ணிக்கையான EN 45 EI-(45'00") R 260 - EN 13674 தண்டவாளங்களின் பெறுகை – பெறுகை இல.: - SRS/F.7805

1. இலங்கை புகையிரத சேவைகளுக்கு 5000 எண்ணிக்கையுள்ள EN 45 EI (45'00") (13.716m) R 260-EN 13674 தண்டவாளங்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை, கொழும்பு, த.பெ. 355, புகையிரத தலைமையகம், இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட தரஅங்கீகாரம் பெற்ற முகவரூடாகவும் சமர்ப்பிக்கலாம்.
2. விலைமனுக்கோரல் சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   **பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
   **புகையிரத பெறுகை உப-திணைக்களம்,**
   **ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.**

   **தொலைபேசி இலக்கங்கள்:** 94(11 2438078 அல்லது 94 (11) 2436818
   **தொலைநகல் இலக்கம்:** 94(11)2432044
   **மின்னஞ்சல்:** srs.slr@gmail.com
   **இணையதளம்:** www.railway.gov.lk

4. தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   அ. இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் பண்டங்கள் இந்த விலைமனுவுடன் வழங்கப்பட்டுள்ள புகையிரத களஞ்சியசாலைகள் அளவுக்குறிப்புக்களான RSS No. 557 A இற்கு ஒத்திருத்தல் வேண்டும்.
   ஆ. வழங்கப்படவுள்ள ஒவ்வொரு அம்சத்தின் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான ISO 9001:2008 இன் பிரதிகள் முனைப்புடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   இ. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
      i. அனைத்து விலைமனுதாரர்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பண்டங்களை வழங்குவதற்கான சட்ட உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
      ii. விலைமனுதாரரானவர் ஆர்வ முரண்பாடொன்றைக் கொண்டிருத்தல் ஆகாது. ஆர்வ முரண்பாடொன்றைக் கொண்டிருப்பதாக கண்டுபிடிக்கப்படும் அனைத்து விலைமனுதாரர்களும் தகைமையை இழந்து விடுவர். இந்த வலைமனுக்கோரல் செயற்பாட்டில் பின்வருவனவற்றைக் கொண்டுள்ள ஒன்று அல்லது மேற்பட்ட சாரார்களுடன் ஆர்வ முரண்பாடொன்றைக் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் பரிசீலனை செய்யப்படுவர்.
         (அ) இவ்வாறான விலைமனுக்கோரல் ஆவணங்களின் கீழ் கொள்வனவு செய்ய வேண்டிய பண்டங்களுக்காக பாவிக்கப்படவுள்ள வடிவமைப்பு, அளவுக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை தயாரித்தலுக்காக உசாத்துணை சேவைகளை வழங்குவதற்காக கொள்வனவுக்காரரினால் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அல்லது கடந்த காலத்தில் நிறுவனமொன்றுடன் அல்லது அதனது இணைந்த நிறுவனங்களுடன் இணைந்திருத்தல், அல்லது
         (ஆ) இந்த விலைமனுக்கோரல் செயற்பாட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட விலைமனுவை சமர்ப்பித்தல். இருப்பினும், ஒன்றிற்கு மேற்பட்ட விலைமனுக்களின் பங்குபெறுதல் வரையறுக்கப்படவில்லை.
      iii. விலைமனுவை சமர்ப்பிக்கும் திகதியன்று அல்லது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியில் தேசிய பெறுகை முகவராண்மையினால் தகுதித்தன்மையற்றதென பிரகடனப்படுத்தப்பட்டால், அவ்வாறான விலைமனுதாரர் தகைமையை இழந்து விடுவார். **www.npa.gov.lk** என்ற தேசிய பெறுகை முகவராண்மையின் இணையதளத்தில் தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
      iv. கடந்த பத்து (10) வருடங்களில் சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் EN 45 EI/BS 90 (A) தண்டவாளங்களை ஆகக் குறைந்த பேரளவு எண்ணிக்கையான 5,000 எண்ணிக்கையில் (3,000 தொன்கள்) பாவனையாளரொருவரினால் வழங்கப்பட்ட செயற்பாட்டு சான்றிதழை உற்பத்தியாளர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
      v. கடந்த பத்து (10) வருடங்களில் ஆகக் குறைந்தது பேரளவு எண்ணிக்கையில் 5,000 எண்ணிக்கையான (3,000 தொன்கள்) EN 45 EI/BS 90 (A) தண்டவாளங்களையும் EN 13674 நியமமாக்கலின் பிரகாரம் கடந்த மூன்று (03) வருடங்களில் 50,000 தொன்கள் ஏனைய தண்டவாளங்களையும் வழங்கியுள்ளதாக உற்பத்தியாளர்/ உற்பத்தியாளர்கள் அவர்களின் அரசாங்கத்திடமிருந்து சான்றிதழொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. அ. எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது அவருக்கு அல்லது அவரின் சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுத்தலின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தன்னை விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவு செய்தலின் சான்றிதழின் மூலப் பிரதியானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அப்படியான மூலப் பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரரின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
   ஆ. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களில் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பித்ததிற்கு பின்னரும் பெறுகையை வழங்குவதற்கு முன்னரும் விலைமனுதாரர் தம்மை உடனடியாகவே பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட பதிவு செய்தல் சான்றிதழை வழங்காவிடின் எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது.
6. 2022.02.15 ஆம் திகதியிலிருந்து 2022.03.28 ஆம் திகதி வரையும் இலங்கை நேரம் பி.ப 3 மணி வரையும் இலங்கை, கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, புகையிரத பெறுகை உப-திணைக்களம், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் முகவரிக்கு அல்லது வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுவராலயங்களுக்கு இலகுவில் மாற்றக்கூடிய நாணயமாக 64,000 ரூபா மாத்திரம் பெறுமதியான மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களை ஆர்வமுள்ள விலைமனுதாரரினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2022.03.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

   **தலைவர்,**
   **அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
   **போக்குவரத்து அமைச்சு,**
   **7 ஆம் மாடி, ''செத்சிரிபாய", 11 ஆம் கட்டம், பத்தரமுல்ல, இலங்கை.**

தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022.03.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பத்தரமுல்ல, 11 ஆம் கட்டம், 'செத்சிரிபாய', 7 ஆம் மாடி, போக்குவரத்து அமைச்சின் சபை அறையில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு, போக்குவரத்து அமைச்சு**

**குறிப்பீட்டு இல.: SRS/F. 7805**

# INVITATION FOR BIDS (IFB)

## MARITIMEPATTU PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)

**LOAN NUMBER: P163305**

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Reconstruction of Koddaikkerny Pillaiyar Kovil Road (Stage II)**

02. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Maritimepattu Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Reconstruction of Koddaikkerny Pillaiyar Kovil Road (Stage II)** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs.Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/MU/MPPS/2022/01 | Reconstruction of Koddaikkerny Pillaiyar Kovil Road (Stage II) | 12.43 | C6 | 91 Days |

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu** (T.P No: 0243243542, Fax No: 0212290001) and inspect the bidding documents at the address given below from **15th February 2022** until **15th March 2022** during 09:00 Hrs to 15:00 Hrs on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu** from **15th February 2022** until from **15th March 2022** during **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Four Thousand Rupees (Rs. 4,000.00).** The method of payment will be by cash.

08. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu** on or before **14.00 Hrs** on **16th March 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

09. Bids shall be valid up to **01st June, 2022.** All bids shall be accompanied by a Bid-Security, of **Rs.150,000.00.** Bid Security shall be valid up to **29th June, 2022.**

10. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **08th March 2022** at **Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu**

**Chairman,
Local Authority Procurement Committee (LAPC)
Maritimepattu Pradeshiya Sabha,
Maritimepattu,
Mullaitivu.**

# கொழும்பு மாநகர சபை

**கொழும்பு மாநகர சபையின் மூலம் 2021.09.17ஆம் திகதிய 2245/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது**

**(1952ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தரப்படுத்தப்பட்ட துணை விதிச் சட்டம்)
1989.01.20ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி 541/17ஆம் இலக்க துணை விதிச் சட்டத்தின் Vஆம் பாகத்தின் பிரகாரமான கேள்வி அறிவித்தல்**

## விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள் / விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள் / சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD15/1814/2022 | 20 எண்ணிக்கையான மடிக் கணனிகளின் (Laptop) பெறுகை | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,400.00 | 75,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD15/418/2021 | 268 எண்ணிக்கையான மேசைக் கணனிகள் (Desktop) பெறுகை | | ரூபா 5,400.00 | 600,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01** - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம் 04,
இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
கொழும்பு 06.**

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
மாளிகாகந்த, கொழும்பு 10.**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02** - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-03-07ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022 மார்ச் 07ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2022.08.04ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2022.07.05ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022 மார்ச் 08ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022 மார்ச் 08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை புகையிரத சேவைகள்

**Loan No: IDA-63440**

01. துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு CERC திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு பின்வரும் பெறுகைகளுக்கான ஒப்பந்தத்தின் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடம் இருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் திட்ட பெறுகைக்குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

**அட்டவணை I.**

| வரிசை இல. | கோப்பு இல. | விபரம் | ஆவணக் கட்டணம் | விலைமனு பிணை |
|---|---|---|---|---|
| 1. | SRS/F. 7807 | S11 ரயில் பெட்டி கழிப்பறைகளின் கழிகலம் மற்றும் Flushing Valve (55) இனை மாற்றுதல் மற்றும் மூலையில் உள்ள கழுவும் தொட்டி, குழாய் வாய் மற்றும் கண்ணாடியை மாற்றுதல். | ரூபா 6,900.00 | ரூபா 250,000.00 |
| 2. | SRS/F. 7810 | கழிப்பறை அறையை முழுமையாக மாற்றுதல் மற்றும் அது சார்ந்த மேம்பாடுகள் மற்றும் துருப்பிடிக்காத உருக்கு நீர்த் தொட்டிகளை (10) நிறுவுவதுடன் ருமேனிய ரயில் பெட்டி கழிப்பறைகளை மாற்றுதல். | ரூபா 6,000.00 | ரூபா 204,000.00 |
| 3. | SRS/F. 7812 | 10 ருமேனிய ரயில் பெட்டிகளுக்கான புதிய இருக்கை தொகுதிகளை வழங்கல். | ரூபா 4,000.00 | ரூபா 113,000.00 |
| 4. | SRS/F. 7813 | S11 வகுப்பு பல அலகுகளுக்காக 1,100 சுழலும் வகை ரயில் பெட்டி கூரை மின் விசிறிகளின் வழங்கல். | ரூபா 6,700.00 | ரூபா 240,000.00 |
| 5. | SRS/F. 7820 | இலங்கை புகையிரத சேவையின் 10 புகையிரத நிலையங்கள் உட்பட 12 இடங்களில் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல்.<br>a) அம்பலாங்கொடை புகையிரத நிலையம்<br>b) நாவலப்பிட்டி புகையிரத நிலையம்<br>c) ராகம புகையிரத நிலையம்<br>d) மாத்தறை புகையிரத நிலையம்<br>e) மொரட்டுவ புகையிரத நிலையம்<br>f) குருநாகல் புகையிரத நிலையம்<br>g) நுகேகொடை புகையிரத நிலையம்<br>h) ஹப்புத்தளை புகையிரத நிலையம்<br>i) கம்பஹா புகையிரத நிலையம்<br>j) கொழும்பு கோட்டை புகையிரத நிலையம்<br>k) தலைமை இயந்திரப் பொறியியலாளரின் (CME) இரத்மலானை உப திணைக்களம்<br>l) தலைமை பொறியியலாளரின் (இயக்கு வலு) தெமட்டகொடை உப திணைக்களம் | ரூபா 2,100.00<br>ரூபா 2,000.00<br>ரூபா 1,900.00<br>ரூபா 5,200.00<br>ரூபா 2,000.00<br>ரூபா 3,600.00<br>ரூபா 3,600.00<br>ரூபா 2,500.00<br>ரூபா 3,100.00<br>ரூபா 2,350.00<br>ரூபா 2,700.00<br>ரூபா 6,550.00 | ரூபா 55,000.00<br>ரூபா 52,000.00<br>ரூபா 47,000.00<br>ரூபா 154,000.00<br>ரூபா 52,000.00<br>ரூபா 101,000.00<br>ரூபா 102,000.00<br>ரூபா 68,000.00<br>ரூபா 87,000.00<br>ரூபா 63,000.00<br>ரூபா 74,000.00<br>ரூபா 196,000.00 |
| 6. | SRS/F. 7824 | கொழும்பு கோட்டை மற்றும் மருதானை புகையிரத நிலையங்களுக்கு 450 பயணிகள் இருக்கைகளை வழங்கல் | ரூபா 5,500.00 | ரூபா 283,000.00 |

03. தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

04. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பது மற்றும் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2022.02.15 ஆம் திகதி தொடக்கம் 2022.03.08 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை வேலை நாட்களில் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

**பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),
புகையிரத பெறுகை உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.**

**தொலைபேசி இல.: 94 (11) 2438078/ 2436818
தொலைநகல் இல.: 94 (11) 2432044
மின்னஞ்சல்: srs.slr@gmail.com
இணையதளம்: www.railway.gov.lk**

05. வரிசை இல. 05 – SRS/F. 7820 மற்றும் வரிசை இல. 06 – SRS/F. 7824 இற்கான மேலதிக விபரங்களுக்கு கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பாதை மற்றும் பணிகள் உப திணைக்கள, தலைமை பொறியியலாளரை (பாதை மற்றும் பணிகள்) தொடர்பு கொள்ளவும்.

**அட்டவணை II**

| கோப்பு இல. | தகைமை தேவைகள் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பின் திகதி மற்றும் இடம் |
|---|---|---|
| SRS/F. 7807 | விலைமனுதாரர்கள் பொருந்தக்கூடிய துருப்பிடிக்காத உருக்கு புனைவு பணிகளில் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன. | இரத்மலானை, தலைமை இயந்திர பொறியியலாளரின் (CME) உப திணைக்களத்தில் 2022.02.22 ஆம் திகதி மு.ப. 10.30க்கு |
| SRS/F. 7810 | விலைமனுதாரர்கள் பொருந்தக்கூடிய துருப்பிடிக்காத உருக்கு புனைவு பணிகளில் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன. | இரத்மலானை, தலைமை இயந்திர பொறியியலாளரின் (CME) உப திணைக்களத்தில் 2022.02.22 ஆம் திகதி மு.ப. 10.30க்கு |
| SRS/F. 7812 | விலைமனுதாரர்கள் பயணிகள் இருக்கைகள் உட்பட ரயில் உள்ளக கூறுகள் உற்பத்தியில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு பொருந்தக்கூடிய வெகுஜன போக்குவரத்தில் இதனை ஒத்த அனுபவம் இருத்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன. | |
| SRS/F. 7813 | புதிய ISO 9001 தொடரின் பிரதிகள் அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட உருப்படியின் உற்பத்தியின் இணையான சர்வதேச சான்றிதழ்கள் மற்றும் பொருட்களை விநியோகித்ததன் செயல்திறன் சான்றிதழுடன் ஏனைய அமைப்புகளுக்கு கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் குறைந்தது 20,000 மின்விசிறிகளை வழங்கியதன் கடந்தகால பதிவுகள் உட்பட நிரந்தர காந்தம் கொண்ட, தூரிகை அற்ற, DC சுழலக்கூடிய புகையிரதத்தில் பயன்படுத்துவதற்கான ரயில் பெட்டி மின்விசிறிகளை வழங்குவதற்கு உற்பத்தியாளரின் திறன் மற்றும் முடியுமான தன்மையை நிரூபிக்கும் ஆவணம். விலைமனு ஆவணங்களில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன. | இரத்மலானை, தலைமை இயந்திர பொறியியலாளரின் (CME) உப திணைக்களத்தில் 2022.02.22 ஆம் திகதி மு.ப. 10.30க்கு |
| SRS/F. 7820 | • ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.<br>(i) தரம் C6 - கட்டிட நிர்மாணத்திற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) பதிவு செய்திருத்தல்.<br>(ii) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழை விலைமனுதாரர் வைத்திருத்தல் வேண்டும்.<br>• ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவன:<br>(i) கடந்த 05 ஆண்டுகளில் விலைமனுதாரர்களின் நிகர மதிப்பு சாதகமாக இருத்தல் வேண்டும்.<br>(ii) கடந்த 05 ஆண்டு காலத்தில் ஒரு பிரதான ஒப்பந்ததாரராக குறைந்தது இரு நிர்மாணத் திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். | இரத்மலானை, தலைமை இயந்திர பொறியியலாளரின் (CME) உப திணைக்களத்தில் 2022.02.22 ஆம் திகதி மு.ப. 10.30க்கு |
| SRS/F. 7824 | ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்;<br>(i) விலைமனுதாரர் செல்லுபடியான வர்த்தக பதிவு சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ii) விலைமனுதாரர் கடந்த 05 ஆண்டு காலத்தில் குறைந்தது 300 பயணிகள் இருக்கை மற்றும் அதனை ஒத்த உற்பத்திகளை உற்பத்தி செய்திருத்தல் வேண்டும்.<br>விலைமனு ஆவணங்களில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன. | |

06. அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணத்தை செலுத்தி 2022.02.15 ஆம் திகதி தொடக்கம் 2022.03.08 ஆம் திகதி வரை பி.ப. 3.00 வரையில் (இலங்கை நேரம்) பிரதி பொது முகாமையாளர் (பெறுகை), புகையிரத பெறுகை உப திணைக்களம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

07. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வங்கியினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

08. விலைமனுக்களை 2022.03.09 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு கோரப்படுகின்றனர். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

**தலைவர்,
திட்ட பெறுகைக்குழு,
புகையிரத பெறுகை உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.**

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.**

## இலங்கை-அவுஸ்திரேலியா 3ஆவது டி-20 இன்று:

# ஆரம்ப வரிசையைப் பலப்படுத்தி தொடர் வெற்றி வாய்ப்பை தக்கவைக்க இலங்கை அணி முயற்சி

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டி–20 போட்டி கென்பராவில் இன்று நடைபெறவுள்ளது. ஏற்கனவே முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வி அடைந்து தொடரில் 0–2 என பின்தங்கி இருக்கும் இலங்கை தொடர் தோல்வியை தவிர்க்க வேண்டுமானால் ஏஞ்சிய மூன்று போட்டிகளிலும் வெற்றி பெறுவது அவசியமாகும்.



குறிப்பாக இலங்கையின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பெத்தும் நிசங்கவின் உதவி கிடைத்தால் இலங்கை அணிக்கு நம்பிக்கையை தக்கவைத்துக்கொள்ள முடியும். நிசங்க முதல் போட்டியில் 36 ஓட்டங்களை பெற்றதோடு இரண்டாவது ஆட்டத்தில் 53 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் இரண்டு சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்களை விளாசினார்.

இதுவரை நடந்த போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் பலவீனத்தை தெளிவாக பார்க்க முடிந்தது. முதல் போட்டியில் மிட்சல் ஸ்டாக் தனது நான்கு ஓவர்களுக்கும் 44 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். அவருக்கு பதில் சேர்க்கப்பட்ட கேன் ரிச்சட்சன் இரண்டாவது போட்டியில் தனது நான்கு ஓவர்களுக்கும் 41 ஓட்டங்களை கொடுத்தார்.

இரு போட்டிகளிலும் அரம்பத்தில் வேகமாக ஓட்டங்கள் பெற்றபோதும் மத்திய வரிசை தடுமாற்றம் கண்டது. ஸ்டீவன் ஸ்மித் உபாதை காரணமாக எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகி இருப்பது மத்திய வரிசையில் மாற்றத்தை கொண்டுவர வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை சிறந்த முறையில் பந்துவீசியதோடு களத்தடுப்பிலும் ஈடுபட்டபோதும் ஜோஷ் ஹேசல்வுட் இலங்கை ஆரம்ப வரிசைக்கு நெருக்கடி கொடுத்தார். நிசங்க அபாரமாக துடுப்பெடுத்தாடிய போதும் மறுமுனையின் முதல் நால்வரும் வேகமாக ஆட முயன்று விக்கெட்டை பறிகொடுத்ததைத் தான் காண முடிந்தது.

இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி பிடியெடுப்பதில் பலவீனத்தை காட்டியதோடு கிளன் மெக்ஸ்வெல் இரண்டு பிடியெடுப்புகளை தவறவிட்டார். இலங்கை அணி தொடரில் பல ரன் அவுட் வாய்ப்புகளையும் தவறவிட்டது.

அரோன் பின்ச் அவுஸ்திரேலிய டி–20 அணியின் சிறந்த தலைவராக இருந்தபோதும் அவரது துடுப்பாட்டம் சோபை இழந்து காணப்படுகிறது. அவர் கடைசியாக ஆடிய 14 டி–20 சர்வதேச போட்டிகளில் ஒரே ஒரு அரைச்சதம் மாத்திரம் பெற்றிருப்பதோடு ஏழு முறை ஒற்றை இலக்கங்களையே பெற்றிருக்கிறார். எனவே, தனது ஆட்டத்தை மேம்படுத்தும் முயற்சியில் இன்று அவர் ஈடுபட போராடுவார்.

சரித் அசலங்க முதல் முறை அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் நிலையில் முதல் இரண்டு போட்டியில் அவரது ஆட்டத்தை விமர்சித்துக் கூறுவது நியாயமாக இருக்காது. என்றாலும் எஞ்சிய மூன்று போட்டிகளிலும் இலங்கை அணி வெல்ல வேண்டுமானால் அவர் தனது வழக்கமான ஆட்டத்திற்கு திரும்புவது அவசியமாகும். அவர் நடந்த டி–20 உலகக் கிண்ணப் போட்டியில் அபார ஆட்டத்தை வெளிக்காட்டி இருந்தார்.

என்றாலும் பந்து அதிகம் துள்ளும் மற்றும் வேகம் பெறும் அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் அவருக்கு சவாலாகவே உள்ளன. ஹேசில்வுட் மற்றும் பட் கம்மின்ஸ் வீசிய பெரும்பாலான பந்துகள் அவரது மட்டையின் மேற்பாகத்திலேயே பட்டது. எனவே ஆடுகளத்தில் இரு முனைகளுக்கு இடையே மாறி ஓட்டங்களை பெறுவது மாத்திரம் இன்றி பந்தை பௌண்டரிக்கு செலுத்தி அதிரடியாக ஆடுவதற்கான வழியையும் அவர் கண்டறிய வேண்டும்.

இன்றைய போட்டியில் அவுஸ்திரேலியா இரண்டு மாற்றங்களை செய்ய வாய்ப்பு உள்ளது. ஸ்மித்துக்கு பதில் மாற்று வீரர் ஒருவரை களமிறக்க வேண்டி இருப்பதோடு ஹேசில்வுட் அல்லது கம்மின்ஸுக்கு ஓய்வு வழங்க வாய்ப்பு உள்ளது. மொயிசஸ் அஹன்ரிக்ஸ் பெரும்பாலும் ஸ்மித்துக்கு பதில் களமிறங்க வாய்ப்பு உள்ளது. ஸ்டார்கிற்கு முதல் போட்டியில் ஓய்வு அளிக்கப்பட்ட நிலையில் அவர் அண்மைக்காலத்தில் சோபிக்கத் தவறி வருகிறார். அணியில் மாற்றம் ஒன்றை விரும்பினால் மற்றொரு வேகப்பந்து வீச்சாளராக இருக்கும் ஜை ரிச்சட்சனை இன்றைய போட்டியில் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது.

கொரோனா தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்கவுக்கு பதில் அணிக்கு திரும்ப வாய்ப்பு உள்ளது. இலங்கை அணியில் வேறு மாற்றங்கள் நிகழ வாய்ப்பு இல்லை. முதல் போட்டியில் சிறப்பாக பந்து வீசிய பினுர பெர்னாண்டோ கொரானா தொற்றுக்கு உள்ளாகி இருக்கும் நிலையில் இன்றைய போட்டியிலும் களமிறங்க வாய்ப்பு இல்லை.

இன்றைய போட்டி நடைபெறும் கென்பராவின் மனுகா ஓவல் மைதானத்தில் இதுவரை இரண்டு டி–20 சர்வதேச போட்டிகளே இடம்பெற்றுள்ளன. உள்ளூர் போட்டிகளில் இந்த மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருந்தபோதும் சர்வதேச போட்டியில் அதிக ஓட்டங்கள் பெறப்பட்டதில்லை. போட்டி நடைபெறுவதற்கு சாதகமான காலநிலையே அங்கு நிலவி வருகிறது.

இலங்கை அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கடைசியாக விளையாடிய எட்டு சர்வதேச போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்துள்ளது. இதில் ஆறு டி–20 போட்டிகள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் அடங்கும். அந்த அணிக்கு எதிராக இலங்கை கடைசியாக 2017 ஆம் ஆண்டு கீலோங்கில் இடம்பெற்ற டி–20 போட்டியிலேயே இலங்கை அணி வெற்றியீட்டியது.

# ஐ.சி.சி விதி: இலங்கைக்கு முதல் அணியாக தண்டனை

டி–20 போட்டிகளில் பந்து வீச தாமதிப்பது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் புதிய விதியின் கீழ் முதல் அணியாக இலங்கை தண்டிக்கப்பட்டுள்ளது.



இதனால் சிட்னியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டி–20 போட்டியில் அவுஸ்திரேலிய இன்னிங்ஸின் கடைசி ஓவரில் 30 யார்ட் வட்டத்திற்கு வெளியே நான்கு வீரர்கள் மாத்திரமே களத்தடுப்பில் ஈடுபட இலங்கை அணிக்கு அனுமதிக்கப்பட்டது.

பொதுவாக ஐந்து வீரர்களுக்கு பௌண்டரி எல்லையில் களத்தடுப்பில் ஈடுபட அனுமதி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய விதியின்படி அணிகள் இன்னிங்ஸ் ஆரம்பிக்கப்பட்ட 85 நிமிடங்களில் இறுதி ஓவர் ஆரம்பிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இலங்கை அணி இதனைச் செய்யாததால் பௌண்டரி எல்லையில் இருக்கும் ஒரு வீரரை 30 யார்ட் வட்டத்திற்குள் நிறுத்தும்படி அணித் தலைவர் தசுன் ஷானக்கவிடம் கேட்கப்பட்டது.

அந்த இறுதி ஓவரை வீசிய நுவன் துஷார 16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். அந்த ஓவரில் மத்திவ் வாடே லெக் திசையில் சிக்சர் மற்றும் பௌண்டரி ஒன்றை விளாசினார். ஏற்கனவே மகளிர் டி–20 போட்டிகளில் இந்த விதி அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக பந்துவீச தாமதிப்பதற்கு அணித்தலைவரை இடைநிறுத்துவது மற்றும் அபராதம் விதிப்பது போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையுடனான டி-20: ஸ்டீவன் ஸ்மித் விலகல்

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டி–20 போட்டியின்போது கீழே விழுந்ததில் மூளை அதிர்ச்சிக்கு உள்ளான அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் ஸ்டீவன் ஸ்மித் இலங்கைக்கு எதிரான எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்.




சிட்னியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியின் பரபரப்பான இறுதி ஓவரில் சிக்ஸர் ஒன்றை தடுக்க பாய்ந்தபோது கீழே விழுந்ததிலேயே அவரது தலை பட்டு உபாதைக்கு உள்ளானதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது.

அடுத்த சில நாட்களுக்கு அவர் குறைந்த அளவான மூளை அதிர்ச்சி ஒழுங்கு முறையின் கீழ் வைக்கப்படுவார் என்றும் ஒரு வாரத்திற்குள் அவர் முழுமையான குணமடைவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இலங்கைக்கு எதிரான கன்பரா மற்றும் மெல்போர்னில் இடம்பெறவிருக்கு எஞ்சிய மூன்று டி–20 போட்டிகளிலும் ஸ்மித் பங்கேற்க மாட்டார். எனினும் தற்போதைய கட்டத்தில் அவருக்கு பதில் அணியில் மாற்று வீரர் ஒருவரை இணைக்கும் திட்டம் இல்லை என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் ஸ்மித் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் விளையாடுவதற்கு பூரண உடற்தகுதியுடன் இருப்பார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை – அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான டி–20 தொடரில், அவுஸ்திரேலிய அணி 2–0 என முன்னிலை அடைந்திருப்பதோடு, தொடரின் மூன்றாவது போட்டி இன்று (15) கென்பர்ரா வில் நடைபெறவுள்ளது.

# ஐ.பி.எல்லில் ஐந்து இலங்கை வீரர்களுக்கு இடம்



பெங்களூரில் இடம்பெற்ற இந்திய பிரிமியர் லீக் வீரர்கள் ஏலத்தில் இலங்கையின் ஐந்து வீரர்கள் வாங்கப்பட்டுள்ளனர்.

இந்த வீரர்கள் ஏலத்தின் இறுதி நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை நான்கு இலங்கை வீரர்கள் விலைபோயினர். முன்னதாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற முதல் நாள் ஏலத்தில் சகலதுறை சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவை ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி இந்திய நாணயப்படி 10.75 கோடி ரூபாவுக்கு வாங்கியது. இது இலங்கை வீரர் ஒருவருக்கு ஐ.பி.எல் தொடரில் நிர்ணயிக்கப்பட்ட அதிக விலையாக இருந்தது.

இந்நிலையில் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீரவை லக்னோ சுப்பர் ஜயன்ட் அணி 2 கோடி ரூபாவுக்கு வாங்கியது. இலங்கை சுழற்பந்துவீச்சாளர் மஹீஷ் தீக்சன சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு 70 லட்சம் ரூபாவுக்கு விலைபோனதோடு சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்னவை 50 லட்சம் ரூபாவுக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வாங்கியது.

இறுதியாக இடது கை துடுப்பாட்ட வீரர் பானுக்க ராஜபக்ஷவை 50 லட்சம் ரூபாவுக்கு பஞ்சாப் கிங்ஸ் வாங்கியது.

## ஐ.பி.எல் ஏலத்தில் 204 வீரர்கள் விலைபோயினர்

2022 ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் 10 அணிகளும் மொத்தம் 204 வீரர்களை வாங்கியுள்ளது. இதில் மொத்தம் 67 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.




கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களில் இடம்பெற்ற ஏலத்தில் 600 வீரர்கள் இடம்பெற்றனர். எனினும் பெரும்பாலான வீரர்கள் ஏலம் எடுக்கப்படவில்லை. வீரர்களை எடுப்பதற்கு இந்திய நாணயப்படி மொத்தம் 551 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக இஷான் கிஷனை மும்பை அணி 15 கோடியே 25 லட்சம் கொடுத்து வாங்கியது. அதிக விலைபோன வெளிநாட்டு வீரராக இங்கிலாந்து சகலதுறை வீரர் லியாம் லிவிங்டன் பதிவானார். அவரை பஞ்சாப் கிங்ஸ் அணி 11.5 கோடி ரூபாவுக்கு வாங்கியது.

இந்த நிலையில், இந்த ஏலத்தில் சில நட்சத்திர வீரர்கள் ஏலம் போகவில்லை. இந்திய வீரர் ரெய்னா, அவுஸ்திரேலிய வீரர் ஸ்மித், பங்களாதேஷ் வீரர் ஷகிபுல் ஹசன், இங்கிலாந்து வீரர் ஆதில் ரஷித், தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தாஹிர் இவர்களில் அடங்குகின்றனர்.

இதில் ஐந்து வீரர்கள் முந்தைய ஐ.பி.எல் சம்பளத்தை 2000 அல்லது அதற்கு மேல் வீதத்தில் அதிகரித்துள்ளனர். இதில் நான்கு வீரர்கள் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை சேர்ந்தவர்கள். இதில் ஹார்ஷா படேல் 2021 இல் 20 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டதோடு தற்போது அவர் 10.75 கோடி ரூபாவுக்கு விலைபோயுள்ளார். இது அவரது முந்தைய சம்பளத்தை விட 53.75 மடங்காகும்.

இம்முறை ஏலத்தில் பந்துவீச்சாளர்கள் மற்றும் சகலதுறை வீரர்களுக்கே அதிக கேள்வி இருந்துள்ளது. விலைபோன 204 வீரர்களில் 142 வீரர்கள் இந்த வரிசையில் உள்ளனர்.

## நெசனல் சுப்பர் லீக் தொடர்: இறுதிக்கு நுழைய மும்முனை போட்டி

இலங்கையின் பிரதான உள்நாட்டு ஒருநாள் போட்டித் தொடரான நெசனல் சுப்பர் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேற ஜெப்னா, கோல் மற்றும் கொலம்போ அணிகளுக்கு இடையே மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது.

இதுவரை ஐந்து போட்டிகளில் வென்று 26 புள்ளிகளைப் பெற்றிருக்கும் கெண்டி அணி வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. எனினும் அந்த அணியுடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ள அணி வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இரு போட்டிகளின் முடிவின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

அன்றைய தினம் கெண்டி மற்றும் கோல் அணிகள் பல்லேகல மைதானத்தில் மோதவிருப்பதோடு ஜெப்னா மற்றும் கொலம்போ அணிகள் ரங்கிரி தம்புள்ளை மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்தப் போட்டிகளில் ஜெப்னா அணி வெற்றிபெற்றால் அடுத்த போட்டியின் முடிவு என்னவாக இருந்தபோதும் அந்த அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.



எனினும் தற்போது தம்புள்ளையில் தொடர்ந்து மழை பெய்து வருவது சிக்கலுக்கு காரணமாகும். இந்த நிலையால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த தம்புள்ளை மற்றும் கண்டிக்கு இடையிலான போட்டி ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. இந்த நிலை 16 ஆம் திகதி போட்டியிலும் ஏற்பட்டால் நிலைமை சிக்கலாகிவிடும். இதனால் இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்படும் நிலையில் ஜெப்னா அணியின் புள்ளிகள் 20 ஆக அதிகரிக்கும்.

அதன்படி அன்றைய தினம் நடைபெறும் கோல் மற்றும் கெண்டி அணிகளுக்கு இடையிலான போட்டியில் கோல் வெற்றி பெற்றால் போனஸ் புள்ளி இன்றியே அந்த அணி 21 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறிவிடும். இதில் கொலம்போ அணிக்கு குறுகிய வாய்ப்பு ஒன்று உள்ளது அந்த அணி தனது இறுதிப் போட்டியில் வெற்றியீட்டி கோல் மற்றும் கண்டி அணிகளுக்கு இடையிலான போட்டியில் கெண்டி வெற்றி பெற்றால் இறுதிப் போட்டிக்கு நுழைய முடியும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.